Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

"Registered in the Department of Posts of Sri Lanka under No. "QD/109/News/2010"

பொழிவு - 15
குவிப்பு - 04
பக்கங்கள்- 16
விலை ரூபா 30.00
ஏப்ரல் 2010
(ISSN 1800-2641)

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ Fax No - 023-2251161, E. Mail : sdmlogu@gmail.com, benoalexander@yagoo.com

# உயிர்ப்புவிழா சிறப்புப் பொழிவு

## கல்வாரி திருத்தலம் நோக்கிய பாத யாத்திரை
## ஆயிரக்கணக்கான இறைமக்கள்
### பாத யாத்திரையில் கலந்து கொண்டிருந்தனர்

மன்னார் மறைமாவட்டத்தால் வருடா வருடம் முன்னெடுக்கப்படும் தவக்கால பாதயாத்திரை கடந்த பங்குனி மாதம் 10,11,12ம் திகதிகளை உள்ளடக்கிய 3 நாட்கள் இடம் பெற்றது. மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்திலிருந்து தொடங்கிய இப்பாத யாத்திரையில் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் கலந்து கொண்டனர். இளைஞர், யுவதிகள், பெரியோர் என பல பங்குகளிலிருந்தும் ஏறக்குறைய 1500 பேர் பாத யாத்திரை மேற்கொண்டிருந்தனர். 10.03.2010 தொடங்கிய இப்பாத யாத்திரை 12.02.2010 வெள்ளிக்கிழமை பெரிய கோமரசன் குளப்பங்கின் கல்வாரி திருத்தலத்தை சென்றடைந்தது. அன்று காலை 9.30 மணிக்கு திருச்சிலுவைப்பாதையும் அதனைத் தொடர்ந்து மறைமாவட்ட




குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை தலைமையில் கூட்டுத்திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது. பெருந்தொகையில் இறைமக்கள் கல்வாரி திருத்தலத்தை நிரப்பியிருந்தனர்.

## எழுபது அகவையில் எமது ஆயர்
## மனம் நிறைந்து வாழ்த்துகிறது மறைமாவட்டம்



அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய எம் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி.வந்தனைக்குரிய இராயப்பு யோசேப்பு ஆண்டகை தனது பிறப்பின் 70வது வயதினை 16.04.2010 அன்று காண்கிறார். மறைமாவட்ட மேய்ப்புப் பணியோடு கூடவே தேசத்தின் பாதிப்புறும் மனிதர் ஒவ்வொருவரின் முழு மனித விடுதலைக்காய் அயராது உழைத்து வரும் ஆயர் அவர்களை வாழ்த்துவதோடு பல்லாண்டு வாழ செபித்துநிற்கின்றோம்.




## புனித அந்தோனியாரின் அழியாத திருப்பாகம் காண
## அணிதிரண்ட இறைமக்கள்
### கண்ணீர் மல்க வணக்கம் செலுத்தி வேண்டுதல் புரிந்தனர் பக்தர்கள்

பதுவைப் புனிதர் அந்தோனியாரின் 779 ஆண்டுகளாக அழியாமல் இருக்கும் அற்புத இதயத்தின் திருப்பாகம் இலங்கை கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் 150ம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இத்தாலியிலிருந்து இலங்கை மண்ணுக்கு கொணரப்பட்டு பல மறைமாவட்டங்களுக்கு எடுத்து செல்லப்பட்டிருந்தது. எமது மன்னார் மறைமாவட்டத்திற்கு கடந்த 14.03.2010 அன்று காலை 9.00மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து உலங்கு வானூர்தியில் கொண்டுவரப்பட்ட திருப்பாகம் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர்சோசை அவர்களால் பொறுப் பேற்கப்பட்டது. அலங்கரிக்கப்பட்ட திறந்த வாகனத்தில் பொன்னிறமான புனித அந்தோனியாரின் சுரூபத்தின் இதய பகுதியில் பொதியப்பட்ட திருப்பாகம் நூற்றுக்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள் அணிவகுப்பில் மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தை நோக்கி எடுத்துவரப்பட்டது.

பேராலய தியான மண்டபத்தில் கண்ணாடிப் பேழையுள் வைக்கப்பட்ட புனித அந்தோனியாரின் திருச்சுரூப திருப்பாகத்தை தரிசித்து வணக்கம் செலுத்த பல பங்குகளிலிருந்து அணிதிரண்டு வந்திருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் நீண்டவரி சையில் மணிக்கணக்காக காத்திருந்து திருப்பாகத்திற்கு வணக்கம் செலுத்தினர்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)



## குருத்துவ திருப்பொழிவு
### குருக்கள் ஆண்டில் மன்னார் மறைமாவட்ட மண்ணிலிருந்து
### நான்கு புதிய குருக்கள்



அருட்சகோதரன் அன்ரன் தவராஜா | அருட்சகோதரன் எமில் எழில் ராஜ் | அருட்சகோதரன் சத்தியசீலன் | அருட்சகோதரன் தேவராஜன் பீரிஸ்

குருக்கள் ஆண்டிலே மன்னார் மறைமாவட்ட மண்ணிலிருந்து நான்கு புதிய குருக்கள் பணிக்களத்தில் பாதம் பதிக்கின்றனர். மன்னார் மறைமாவட்டத்தை சேர்ந்த இரண்டு அருட்சகோதரர்களும் அமலமரித்தியாகிகள் சபையின் யாழ்மாகாணத்தைச் சேர்ந்த அருட்சகோதரரும் கிளரேசியன் சபையைச் சேர்ந்த அருட்சகோதரரும் எதிர்வரும் ஏப்ரல் 16ம் திகதி மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களினால் மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட உள்ளனர்.

பணிக்களத்தில் காலடி பதிக்கும் இவர்களை இறைமக்கள் சார்பாக மன்னா மிகுந்த மகிழ்ச்சியோடு இறையாசீர் வேண்டி, வாழ்த்தி வரவேற்கின்றது.

இவர்களைப் பற்றிய விரிவான விளக்கத்தை 6ம் பக்கத்தில் பார்க்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### ஆசிரியர் குழு பகர்வு

# உயிர்த்தானம் உத்தானம்

*இஸ்ராயேல் எனும் சிறிய இனம் எகிப்திய அடிமைத்தனத்திற்குற்பட்டு வாடி வதங்கி வாழ்விழந்த நிலையிலே தனது இருப்பை தக்கவைத்துக் கொள்ள விடுதலை தேசம் நோக்கி மோசே தலைமையில் பாஸ்கா பயணம் தொடர்ந்தது. அப்பயணத்தின் வழியும் வழிமுறையும் இலகுவானதொன்றல்ல. நடைப்பயணத்தில் நாற்பது நாட்களுக்கு குறைவான நாட்களில் சென்றடையக் கூடிய தூரத்தை கடக்க நாற்பது வருடங்கள் எடுத்தது. அப்பயணத்தில் இஸ்ராயேல் இனம் சந்தித்த வேதனைகள், இடையூறுகள் பலப்பல அப்பயணத்தில் காலநிலையால் பிரச்சனை காரியமாற்றுவதில் பிரச்சனை, பசி, பட்டினி, தாகம் பயணத்தில் சந்தித்த பகைவர்களை போராடி வெல்ல வேண்டியிருந்தது. மோசேயின் தலைமைக்கெதிராய் முணுமுணுப்புகள், கலகங்கள், கைகலப்புக்கள், துரோகத்தனங்கள். வழியிலேயே பலர் மாண்டு போனார்கள். பாலும் தேனும் பொழியும் கானான் தேசத்தை காணாது பாலை நிலத்தில் புதையுண்டு போனார்கள். அப்பயணத்தில் பல்வேறு ஏற்ற இறக்கங்கள் பல்வேறு அணுகுமுறைகள், பல்வேறு விவாதங்கள், பலப்பல விடைகள் இறுதியில் இஸ்ரயேல் கனவு நனவாகியது. வீழ்ந்தவர் போக இருந்தவர் இலக்கடைந்தனர். மாண்டவர் போக மறுதலைமுறையினர் உரிமை மண் அடைந்தனர். அவ்விடுதலைப் பயணத்தின் இயக்காற்று சக்தி உந்து விசை, அச்சாணி 'யாவேயாகிய ஆண்டவன்' அது ஆண்டவரின் பாஸ்கா இஸ்ராயேல் இனத்தின் விடுதலைக்கான இறைவனின் திட்டம்.*

*வரலாற்று ஓட்டத்தில் முழு மனித விடுதலைக்காக இறைமகன் இயேசு பாஸ்கா பலி நிகழ்த்தினார். தன்னையே தாரைவார்த்தார் சிலுவையிலே விதைக்கப்பட்டார். தரணிக்காய் தற்கொடையானார். உயிர்த்தானமாகி இறுதியில் உத்தானமானார். உரிமை வாழ்வை பெற்றுத்தந்தார். சிலுவையின் விதை எம் சீவியத்தில் விருட்சமாகி நிழல் தருகின்றது.*

*ஈழத்தமிழினம் தன் இருப்பை தக்கவைக்க விடுதலை நோக்கி பயணம் தொடங்கி ஆண்டுகள் பலவாகிவிட்டன. இப்பயணத்தில் துரோகங்கள், குரோதங்கள், சகோதர சண்டைகள், காட்டி கொடுப்புகள், அடக்குபவனின் அடிவருடும் அவலங்கள் அதிகமோ அதிகம். இன்று அபிவிருத்தி பேசி அலங்காரம் செய்கிறார்கள். தம் பை நிரப்பி பொய் பேசுகிறார்கள். சிறைப்பட்ட பறவைக்கு தங்கத்தட்டில் தாராளமாய் வழங்கப்படுவதற்கு பெயர் வசந்த வாழ்வா?. சிறைக் கூண்டின் கொள்ளளவை பெரிதாக்கி இரும்புக் கம்பியை கழற்றி தங்கக்கம்பி பொருத்தி இயல்பு வாழ்வு, என்கிறார்கள். வாக்கை பிரித்து வேட்டுவைக்கிறார்கள். ஏமாறும் தமிழினமே! நீ எப்போது விழிப்பாய்; சாம்பலில் நின்று சரித்திரம் படைப்பாய்! ஒன்றுபடு உண்டு வாழ்வு*

*இயக்காற்று சக்தியாய் இறைவனுக்கு இடம் கொடு. பலர் உயிர்த்தானத்தை உத்தானமாக்க ஓரணியாய் எழுவோம்.*



# வாசகர் எண்ணங்கள்

## அன்பு உள்ளம்

அன்புடன் இறைவனின் நற்செய்திகளையும் எம் திருச்சபையின் வளர்ச்சிப் போக்கினையும் அதன் புனிதப் பணிகளையும் சமூகம் சார்ந்த நல்வழிப்படுத்தும் இறைவசனங்களையும் கதைகள் மூலமும் கவிதைகள் மூலமும் கட்டுரைகள் மூலமும் அலங்கரிக்கப் பெற்று எம்மிடம் சுமந்து வரும் என் இனிய இறை ஒளியாம் மன்னாவே! உன் பணி மேலும் சிறக்க வேண்டும் முதன் முறையே உன்னை என்னுள் புகுத்தி என்னை உன் வாசகனாக்கியது மட்டும் அன்றி உன்னுடன் உன் கரம் பற்றி நானும் உன் வளர்ச்சிக்கு துணைநடை போட வேண்டும் என்ற ஆர்வத்தை என்னுள் தந்துவிட்டாய்.

என் இனிய மன்னாவே! உன்னை அழகிய குழந்தையாக பிரசவிக்க அயராது உழைக்கும் என் இனிய இறை இயேசுவின் சகோதர சகோதரிகளுக்கு என் சிரம் தாழ்த்திய நன்றிகள் பல பல. உன் பெருமை பற்றி நிறைய எழுதலாம் அன்பு மன்னாவே! உன் ஒவ்வொரு பிறப்பினையும் நானும் கண்டு மகிழும் சந்தர்ப்பம் எவ்வாறு எனக்குக் கிடைக்குமோ தெரியவில்லை இருந்தும் நிச்சயம் உன்னை காண நான் பல வழிகளில் முயற்சிப்பேன். நீ என் கரம் தவறாது தவள என்னாலான முயற்சிகளை செய்வேன்.

அ. கனிஸ்ரன் (வதனன்)

## மன்னாவே நீ என் மன்னவனே!

மனதை வருடிச் செல்லும்
இளந்தென்றலாய்
மாதமொரு முறை மதிமுகமாய் மலர்ந்து
மகிழ்வூட்டும் மலராய்
உள்ளத்தை கொள்ளையடித்தவனே!
தேன் சிந்தும் உன் பூவிதழில்
பனித்துளியாய் மின்னும் ஆக்கங்கள்
பசுமரத்து ஆணி போல
பதிந்துவிட்டது என் மனதில்
வசந்த கால வனிதையே!
கசந்த உள்ளத்துடன் வாழ்ந்த நான்
உறுதியான தீர்மானம் எடுத்துவிட்டேன்
சலசல என ஸ்வரமிசைக்கும் கங்கை நதிக்கும்
கலகலவென கண் சிமிட்டும் விண்மீன்களுக்கும் - நான்
ரசிகையல்ல – காலமெல்லாம்
உன் காகித மடியில் கண்ணயர வேண்டும்
ஆயுள்கைதியாய்.



அ. மேரி கொண்செப்ரா - மடுக்கோவில், மடு.

# மன்னார் மறைமாவட்ட குருக்களின் பணிமாற்றங்கள்

* அருட்பணி M.P. பீற்றர் மனோகரன் - பங்குத்தந்தை, பள்ளிமுனை.
* அருட்பணி S.F. றெஜினோல்ட் - பங்குத்தந்தை, அரிப்பு - சிலாபத்துறை.
* அருட்பணி S. மாக்கஸ் - பங்குத்தந்தை, அளவக்கை
* அருட்பணி S. ஜெயபாலன் - பங்குத்தந்தை, ஆட்காட்டிவெளி
* அருட்பணி F. யூட் ஞானராஜ் குரூஸ் (நேரு) - பங்குத்தந்தை, தோட்டவெளி
* அருட்பணி E. செபமாலை – பங்குத்தந்தை, விடத்தல்தீவு
* அருட்பணி S. லக்கோன்ஸ் பிகிறாடோ – பங்குத்தந்தை, அடம்பன்
* அருட்பணி A. ஆரோக்கியம் - பங்குத்தந்தை, இலுப்பைக்குளம்
* அருட்பணி K. சுகுணராஜ் குரூஸ் - பங்குத்தந்தை, தேவன்பிட்டி
* அருட்பணி S. நெவின்ஸ் யோகராஜ் பீரிஸ் - உதவி பங்குத்தந்தை, நானாட்டான்
* அருட்பணி A. யூட்ஸ் முரளிதரன் - உதவி பங்குத்தந்தை, பண்டிவிரிச்சான், தட்சனாமருதமடு
* அருட்பணி J.J. ஜெகானந்தன் - உதவிப் பங்குத்தந்தை, வவுனியா
* அருட்பணி M. செல்வநாதன் பீரிஸ் - உதவிப் பங்குத்தந்தை, கற்கிடந்தகுளம்
* அருட்பணி A.C. ரூபன் பெர்னாண்டோ – உதவிப் பங்குத்தந்தை, ஓமந்தை
* அருட்பணி A.மரியதாசன் குரூஸ் (றொக்சன்) – உதவிப்பங்குத்தந்தை, வங்காலை
* அருட்பணி A. ரஜனிகாந்த் - உதவி பங்குத்தந்தை, ஆட்காட்டிவெளி
* அருட்பணி S. பிரான்சிஸ் அசிசி யூட் - பதுளை மறைமாவட்டம்
* அருட்பணி P. அருள்நாதன் அ.ம.தி - அன்னை திரேசா அன்புச்சகோதரிகளின் ஆன்மீக இயக்குனர்- பம்பைமடு
* அருட்பணி இராயப்பு - அதிபர், புனித வளனார் மாணவர் இல்லம், மன்னார்.
* அருட்பணி பா. கிறிஸ்து நேசரெட்ணம் - உயர்கல்வி யாழ் பல்கலைக்கழகம்
* அருட்பணி A. யூட் குரூஸ் - இயக்குனர், ஆன்மீக மையம், தோட்டவெளி
* அருட்பணி M. ஜெயபாலன் - மறைக்கல்வி பணியுடன் பாப்பிறை மறைபரப்புதல் சபை இயக்குனர்
* அருட்பணி A. அலெக்சாண்டர் சில்வா (பெனோ) - சமூக தொடர்பு அருட்பணியுடன் மன்னா பத்திரிகை முகாமையாளர்
* அருட்பணி S. டக்ளஸ் மில்ரன் லோகு - அன்பிய பணியுடன், மன்னா பத்திரிகை பதிப்பாசிரியர்
* அருட்பணி A. லக்ஸ்ரன் டி சில்வா - உதவி இயக்குனர் கறிற்றாஸ், வாழ்வுதயம்

## கருத்துக் களம்

கருத்துக்களப் பகுதியில் இடம்பெறும் கருத்துக்கள் மன்னாவின் கருத்துக்கள் அல்ல. கருத்துக்களுக்கு உரியவர்கள் உரைத்தவர்களே! நீங்களும் உங்கள் கருத்துகளை ஆதரித்தோ மறுத்தோ எழுதலாம். (பதிப்பாசிரியர்)

# சத்திய வேதமும் சரஸ்வதிபடமும்

**அந்தோனிப்பிள்ளை ஜெயசிங்கம், பாலைக்குழி, அடம்பன்**

சத்திய வேதத்திற்காக தங்களின் இன்னுயிர்களை அர்ப்பணித்து உயிர்த்தியாகம் செய்து உதிரத்தை சிந்தி பரிசுத்த பயிரைவளர்த்த மன்னார் மண்ணில் பல கத்தோலிக்கர் வதியும் இல்லங்களிலும் வியாபார நிலையங்களிலும் தொழிற் சாலைகளிலும் சரஸ்வதிபடத்தைவைத்து பூமாலை போட்டு பூஜிக்கிறார்கள்.

புனித மரியாள் படத்திற்கு அருகிலும் சிலுவை சுமந்த திருமகனின் படத்திற்குப் பக்கத்திலும் ஆறுகைகொண்ட அவதாரத்தின் உருவப்படத்தை வைத்து வணக்குவதைப் பார்க்க கவலை உண்டாகிறது. ஏன் என்று கேட்டால் கண்மூடித்தனமான காரணம் சொல்லப்படுகிறது. கல்விக்குத்தெய்வமாம் சரஸ்வதி, துர்க்கையின் படத்தை வைத்தால் முகட்டைப்பிச்சுக்கொண்டு பணம் சொரியுமாம். அப்படி என்றால் வெளிநாடுகளுக்குச் சென்று காலையும், மாலையும் கடும் குளிரிலும் வெயிலும் கை, கால் நின்று கடும் வேலை செய்ய வேண்டிய அவசியமில்லை. படத்தை வைத்தால் போதுமே. ஒரு காலத்தில் அருட்தந்தையர்கள் கத்தோலிக்கர் மத்தியில் ஏற்படுகின்ற கண் மூடிப்பழக்கங்கள் மண்மூடிப் போவதற்கு பிரசங்கத்தில் நல் அறிவுரைகள் சொன்னார்கள். ஆனால் தற்பொழுது அது குறைவாகவே உள்ளது. மறைந்த யாழ் அதிமேற்றானியார் தியோகுப்பிள்ளை எழுதிய நூலில் எல்லா மதத்திற்கும் மதிப்பளிப்போம். ஆனால் எம்மதமும் சம்மதம் என குருட்டுக் கருத்துக்களை நியாயப்படுத்த முடியாது என்றார் மற்ற மதங்களைப் புண்படுத்துவதாகவோ, புரட்சிசெய்வதாகவோ, ஆணவம் பேசுவதாகவோ நாத்திகனாகவோ என்னை நினைக்காது கேட்டு கிறிஸ்தவ விசுவாசத்தை பேண முன் வாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்ட செய்திகள்

## மறைமாவட்டம் திரும்பினார் அருட்பணி றெஜினோல்ட்



கடந்த மூன்று வருடங்களாக அமெரிக்காவில் உளவியல் துறையில் உயர் படிப்பினை மேற்கொண்டதோடு மேய்ப்புப்பணியையும் ஆற்றி வந்த அருட்பணி றெஜினோல்ட் அடிகள் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்து கொண்டு மன்னார் மறைமாவட்டம் வந்தடைந்துள்ளார். இவரை அன்போடு வரவேற்பதோடு புதிய பணித்தளத்தில் நற்பணியாற்ற வாழ்த்துகிறோம்.

## பேராலயப்பங்கின் திருப்பாடுகளின் வரலாற்று ஆற்றுகை

மன்னார் புனித செபஸ்ரியார் பேராலய பங்கு சமூகத்தினால் இயேசுவின் திருப்பாடுகளின் வரலாற்று ஆற்றுகை "கல்வாரியில் கருணை மழை" எனும் பெயரில் கடந்த 28.03.2010 ஞாயிற்றுக்கிழமை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மைதானத்தில் அரங்கேற்றப்பட்டது. பேராலயத்தின் உதவிப் பங்குத்தந்தையர்கள் உட்பட பெருந் தொகையான கலைஞர்களின் திறமையான நடிப்பாற்றலால் இத்திருப்பாடுகளின் திருக்காட்சி சிறப்புப்பெற்றது. பேராலயப் பங்குத்தந்தை S.K. தேவராஜா அடிகளாரின் ஏற்பாட்டிலும் N.M. பாலச்சந்திரனின் கதை, வசன, இசை, நெறியாள்கையிலும் இவ் வரலாற்று ஆற்றுகை சிறப்பாக மேடையேற்றப்பட்டது.

## கத்தோலிக்க புதுவாழ்வு செப குழுவினரால் தவக்காலத் தியானங்கள்

தமிழ் நாட்டின் பாளையங்கோட்டை மறைமாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க புதுவாழ்வு செபக்குழுவினரால் மன்னார் மறைமாவட்டத்தின் பல பங்கும் மக்களுக்கும், அமைப்புக்களுக்கும் தவக்காலத் தியானங்கள் பங்குனி மாதம் முழுவதும் கொடுக்கப்பட்டன. இத்தியானங்களில் பல்வேறு பங்குகளின் பங்குச்சபை உறுப்பினர்கள் பங்கு மக்கள் பாடசாலை மாணவர்கள் பங்கேற்று பயன்பெற்றனர். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்கும் மறையாசிரியர்களுக்கும், இளைஞர் யுவதிகளுக்கும் வெவ்வேறு தினங்களில் மூன்று நாட்கள் வதிவிட தவக்காலத்தியானங்கள் இச்செபக்குழுவினரால் மருதமடுத் திருப்பதியில் வைக்கப்பட்டன. அன்பிய தன்னார்வ பணியாளர்களுக்கு அரைநாள் தியானம் தோட்டவெளி வேதசாட்சிகள் இராக்கினி ஆலயத்தில் இடம்பெற்றது. இக்கத்தோலிக்க புதுவாழ்வு செபக்குழுவில் ஆன்மீக குருவாக தூத்துக்குடி மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. ஜெரோசின் அவர்களும், பாளையங்கோட்டை மறைமாவட்டத்திலிருந்து சகோதரர் இருதயசாமி தலைமையில் ஐந்து சகோதரர்களும் உள்ளடங்கி தியானங்களை வழங்கியிருந்தனர். இந்நிகழ்வுகள் அனைத்தையும் மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி ம.ஜெயபாலன் அவர்கள் ஒழுங்கு செய்து நெறிப்படுத்தியிருந்தார்.

## சமூக தொடர்பு அருட்பணி மையம் வழங்கிய திருக்காட்சி

மன்னார் மறைமாவட்ட சமூக தொடர்பு அருட்பணி மையத்தின் நெறியாள்கையில் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பின் திருக்காட்சிகள் "உயிர்ப்பின் நம்பிக்கையில்...." எனும் தலைப்பில் தவக்கால இறுதி வாரத்தில் மறைமாவட்டத்தின் நான்கு மறைக்கோட்டங்களிலும் சிறப்பாக நடந்தேறின. வவுனியா மறைக்கோட்டமட்டத்தில் வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலய வளாகத்தில் மார்ச் 21ம் திகதியிலும், மன்னார் மறைக்கோட்ட மட்டத்தில் தோட்டவெளி வேதசாட்சிகள் ஆலய வளாகத்தில் மார்ச் 23ம் திகதியிலும், முருங்கன் மறைக்கோட்ட மட்டத்தில் முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலய வளாகத்தில் மார்ச் 25ம் திகதியிலும், மடு மறைக்கோட்ட மட்டத்தில் ஆள்காட்டிவெளி புனித சவேரியார் ஆலய வளாகத்தில் மார்ச் 26ம் திகதியிலும் இத்திருக்காட்சி மேடையேற்றப்பட்டன.





*வேப்பங்குளத்தில் மேடையேற்றப்பட்ட திருப்பாடுகளின் காட்சிகள்*

## மன்னார் மண்ணில் பணிபுரிய அமல உற்பவம் கன்னியர் சபை

அமல உற்பவம் கன்னியர் சபை (Sisters of Mary Immaculate) யைச் சேர்ந்த நான்கு அருட்சகோதரிகள் மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்ற வருகை தந்துள்ளனர். கடந்த 01.03.2010 திங்கட்கிழமையிலிருந்து பேசாலையில் வயோதிபர் இல்லம் இயங்கிய பணி மனையில் கன்னியர் மடம் திறந்து பணிபுரிய தங்கியுள்ளனர். நடந்தேறிய கொடிய போரினால் பாதிப்புற்ற சிறுமிகளுக்கான விடுதியை இயக்குவது இவர்களின் தலையான பணியாக அமைய இருக்கின்றது. இத்தாலியை தலைமைப்பீடமாக கொண்டிருக்கும் இத்துறவற சபை இலங்கையில் எட்டு துறவற மடங்களை கொண்டிருப்பதுடன் மன்னாரின் பேசாலையில் திறக்கப்பட்டிருக்கும் இவர்களின் மடம் ஒன்பதாவதான மடமாக அமைந்துள்ளது. இவ்வருட்சகோதரிகளின் நற்பணி சிறக்க வாழ்த்தி வரவேற்கிறோம்.

## கறிற்றாஸ் வாழ்வுதயம்

## கறிற்றாஸ் – வாழ்வுயத்தில மற்றுமொரு புதிய செயற்திட்ட பிரிவு ஆரம்பம

2010ம் ஆண்டு கறிற்றாஸ் செடேக் (SEDEC) இன் தேசிய திட்டத்திற்கமைவாக "உள்ளார்ந்த மனித அபிவிருத்தி ஊடாக சமூகமட்டத்தில் மக்களை வலுவூட்டும் (Integral Human Development through Community Empowerment) செயற்திட்டம் நடைமுறைப்ப - டுத்தப்பட்டுள்ளது. ஒன்றிணைந்த மனித அபிவிருத்தி, அனர்த்த முன் ஆயத்த நடவடிக்கை, ஆற்றுப்படுத்தல், சமாதான செயற்பாடு ஆகிய பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இச்செயற்பாடு முன்னெடுக்கப்படும். இச் செயற்திட்டம் வவுனியா, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கி பரவலாக்கப்படவுள்ளது. முழு மனித அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாடுடைய கிராமங்களாக இச்செயற்பாடு முன்னெடுக்கப் படும் கிராமங்களை மாற்றுவதே இதன் நோக்கமாக அமைகின்றது.

## வாழ்வுதயத்தின் உதவிக்கரப்பிரிவு ஆற்றும் இன மத குல பேதமற்ற மனிதநேயப்பணிகள

கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் உதவிக்கரப் பிரிவானது 2001ம் ஆண்டிலிருந்து இற்றைவரை இயங்கி வருகின்றது. இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை உடல்ரீதியாக பாதிக்கப்பட்ட 5317பேர் பயன்பெற்றுள்ளனர்.

அண்மைக்காலங்களில் எம்நாட்டில் போர் தீவிரம் அடைந்து பல்லாயிரம் மக்கள் பாதிப்புற்று இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த பொழுதிலும் தற்போதைய மீள்குடியேற்ற காலப்பகுதியில் பயனாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது. கடந்த மூன்று மாதங்களில் அனேகமானவர்களுக்கு செயற்கைக்கால் பொருத்துதல், விசேட பாதணி, கை, கால், கழுத்து போன்றவற்றிற்கான பட்டிகள், சக்கர நாற்காலிகள், மூன்று சில்லு சைக்கிள்கள், ஊன்று கோல்கள், கழிவறை கதிரை, வோக்கர், வோக்கிங் ஸ்ரிக், மெத்தை, தண்ணீர் மெத்தை, வயோதிபர்களுக்கான பம்பஸ் மற்றும் ஏனைய சிறு உபகரணங்களும் வைத்திய ஆலோசனைகளின் படி வாழ்வுதயத்தின் இத்துறைசார் தொழில்நுட்பப் பணியாளர்கள் மூலம் வழங்கப்படுகின்றன. பயனாளிகளின் பொருளாதார தேவைகள் இனங்காணப்பட்டு சுய வேலைவாய்ப்புத் திட்டம் மூலமாக அவர்கள் தங்கள் குடும்பங்களை கவனிப்பதற்கும் பிள்ளைகளின் கல்வியை வளப்பதற்கும் ஊக்குவிப்புகள் கொடுக்கப்பட்டு வருமானத்தில் சிறுதொகை மாதாந்தம் அவர்கள் பெயரில் சேமிப்பில் இடப்பட்டுவருகின்றது.

## சொந்த இடங்களுக்கு மீண்டும் செல்ல முடியாது தற்காலிகமாக தங்கியுள்ள மக்களுக்கு வாழ்வுதயத்தின் தற்காலிக கொட்டகை

கடந்த கொடூர போர்ச்சூழலில் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்த மக்களில் சிலர் உறவு இணைப்புகள் மூலமாக முகாம்களில் இருந்து வெளிவந்து தமக்கு தெரிந்தவர், உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். அவர்கள் இணைந்து கொண்ட வீடுகளில் ஏற்பட்ட இடவசதியின்மையை கருத்தில் கொண்டு அவர்களுள் சிலருக்கு தற்காலிக கொட்டகைகளை வாழ்வுதயம் அமைத்துக் கொடுத்துள்ளது. அண்மைக்காலங்களில் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பிய மக்களுக்கும் இவ்வுதவி வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் படி வவுனியா மாவட்டத்தின் ஆச்சிபுரம், சின்னத் தம்பனை, மருதங்குளம், கல்லீரங்குளம் கோமரசன்குளம், கல்நாட்டிகுளம், சமலங்குளம், சிதம்பரபுரம், சுந்தரபுரம், வீரபுரம் ஆகிய 10 கிராமங்களில் 73குடிசைகளும் மன்னார் மாவட்டத்தின் முருங்கன், மன்னார், வங்காலை, கீரி, தாழ்வுபாடு, உயிலங்குளம், நறுவிலிக்குளம், பெரியகமம், குஞ்சுக்குளம் ஆகிய 09 கிராமங்களில் 88 குடிசைகளும் அமைக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டன.

## கறிற்றாஸ் தேசிய மனித உரிமைகள் போட்டியில் முதல் இடம் பெற்றார் பேசாலை பாடசாலை மாணவி



கறிற்றாஸ் தேசிய மனித உரிமைகள் பிரிவு கடந்த மார்கழி மாதம் மாணவர்கள் மத்தியில் தேசிய மட்டத்தில் மனித உரிமைகள் கட்டுரைப் போட்டி நடாத்தியிருந்தது. இப்போட்டியில் மன்னார் பேசாலை புனித பத்திமா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி செல்வி. பிலோமினா தேசியமட்டத்திலும் மறைமாவட்டத்திலும் 1வது இடத்தை, பெற்று பாராட்டைப் பெற்றிருந்தார். மறைமாவட்ட மட்ட போட்டியில் மேற்படி பாடசாலையைச் சேர்ந்த செல்வி சுலேகா 2ம் இடத்தையும் வவுனியா தரணிக்குளம் அருளாளர்ஜோசப்வாஸ் ஆலயத்தைச் சேர்ந்த செல்வி நிலோசினி 3ம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். இம்மாணவிகளையும் போட்டியில் பங்கேற்ற மாணவர்களையும் வாழ்வுதயம் மன்னா பத்திரிகை வழி வாழ்த்துகின்றது. இடம்பெயர்ந்த வாழ்வுதயத்தின் மனித உரிமைகள் பிரிவானது ஆறுமாத காலமாக மக்கள் மத்தியில் அவர்களின் அடிப்படை உரிமைகள், முக்கிய ஆவணங்கள் பெறும் வழிமுறைகள், பெண் உரிமை, சிறுவர் உரிமை சார்ந்த கருத்தமர்வுகளை நடாத்தி வருகின்றது.

1ம் பக்க தொடர்ச்சி.......

## புனித அந்தோனியாரின்....

பி.ப 2.30மணியளவில் ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலி பேராலயத்தில் நிறைவேற்றப் பட்டு பேராலய தியான மண்டபத்தில் அழியாத திருப்பாகம் பொதிந்த அந்தோனியாரின் திருச்சுரூப ஆசீர் ஆயர் அவர்களினால் திரண்டிருந்த மக்களுக்கு அளிக்கப்பட்டது. இத்திருப்பாகத்தை இத்தாலியிலிருந்து எடுத்துவந்த குருவினால் புனித அந்தோனியாரின் தோல் பகுதியை கொண்ட திருப்பண்டம் (Relic) ஒன்று மறை மாவட்டத்திற்கென ஆயரிடம் ஒப்படைக்கப் பட்டது.

பின்னர் தள்ளாடி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு சிறிது நேர வணக்கத்திற்காக வைக்கப்பட்ட திருப்பாகம் வவுனியாவிற்கு கொண்டு செல்லப்பட்டது. வவுனியாவின் குருமன்காடு கிறிஸ்து அரசர் ஆலய சந்தியிலிருந்து திறந்த வாகனத்தில் ஊர்வலமாக இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்து செல்லப்பட்டு வைக்கப்பட்டது. அழியாத திருப்பாகத்தைக் காண ஆயிரக்கணக்கில் மக்கள் இரவிரவாக வருகை தந்து வணக்கம் செலுத்தினர். 15.03.2010 அன்று காலை 6.00 மணியளவில் வவுனியா மறைக்கோட்ட முதல்வரும் வவுனியா பங்குத்தந்தையுமான அருட்பணி, எமிலியானுஸ் பிள்ளை அவர்களின் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு அந்தோனியாரின் திருப்பாக திருச்சுரூபம் மதவாச்சி ஆலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### வாழ்க்கை என்பது

| | |
|---|---|
| ஒரு வாய்ப்பு | - அதை பாவியுங்கள் |
| அன்பு | - அனுபவியுங்கள் |
| ஆசீர்வாதம் | - அதை உணருங்கள் |
| சவால் | - முகம் கொடுங்கள் |
| விலையுயர்ந்தது | - தவறவிடாதீர்கள் |
| சொத்து | - பாதுகாத்துக் கொள்ளுங்கள |

*பீ. கஸ்தூரி -*
*புதுச்செட்டித் தெரு, கொழும்பு - 13.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துவ பொழிவு

## குருக்களின் ஆண்டையொட்டிய சிறப்புக் கட்டுரை

# திருநிலைக்குருத்துவத்தின் கூறுகள்

பேராயர் பீட்டர்

### முன்னுரை

இறைவனது இயல்பு என்னதென்றால் தம்மை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுதல் தந்தையாகிய கடவுள் தம் சாயலை தாம் படைத்த மக்களோடு பகிர்ந்துகொண்டார். தமது நிபந்தனையற்ற அன்பை மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டார். தமது ஒரே மகன் இயேசுவை மக்களோடு பகிர்ந்துகொண்டார். இயேசு தம்மை மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டார். இயேசு தமது உடலையும் இரத்தத்தையும் மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டார். திருப்பலியின் வழியாக இன்றும் பகிர்ந்துகொண்டே இருக்கின்றார். தமது குருத்துவத்தையும் திருமுழுக்குப்பெற்ற அனைவருடனும் பகிர்ந்துகொள்கின்றார்.

### அ. பொதுக் குருத்துவம்

திருமுழுக்கு பெற்ற அனைத்து விசுவாசி - களும் இயேசுவின் குருத்துவத்தில் பங்குபெறுகின்றார்கள். இதைத்தான் பொதுக்குருத்துவம் என்று நாம் கூறுகின்றோம். இதைத்தான் புனித பேதுரு, "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருக்களின் கூட்டத்தினர் தூய மக்கள் இனத்தினர்" என்று கூறுகின்றார்.

### ஆ. பணிக்குருத்துவம்

திருப்பட்டங்கள் வழியாக குருக்கள் பெறும் குருத்துவத்தை பணிக்குருத்துவம் என்று நாம் கூறுகின்றோம். இயேசு தாம் பாடுகள் படுவதற்கு முன்பு இதை என்நினைவாக செய்யுங்கள் ....." என்று கூறி அப்போஸ்தலர்களையும் அவர் தம் வழித்தோன்றல்களையும் ஏற்படுத்துகின்றார். இவ்வாறு இயேசு தமது குருத்துவத்தில் நம்மை பங்கு பெறச்செய்கின்றார். " பணிவிடை பெறுவதற்கன்று பணிவிடைபுரியவே வந்தேன்" என்ற இயேசுவின் அறிவுரைக்கேற்ப மக்கள் வாழ்வு பெற மக்களுக்காக பணிவாழ்வை மேற்கொண்டு மறு கிறிஸ்துவாக வாழ்வதே பணிக்குருத்துவம் என்பது செய்யும் அருள்நிலை.

## பணிக்குருத்துவத்தின் பல்வேறு அம்சங்கள்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் நமக்கு பணிக்குருத்துவத்தின் மூன்று அம்சங்களை தெளிவுபடுத்துகின்றன. இவைதான் இயேசு ஆற்றிய முப்பெரும் பணிகள்

1. இறைவாக்குப்பணி
2. புனிதப்படுத்தும் பணி
3. வழி நடத்தும் பணி

இந்த முப்பெரும் பணிகளை இவ்வுலகில் தொடர்ந்து செய்யத்தான் குருக்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். இந்த முப்பெரும் பணிகள் தான் பணிக்குருத்துவத்தின் கூறுகள்.

### 1. இறைவாக்குப்பணி

இறைவாக்குப்பணி என்பது இறைவார்த்தையை அச்சமின்றி மக்களுக்கு அறிவிக்கும் பணி

**அ. பழைய ஏற்பாட்டில்**

இந்த இறைவாக்குப்பணியைச் செய்தவர்கள் இறைவாக்கினர் என்று அழைக்கப்பட்டனர்.

1. இறைவாக்கினர்கள் இறைவனால் அழைக்கப்பட்டவர்கள்.
2. ஆவியினால் புனிதமாக்கப்பட்டவர்கள்
3. இறைவன் சார்பாக மக்களிடம் சென்று இறைவனது வார்த்தையை அறிவித்தவர்கள்.
4. மக்களிடையே நிலவிய அநீதிகளையும் அக்கிரமங்களையும் அராஜகங்களையும் வன்மையாக கண்டித்தவர்கள். மக்களை மனமாற்றத்திற்கு அழைத்துச்சென்றவர்கள்

**ஆ. புதிய ஏற்பாட்டில்**

இயேசு ஆற்றிய முப்பெரும் பணிகளில் முதன்மை இடம்பெறுவது இறைவாக்குப் பணியாகும்.

- இயேசு ஊர்ஊராகச் சென்று போதித்தார்.
- இயேசு எல்லா இடங்களிலும் போதித்தார் (வீடுகளில் , ஆலயத்தில் , செபக்கூடங்களில், மலையடிவாரத்தில், சமதளத்தில், கடற்கரையில்)
- இயேசு அதிகாரத்தோடும் வல்லமையோடும் போதித்தார்.

இயேசுவின் இறைவாக்குப்பணி மக்களை மையப்படுத்திய பணியாக அமைந்திருந்தது. குறிப்பாக எளிய மக்களை அதாவது சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களை மையமாகக்கொண்டு அமைந்திருந்தது.

**இ. இயேசு தமது பணி வாழ்வின் தொடக்கத்தில்**

"ஆண்டவருடைய ஆவி என்மேலே எளியவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்கவும் ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமைவாழ்வு பெறவும்" எனக்கூறி தமது இறைவாக்குப்பணியை தொடங்குகின்றார். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிமை வாழ்வு கொடுப்பதுதான் அவரது இறைவாக்குப்பணியாக இருந்தது. சமுதாயத்தில் - ஒடுக்கப்பட்ட பாவிகள், தாழ்த்தப்பட்ட சமாரியர்கள், பழித்துரைக்கப்பட்ட தொழு நோயாளிகள், வெறுக்கப்பட்ட ஆயக்காரர்கள் போன்ற மக்களின் நல்வாழ்விற்காகத் தமது வாழ்வையே அர்ப்பணித்தார். இயேசு இந்த மக்களை ஏற்றுக்கொண்டார், அன்பு செய்தார், அவர்களின் உரிமைகளுக்காக போராடினார்.

இயேசு சமுதாயத்தில் நிலவிய

1. அநீதிகளையும் அக்கிரமங்களையும் தட்டிக்கேட்டார்,
2. தீமை செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கடிந்து பேசினார்.
3. ஏழைகளை அடிமைப்படுத்திய பணக்காரர்களை கண்டித்தார்.
4. மக்களை ஒடுக்கிய பரிசேயரையும், மறை நூல் அறிஞரையும் கண்டித்தார்.

ஆகவேதான் இயேசுவின் இறைவாக்குப்பணியை மறை நூல் அறிஞரும் பரிசேயரும் பெரிதும் எதிர்த்தார்கள். அவரை எப்படியாவது கொன்றுவிட கங்கணம் கட்டினார்கள். அவர்மீது அபாண்டமான குற்றங்களைச் சுமத்தி அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். இவ்வாறு அவரது இறைவாக்குப்பணிதான் அவரது மரணத்திற்கு காரணமாய் இருந்தது.

சிலுவையில் இறந்த இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த பின் தமது அப்போஸ்தலர்களுக்கு தோன்றி அவர்களிடம் " நீங்கள் உலகெங்கும் போய் நற்செய்தியை அறிவியுங்கள், விசுவசிப்பவர்களுக்கு திரு முழுக்கு கொடுங்கள்" என்று கூறிநற்செய்தியை பறைசாற்ற அனுப்புகிறார். "தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்று கூறி அவர்களை இறைவாக்குப்பணி செய்ய அனுப்புகிறார்.

**ஈ. குருக்களும் இறைவாக்குப்பணியும்**

நற்செய்தியை அறிவிக்கும் பணியானது இயேசுவின் திருமுழுக்குப்பெற்ற எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட பணி என்றாலும் பணிக் குருத்துவத்தில் பங்கு பெறும் குருக்களின் முக்கியமான முதன்மையான பணியாகும்.


**உ. குருத்துவ திருநிலைப்பாட்டின் போது ஆயர்**

"நீர் வாசிப்பதை விசுவசிக்கவும் விசுவசிப்பதை போதிக்கவும் போதிப்பதை கடைப்பிடிக்கவும் கருத்தாய் இரும்" – என்று கூறி இறை வாக்குப்பணியின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறுகின்றார். எனவே குருக்கள் இறைவார்த்தையில் வளர்ந்து பிறரும் இறைவார்த்தையில் வளர உதவ வேண்டும். பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர்களைப்போன்று நாமும் இறைவார்த்தையை எத்தகைய அச்சமுமின்றி அறிவிப்பதும் எமது கடமையாகும். இயேசுவைப்போன்று நாமும் ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிப்பதிலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிமை வாழ்வு கொடுப்பதிலும் நம் இறைவாக்குப்பணி அமைய வேண்டும்.

சமுதாயத்தில் நிலவும் அநீதிகளை அக்கிரமங் களை , அராஜகங்களை பிடுங்கவும், தகர்க்கவும், அவிழ்க்கவும் கவிழ்கவும் நாம் அழைக்கப் பட்டுள்ளோம். இவ்வாறு செய்து இறை நீதியைக் கட்டி எழுப்ப நாம் அழைக்கப்பட்டுள்ளோம். நாம் அறிவிப்பது இறைவார்த்தையாக இருக்க வேண்டுமே ஒழிய மனித வார்த்தையாக அமைந்து விடக்கூடாது.

### 2. புனிதப்படுத்தும் பணி

கடவுள் மனிதரைத் தமது சாயலாகப் படைத்தார். ஆனால் மனிதர் [illegible] கடவுளின் அன்பை மறந்து [illegible]



உறவிலிருந்து விலகிச் சென்றார். கடவுளின் உறவிலிருந்து மாத்திரம் அவர் விலகிச் செல்லவில்லை. மனித உறவுகளிலிருந்தும் விலகிச் சென்றார். எனவே மனிதருக்கும் கடவுளுக்கும், மனிதருக்கும் மனிதருக்கும் உள்ள உறவில் விரிசல், முறிவுகள் ஏற்பட்டன. உறவின் முறிவுதான் பாவம். இவ்வாறு உறவுகளிலிருந்து பிரிந்து சென்ற மனிதர் இறைவனைத் தேடுவதற்கு முன்பே, அவர் மனிதரைத் தேடி வருகின்றார். காணாமல் போன ஆடு, காணாமல்போன காசு, காணாமல் போன மகன் போன்ற உவமைகள் எவ்வாறு கடவுள் மனிதரைத் தேடி வருகின்றார் என்பதைக் காட்டுகின்றன. உறவை திரும்பவும் நிலைநாட்ட தமது மகனையே இவ்வுலகிற்கு அனுப்புகின்றார். மகன் இயேசுவும் மக்களின் மீட்புக்காக தமது உயிரைக் கொடுத்து, தமது இரத்தத்தினால் மனிதரை புனிதப்படுத்தினார்.

இவ்வாறு மக்களை இறைவனோடு இணைக்கும் பணிதான் புனிதப்படுத்தும் பணி; மக்களை பிற மக்களோடு இணைக்கும் உறவுப் பணிதான் புனிதப்படுத்தும் பணி.

## குருக்களும் புனிதப்படுத்தும் பணியும்

இயேசு செய்த இந்த புனிதப்படுத்தும் பணிகளைத் தொடர்ந்து செய்ய குருக்களாகிய நாம் அழைக்கப்பட்டுள்ளோம். மக்களைப் புனிதப்படுத்தும் பணியில் ஈடுபடுமுன் குருக்களாகிய நாம் முதலில் நம்மையே உறவுகளில் புனிதப்படுத்த வேண்டும். அருட்சாதனங்களை நிறைவேற்றுவதின் மூலமாக குறிப்பாக நற்கருணை, ஒப்புரவு அருட்சாதனங்கள் வழியாகக் குருக்களாகிய நாம் நம்மையும் புனிதப்படுத்துகின்றோம், மக்களையும் புனிதப்படுத்துகின்றோம்.

1. திருமுழுக்கு என்ற அருட்சாதனத்தின் வழியாய், நாம் மக்களை இறைவனது பிள்ளைக-ளாக்குகின்றோம். திருச்சபையின் உறுப்பினர் ஆக்குகின்றோம்.
2. ஒப்புரவு என்ற அருட்சாதனத்தின் வழியாய், நாம் கிறிஸ்துவின் பெயராலும் திருச்சபையின் பெயராலும், அறுந்த உறவுகளைப் புதுப்பிக்கிறோம், இருக்கும் உறவுகளை உறுதிப்படுத்துகிறோம்.
3. உறுதிப்பூசுதல் என்ற அருட்சாதனத்தின் வழியாய், நாம் பரிசுத்த ஆவியானவரின் கொடைகளையும், வரங்களையும் மக்களுக்குப் பெற்றுத்தருகிறோம்.
4. நோயில் பூசுதல் என்ற அருட்சாதனத்தின் வழியாய், நாம் நோயாளிகளுக்கு எண்ணைப் பூசி ஆறுதல் அளிக்கிறோம்.
5. நற்கருணை என்ற அருட்சாதனத்தின் வழியாய், நாம் கிறிஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் மக்களுக்கு ஆன்மீக உணவாகக் கொடுக்கின்றோம்.

## 3. வழி நடத்தும் பணி (மேய்ப்புப்பணி)

**அ. பழைய ஏற்பாட்டில்**

மக்கள் இறைவனை ஒரு மேய்ப்பராகக் கண்டார்கள். நானே என் மந்தையை மேய்த்து இளைப்பாறச் செய்வேன்" (எசே. 34:15) என்கிறார் தலைவராகிய ஆண்டவர். எகிப்தியரின் அடிமைத்தளையிலிருந்து இஸ்ரயேல் மக்களை [illegible] வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு கடவுள் அவர்களை வழி நடத்திச் சென்றார். இவ்வாறு இஸ்ரயேல் மக்கள் கடவுளை வழி நடத்திச் செல்லும் தெய்வமாகத்தான் பார்த்தார்கள்.

**ஆ) புதிய ஏற்பாட்டில்**

மக்கள் இறைவனை ஒரு மேய்ப்பராகத்தான் கண்டார்கள்.

"நானே நல்ல ஆயன். நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காக தன் உயிரையே கொடுப்பார்" (யோவா 10:1) தந்தை தம் மக்களுக்கான தமது ஒரே மகன் இயேசுவை தியாகம் செய்தார். மகன் தம் ஆடுகளுக்காக சிலுவை மரத்தில் தம் உயிரைக் கொடுத்தார்.

இயேசு தமது சிலுவைச் சாவின் வழியாக காட்டிய வழி அன்பின் வழி, தியாகத்தின் வழி, அமைதியின் வழி, இறையரசை அடைவதற்கான வழி, இயேசு மக்கள் செல்ல வேண்டிய வழியைச் சுட்டிக்காட்டியது மட்டுமல்லாது, இயேசுவே மக்களோடு சேர்ந்து பயணமாகிறார்.

இன்றைய சமுதாயத்தில் நாம் பார்ப்பது என்ன? பதவிக்காகவும், புகழுக்காகவும், அதிகாரத்திற்காகவும் வாழ்கின்ற தலைவர்களைப் பார்க்கின்றோம். இத்தகைய தலைவர்களைப் போல் இயேசு பதவிக்காகவோ, புகழுக்காகவோ, அதிகாரத்துக்காகவோ, வாழாமல் பிறருக்காகத் தன்னையே கையளிக்கின்றார். கடவுளின் மகனாக இருந்தும், அவர் பிறருக்காக, அடிமை போல் வாழ்ந்தார்.

ஏழையாகப் பிறந்தார். ஏழையாகவே வாழ்ந்தார். ஏழையாகவே இறந்தார்.

அவர் பிறந்தது : மாடுகள் அடையும் குடிலில்
அவர் வளர்ந்தது : தலை சாய்க்க இடமில்லா நிலையில்
அவர் இறந்தது : சிலுவை மரத்தில்
அவர் அடக்கப்பட்டது : இன்னொருவரின் கல்லறையில் இவ்வாறு தனக்கென்று வாழாமல் பிறருக்காகவே வாழ்ந்தார், உயிர் துறந்தார். குருக்களாகிய நாம், நமக்கென்று வாழாது பிறருக்காக வாழ்ந்து பிறரை வழி நடத்த நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

## குருக்களும் வழி நடத்தும் பணியும்

வழி நடத்தும் பணி ஒரு அதிகாரப் பணி அல்ல. மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் பணியல்ல. மக்களை அடக்கி ஆளும் பணியல்ல. ஒரு காலத்தில் திருச்சபை ஓர் அதிகார அமைப்பாய் இருந்தது. குருக்களும் திருச்சபையில் அதிகாரிகளாகத்தான் இருந்தார்கள். இன்று நாம் திருச்சபையை எப்படிப் பார்க்கின்றோம்? ஓர் அன்புச் சமூகமாகத்தான் பார்க்கின்றோம். திருச்சபை ஓர் உறவுக் குடும்பம். எனவே வழி நடத்தும் பணி ஓர் அன்பின் பணி. எனவே குருக்களாகிய நாம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை அன்பினால் வழி நடத்த அழைக்கப் பட்டுள்ளோம். நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்காக நாம் நம் உயிரையும் கொடுக்க தயாராக இருக்க வேண்டும்.

- நல்லாயன் இயேசு, மக்களுக்காக சிலுவையில் உயிர் கொடுத்தார்.
- மெழுகுதிரியானது தன்னையே கரைத்துக் கொண்டு ஒளி கொடுக்கிறது.
- உப்பானது தன்னையே கரைத்துக்கொண்டு சுவை தருகின்றது.

இதுதான் வழி நடத்தும் பணியாகும்.

இறுதியாக குருக்களாகிய நாம் அனைவரும் இயேசுவைப் போன்று எல்லா மக்களையும் வழி நடத்த அழைக்கப்பட்டுள்ளோம் என்றாலும் குறிப்பாக,

1. ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், ஓரம் தள்ளப்பட்டோர். வலுவற்றவர்கள் இவர்களை வழி நடத்த நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.
2. சாதியம், வரதட்சணை, பெண் அடிமைத்தனம், வேலையில்லாத் திண்டாட்டம், பாலியல் பலாத்காரம், மூடநம்பிக்கை போன்ற சமுதாயத் தீமைகளை எதிர்த்துப் போராட நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.
3. கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களுக்காக மட்டுமன்று பிற கிறிஸ்தவ சகோதரிகளுக்காவும், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்காகவும் பணி புரிய நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.
4. இனம், நிறம், சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் வேறு படுத்துவதைக் கண்டிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.
5. சுற்றுப்புறச் சூழலைக் காக்கவும், இயற்கையைப் பேணவும், நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

### முடிவுரை

இவ்வாறு இயேசு தொடங்கிய முப்பெரும் பணிகளான இறைவாக்குப் பணி, புனிதப்படுத்தும் பணி, வழி நடத்தும் பணிகளைத் தொடர்ந்து ஆற்றத்தான், குருக்களாகிய நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இந்தப் பணிகளை நமது மறைமாவட்டத்தில் நல்லமுறையில் ஆற்ற. இறைவன் நமக்கு அருளைத் தரும்படி மன்றாடுவோம்!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# பகிரப்படும் அதிகாரமும் பகிரங்கப்படுத்தப்படும் திட்டங்களும் பரிசை நிட்சயம் தரும் -பேராயர் மல்கம் ரஞ்சித்-



கடந்த தை மாதம் 26ம் திகதி கொழும்பு, புனித ஜோசப் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இடம் பெற்றது. பிரதம விருந்தினராக பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் கலந்து கொண்டார். இந் நிகழ்வில் பேசிய போது எமது நாட்டிலே உருவாக்கப் பட்டிருக்கின்ற அரசியல் சட்டமானது நாட்டிலே ஒற்றுமையையும் மாற்றுக் கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்ற தன்மையையும் உருவாக்கவில்லை மாறாக மனித மாண்பையும் சமத்துவத்தையும் மதிக்காத அதிகார மேலாண்மையை ஒரு குறிப்பிட்ட இனத்திற்கும் சமயத்திற்குமே வழங்கியுள்ளதாக குறிப்பிட்டார். மேலும் பேராயர் அதிகாரப்பகிர்தலும் பகிரப்படுகின்ற எதிர்கால வளர்ச்சித் திட்டங்களும் எப்பொழுதும் சிறந்த பதிலையே தரும் என்றும் கூறினார். ஜனநாயகமானது பல கட்சிகளையும் அபிப்பிராயங்களையும் உள்ளடக்கியதொன்றாக அமைகின்ற போது அது நற்பலனை கொடுக்கும் என்றும் கூறினார். ஆனால் இந்த தேர்தல் காலங்களிலே நாட்டிலே நடைபெறுகின்ற வன்செயல்கள் சமயத் தலைவர்களிற்கே ஓர் அச்சுறுத்தலாக அமைந்திருக்கின்றது என்றும் இந்நிலைமை தொடருமென்றால் எமது நாடு நிட்சயம் ஒரு அழிவை எதிர்காலத்தில் எதிர்கொள்ளவேண்டி வரும் என்றும் கூறினார்.

மேலும் இப்பொழுது எமது நாட்டிற்கு சட்டம், நீதி ஒழுங்கு முறைகளை நிலைநிறுத்தி அரசியற் கட்சிகளுக்கிடையேயும் சமயங்களுக்கிடையேயும் நிலவுகின்ற இழுபறிகளை நீக்கி நாட்டைக் கட்டியெழுப்பும் வழிமுறைகளில் கவனம் செலுத்துவதே இன்று அவசியமானதொன்று என்று குறிப்பிட்டார். அத்தோடு வெவ்வேறு இனத்தையும் சமயத்தையும் சார்ந்த மக்கள் தாங்களும் இந்த நாட்டின் அபிவிருத்தியின் பங்காளிகள் என்றும் உரிமைக்குடிகள் என்றும் உணரும் வண்ணம் திறந்த தெளிவான அரசியல் தீர்வை முன்வைப்பதோடு, விசேடமாக 30வருட போரினாலே அழிவுக்குள்ளான தமிழ் மக்களை மீண்டும் அவர்களின் தாயகப்பூமியிலே குடியமர்த்தி அவர்களின் வாழ்விலே நம்பிக்கையையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதே சிறந்த ஜனநாயக அரசிற்கான வழிமுறையாக அமையும் என்றார்.

# மீள்குடியேறிய மக்களை சந்தித்த ஆயர்கள்

இலங்கை கறிற்றாஸ் கத்தோலிக்க அமைப்பின் ஏற்பாட்டின் பிரகாரம் மன்னார் மறைமாவட்ட மீள்குடியேறிய மக்களின் கிராமங்களுக்கு கடந்த 05.03.2010 அன்று கத்தோலிக்க ஆயர்களை உள்ளடக்கிய குழு விஜயம் செய்திருந்தனர். இக் குழுவில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் அதி.வண.வியானி பெர்ணான்டோ தேசிய கத்தோலிக்க நீதி, சமாதான, மனித முன்னேற்ற ஆணைக்குழுவின் தலைவர் அதி.வண.ஹெரல்ட் அந்தனி பெரேரா, பதுளை மறைமாவட்ட ஆயர் அதி.வண. வின்சன்ட் பெர்ணான்டோ, சிலாப மறைமாவட்ட ஆயர் அதி.வண. வலன்ஸ் மென்டிஸ் ஆகியோருடன் எமது மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி.வண.இராயப்பு யோசேப்பு அவர்களும் உள்ளடங்கியிருந்தனர்.

இறுதி நிகழ்வாக கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவிலில் மக்களை சந்தித்து உரையாடியபோது ஆயர் அதி.வண.வியானி பெர்ணான்டோ, மீள்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப கத்தோலிக்க திருச்சபை பாரிய பங்களிப்பை நல்கும் என்று உறுதி கூறினார். வடக்கிலே மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக ஆயர்கள் தெரிவித்து நின்றனர்.

# பல்கலைக்கழக மாணவர் குழுவின் வடக்கிற்கான நல்லெண்ண விஜயம்

பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரையும் பல்கலைக்கழக மாணவர்களையும் உள்ளடக்கிய ஒன்பது சிங்கள கிறிஸ்தவ இளையோர் குழுவின் வடக்கு நோக்கிய களத்தரிசிப்பு நிகழ்ச்சியினை இயேசு சபை குருக்களின் வடக்கு – தெற்கு உறவுப்பால அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இந்த குழுவினருடன் ஜேர்மனியின் இயேசு சபையின் தன்னார்வ தொண்டரும் இணைந்திருந்தார். செட்டிகுளம், மன்னார், பேசாலை மற்றும் வவுனியா ஆகிய இடங்களுக்கு இவர்கள் சென்றிருந்தனர். அங்குள்ள உண்மை நிலைகளை அறிந்து தெற்கு வாழ் இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் போரில் பாதிப்புற்றவர்களின் துன்ப அனுபவங்களை கேட்டு இவ்விளையோர் ஊடாக வடக்கு – தெற்கு நம்பிக்கை பாலத்தை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு இந்நிகழ்ச்சி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இக்குழுவினர் மருதமடு திருத்தலத்திற்கும் சென்றிருந்ததுடன் கிளரேசியன் குருக்களால் நடாத்தப்படும் 'வரோட்' எனப்படும் வலுக்குன்றியோருக்கான வன்னி புனர்வாழ்வு அமைப்பினால் பராமரிக்கப்படுபவர்களையும் சந்தித்தனர். வடக்கின் ஒரு பகுதி உண்மை நிலவரத்தை இக்களத்தரிசிப்பில் ஈடுபட்டவர்கள் கண்களால் கண்டு உணர்ந்திருந்ததுடன் துன்பமும் நம்பிக்கையும் பிரதிபலிக்கும் ஒருசில கதைகளால் இதயபூர்வமாக தொடப்பட்டனர். இன்று இலங்கையில் சிலுவையில் அறையுண்ட தேவனின் துன்பத்தை கிறிஸ்தவர் என்ற ரீதியில் இவர்கள் கண்டுணர்ந்து கொண்டனர்.

# இலங்கைக்கான பாப்பிறை பிரதிநிதி அலுவலகம் நடாத்தும் சித்திரப் போட்டி

திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் திருத் தந்தையாக தெரிவுசெய்யப்பட்ட ஐந்தாண்டு நிறைவை முன்னிட்டு (19.04.2005 – 19.04.2010) சித்திரப்போட்டியினை இலங்கை பாப்பிறை பிரதிநிதி அலுவலகம் நடாத்த தீர்மானித்துள்ளது. கத்தோலிக்க திருச்சபையினால் நடாத்தப்படும் சிறுவர் இல்லங்கள் விடுதிகள், ஆகியவற்றில் தங்கியிருக்கும் சிறுவர், இளைஞர் மற்றும் கத்தோலிக்க நிறுவனங்களால் நடாத்தப்படும்மாற்றாற்றலுள்ளோர்களுக்கான பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

**சித்திரப் போட்டிக்கான கருப்பொருள் :**
தேவையில் உழல்வோரை நாடும் ஆயன்
பகிர்வு, ஒருமைப்பாடு வழி அன்பு, ஒப்புரவு

**போட்டிக்கான பிரிவுகள்:**
1. தரம் 03 – 05 2. தரம் 06 – 09
3. தரம் 10 – 11 4. தரம் 12 – 13

வரையப்பட்ட ஓவியங்கள் 2010 சித்திரை 14ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். போட்டி முடிவுகள் 2010 வைகாசி 23ம் திகதி அறிவிக்கப்படும்.போட்டியில் பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும், ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்படும் 10 விசேட போட்டியாளர்களுக்கு தகுந்த பரிசுகள் வழங்கப்படும். முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு முறையே ரூ 25,000, ரூ. 20,000, ரூ 15,000 பெறுமதியான அன்பளிப்பு பத்திரம் அல்லது வங்கிக் கணக்கு ஆரம்பித்து வழங்கப்படும்.

**ஓவியங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி**
பாப்பிறை பிரதிநிதி அலுவலகம்,
220, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு – 07
Office of Apostolic Nunciature
220, Bauddhaloka Mawatha, Colombo – 07

**மேலதிக விபரங்களுக்கு**
மறைமாவட்டத்திலுள்ள கத்தோலிக்க சிறுவர் இல்ல விடுதிகளின் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

## உலகத்திருச்சபை செய்திகள்

# 44வது உலக சமூகத் தொடர்பு நாள் செய்தி



"டிஜிட்டல் உலகில் குருவும் மேய்ப்புப்பணியும் இறைவார்த்தைப் பணியில் புதிய ஊடகம்" என்ற தலைப்பிலான திருத்தந்தையின் இச்செய்தி, புதிய தொழில்நுட்பத்தின் அதிவேகமான வளர்ச்சி, குறிப்பாக இணையத்தள வளர்ச்சி, குருக்களுக்கு நற்செய்தி அறிவிக்கச் சிறந்த வாய்ப்பாக உள்ளது என்று கூறுகிறது. குருக்கள், புதிய தொழில்நுட்ப ஊடகங்களைப் பயன்படுத்தி மக்களைத் திருச்சபையின் வாழ்வில் ஈடுபடுத்தவும், இக்காலத்தவர் கிறிஸ்துவின் முகத்தைக் கண்டு கொள்ளவும் உதவ முடியும் என்றும் அச்செய்தி தெரிவிக்கிறது. ஊடகத் துறையில் பணியாற்றும் இருபால் துறவிகளுக்குச் சிறப்பான பொறுப்பு உள்ளது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ள திருத்தந்தை, தனிப்பட்டவர்களின் ஆன்மீகத் தேவைகளைக் கருத்தில் கொண்டு செயல்படுமாறு கூறியுள்ளார். ஊடகத்துறையில் மனிதனின் மாண்பும் மதிப்பும் மதிக்கப்படும் கலாச்சாரத்தை செயல்படுத்துவதற்கான வழிகளில் இதுவும் ஒன்று என்றும் திருத்தந்தை அச்செய்தியில் கூறியுள்ளார்.

# "நற்செய்தி அறிவிப்புக்கு கிறிஸ்தவர்கள் மத்தியில் ஐக்கியம் அவசியம்" – திருத்தந்தை –

கிறிஸ்தவ சபைகளிடையேயான முழுமையான ஒன்றிப்பு இன்னும் கிட்டவில்லையெனினும், கிறிஸ்தவர்கள் அனைவரும் பொதுவான சாட்சிய வாழ்வுக்கான முயற்சிகளை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று திருத்தந்தை கேட்டுக் கொண்டார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நன்மைத்தனம் மற்றும் அமைதியை ஊக்குவித்தல், மனிதனை மையப்படுத்தும் செயல்பாடுகள், பசி, எழுத்தறிவின்மை, வளங்கள் சமமாகப் பங்கிடப்படாமை, வறுமை போன்ற இக்காலத்திய துன்பங்களை அகற்றுதல் போன்றவற்றில் கிறிஸ்தவர்கள் அனைவரும் பொதுவில் சாட்சியம் பகருமாறும் திருத்தந்தை வலியுறுத்தினார். உலகப்போக்கு, பாராமுகம், தான் என்ற கோட்பாடு, வாழ்வின் தொடக்கமுதல் இறுதிவரை அதைக்காப்பதில் ஏற்படும் அறநெறிப் பிரச்சனைகள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் வரையறைகள் பிற மதங்களுடன் உரையாடல் போன்றவை முன்வைக்கும் சவால்கள் பற்றியும் அவர் சுட்டிக்காட்டினார். கிறிஸ்தவ சபைகளைப் பிரிக்கும் கூறுகளை ஏற்கும் அதேவேளை செபம் மற்றும் உரையாடல் மூலம் இந்த வேறுபாடுகளை மேற்கொள்ள முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# வீடில்லாமையை முற்றிலும் ஒழிக்க காரித்தாஸின் புதிய திட்டம்

வீடற்றோர் என்ற நிலையை முற்றிலுமாக ஒழிக்கும் புதிய திட்டம் ஒன்றை துவக்கி தன் பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளது கத்தோலிக்க காரித்தாஸ் அமைப்பு. பிரசல்ஸின் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் இதனை துவக்கியுள்ள காரித்தாஸ் அமைப்பு, தெருவில் வாழும் நிலைக்கு எவரும் தள்ளப்படக் கூடாது மருத்துவ செலவுக்கு பணமின்மையால் எவரும் இறக்கக்கூடாது என்ற இரு நோக்கங்களுடன் இத்திட்டம் செய்யப்பட உள்ளதாக கூறியது.

# 'வருங்காலத்தில் தண்ணீருக்காக மோதல்கள் வெடிக்கக் கூடும்'



உலக மக்கள் தொகை அதிகரிப்பு, குடிநீர் வளங்கள் குறைந்து வருவது போன்றவை காரணமாக, வருங்காலத்தில் தண்ணீர் சம்மந்தமாக மோதல்கள் வெடிக்கக் கூடும் என்று அமெரிக்க ஆயர்களின் சி.ஆர்.எஸ் பிறரன்பு நிறுவனமும் அறிஞர்களுக்கான வுட்ரோ வில்சன் பன்னாட்டு மையமும் இணைந்த, "தண்ணீரும் மோதல்களும்" என்ற தலைப்பில் நடத்திய கருத்தரங்கில் எச்சரிக்கப்பட்டுள்ளது. சுத்தமான குடிநீரைக் கொண்டிருப்பதற்கான உரிமை மனித உரிமையே என்று உரைக்கப்பட்ட இக் கருத்தரங்கில், உலகில் ஏறத்தாள 100கோடி பேருக்கு சுத்தமான குடிநீர் வசதி இல்லை, 200கோடிக்கு மேற்பட்டோருக்கு நல்வாழ்வு வசதி இல்லை, சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதாரம் தொடர்புடைய நோய்களால் ஆண்டு தோறும் 20 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இறக்கின்றனர், இவர்களில் பெரும்பாலானோர் சிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# 50வது சர்வதேச நற்கருணை மாநாடு 2012ஆம் ஆண்டு டப்ளினில் நடைபெறும்

'திருநற்கருணை: கிறிஸ்துவுடனும் ஒருவர் ஒருவருடனும் ஆன ஐக்கியம் என்ற தலைப்பில் இவ் ஆண்டு அயர்லாந்தில் இடம்பெற உள்ள 50வது சர்வதேச நற்கருணை மாநாட்டிற்கான தயாரிப்புகள் தற்போதே துவங்கியுள்ளதாக அறிவித்தார் டப்ளின் பேராயர் தியார்முத் மார்ட்டின்.

2012ஆம் ஆண்டு 10-17ஜுன் வரை டப்ளினில் இடம்பெறவுள்ள இச்சர்வதேச கருத்தரங்கு, இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் துவக்கப்பட்டதன் 50ஆம் ஆண்டை சிறப்பிப்பதாகவும் இருக்கும் என்றார் அவர்.

# இந்திய அருட்தந்தை ஒருவர் ஏழை இந்துவுக்கு சிறுநீரக தானம்

திருத்தந்தை அறிவித்த குருக்களின் ஆண்டு என்ற மையப்பொருளால் உந்தப்பட்டு, கேரளாவில், வடனப்பள்ளி புனித பிரான்சிஸ் சேவியர் ஆலயத்தின் பங்குத்தந்தை டேவிஸ் சிரமெல் தனது சிறுநீரகங்களில் ஒன்றை, கோபிநாத் என்ற ஏழை இந்து ஒருவருக்கு தானமாக வழங்கியுள்ளார். இந்தத் தானம் தொடர்பான ஒரு சில பரிசோதனைகளை மேற்கொள்ள அவர் மருத்துவமனையில் இருந்த போது. திருத்தந்தைகுருக்கள் ஆண்டை அறிவித்தது. தன்னை இன்னும் பிறருக்கு அர்ப்பணிக்கும் வாழ்வை மேற்கொள்ளத் தூண்டுதலாய் இருந்ததென அருட்தந்தை சிரிமெல் கூறினார். முன் பின் தெரியாத ஓர் இந்துவுக்குத் தான் செய்த இந்த தானம், கிறிஸ்து தினமும் தன்னையே வழங்கும் கல்வாரிப் பலியில் தனக்குக் கிடைத்துள்ள ஒரு பங்கு என்று அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வு தரும் வார்த்தை

# உயிரோடு இருப்பவர்

அருட்பணி. பீட்டர் அபீர்

யூத அதிகாரிகளின் சூழ்ச்சி, பிலாத்துவின் குழப்ப நிலை, மக்களின் அறியாமை, சீடர்களின் புறக்கணிப்பு – யாவும் சேர்ந்து நாசரேத்தூர் நாயகன் இயேசுவை கல்லறையில் வைத்தன.

"அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவா 1:11). இத்தகைய சோதனை முடிவுக்கு இயேவின் வாழ்வு தள்ளப்பட்டாலும், சோகப்பிடியில் அவர் தள்ளப்படவில்லை. நம்பிக்கையின் சின்னமாகவும் வாழ்வின் சுடராகவும் அவரை அனுபவித்து உணர்ந்த இளந்திருச்சபையின் பிரதிபலிப்பை நற்செய்திகளில் காண்கின்றோம்.

சிலுவையில் அறையப்பட்ட இயேசு, ஈட்டியால் குத்தப்பட்டு, இறந்துவிட்டாரா என்று உறுதிசெய்யப்பட்டு, இறந்த அவரது உடலை யூதவழக்கப்படி ஒரு கல்லறையில் வைத்து நல்லடக்கம் செய்தார்கள்.

எல்லாம் முடிந்துவிட்டது என்ற துயரத்தில் தங்கள் நல்லுணர்வுகளைக் காட்ட கல்லறைக்கு நறுமணப் பொருட்கள் கொண்டு வந்தனர் சில பெண்கள். அது வாரத்தின் மூன்றாம் நாள் - ஓய்வு நாள். இயேசுவின் உடலைத் திருடிவிடுவார்களோ என்ற ஐயத்தில் அவரது கல்லறைக்கு காவலும் வைத்தனர். யூத அதிகாரிகள் (மத் 27:66) இருப்பினும் அப்பெண்கள் கல்லறைக்கு வந்தபோது இயேசுவின் உடல் அங்கே இல்லை.

வானதூதர் இருவர் அவர்களிடம், "உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்?" என்று கேட்கின்றனர். (லூக் 24:6) ஆகவே இறந்த இயேசு இறப்பின்பிடியில் இல்லாமல் உயிர்த்துவிட்டார் என்பதை எல்லா நற்செய்தியாளரும் மிகத் தெளிவாகவே கூறுகின்றனர். (மாற் 16:6, மத் :28:7, லூக் 24:5, யோவா 20:18).

இவர்களுக்கெல்லாம் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னமே கொரிந்தியருக்கு எழுதிய புனித பவுல் "மறைநூலில் உள்ளபடியே கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக இறந்தார்.... மூன்றாம் நாள் உயிர்த்தார்" என்று அறுதியிட்டுக் கூறினார். (1கொரி 15:3-8).

### 'உயிர்த்தார் என்றால்'

ஆரம்பத்திருச்சபையில் இயேசுவின் உயிர்ப்புப் பற்றி இரண்டு விதமான நம்பிக்கைகள் நிலவின.
"இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தார்" என்பதும் (யோவா 20:9). "கடவுள் அவரை உயிர்த்தெழச் செய்தார்"என்பதும் ஆகும். (மாற் 16:6, மத் 27:64, லூக் 24:6, திரு.ப 2:32, 1கொரி 15:4).

இதில் இரண்டாவதுதான் இயேசுவின் உயிர்ப்புப் பற்றிய ஆரம்ப நம்பிக்கையாகும். மானிடமகனான இயேசுவை கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என்று கூறினாலும் இயேசுவின் இறைத்தன்மையை அவர்கள் குறைத்து மதிப்பிடவில்லை. "இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார்" என்று அவர்கள் கூறியபோது (1கொரி 15:20). கடவுள் மானிடமகன் என்ற உறவுநிலையில் இயேசுவைக் கண்டனர். அதனால்தான் "கடவுள் அவரை மரண வேதனையில் நின்று விடுவித்து உயிர்த்தெழச் செய்தார்" என்று இளந்திருச்சபை கருதியது. (தி.ப. 2:24).

### வரலாற்று உண்மையே!

இயேசுவின் உயிர்ப்பு பற்றிய வெவ்வேறான மரபுகளை நற்செய்தி நூல்கள் தருகின்றன. எருசலேமில் இறந்து அடக்கம் செய்யப்பட்ட இயேசு, தான் உயிர்த்தவுடன் தனது சீடர்களுக்கு வடபாலஸ்தீனாவில் உள்ள கலிலேயாவில்தான் முதலில் தோன்றினார் என்று மாற்குவும் (16:7) யோவானும் (அதிகாரம் 21) கூறுகின்றனர்.

இருப்பினும் கி.பி. 85இல் எழுதிய லூக்காவின் கூற்றுப்படி இயேசு முதன்முதலில் எருசலேமிலேயே காட்சி அளித்தார். (19:39).

இயேசுவை அடக்கம் செய்த மூன்றாம் நாள் நறுமணப்பொருட்களுடன் கல்லறைக்கு இரண்டு பேர் சென்றனர் என்றும் (மத் 28:1) மூன்று பெண்கள் சென்றனர் என்றும் (மாற் 16:1) வேறுபாடான மரபுகளைக் காண்கின்றோம். கல்லறை வாயில்வெண்ணாடை அணிந்த ஒருவர் என்றும் (மாற் 16:5), மின்னொளி வீசும் ஆடை அணிந்த இருவர் என்றும் (லூக் 24:4) வேறுபாடான குறிப்புகள் காணப்படுகின்றன. அதுபோலவே உயிர்த்த ஆண்டவர் இயேசு தூய ஆவியை அனுப்புவார் என்ற வாக்குறுதி ஒருமரபிலும் (லூக் 24:49) தானே ஆவியை தனது சீடர்களுக்கு அளித்ததாகப் பிற்கால மரபும் (யோவா 20:22) இருப்பதைக் காண்கின்றோம்.

இதுபோன்ற வேறுபாடுகளைக் கண்டு நற்செய்தி நூல்கள் தருபவை உண்மையல்ல என்று முடிவெடுத்துவிடக் கூடாது.

இளந்திருச்சபையில் அன்றைய கிறிஸ்தவ மக்களிடையே நிலவிய வெவ்வேறான மரபுகளையே வெளிப்படுத்துகின்றன. மேலும், இறந்து, கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட இயேசு உயிர்த்துவிட்டார் என்பது கிறிஸ்தவர்களின் வெறும் நம்பிக்கை மட்டுமல்ல. அது மறுக்கமுடியாத ஒரு வரலாற்று உண்மையை நேரடியாக எடுத்துரைப்பது அவ்வளவு எளிதல்ல அதனால் தான் இயேசு அடக்கம் செய்யப்பட்ட கல்லறை காலியாக இருந்த நிலையை இயேசுவின் உயிர்ப்பு முதல் சாட்சியாக எடுத்துக்கொள்கின்றன.



### உயிர்ப்பின் முதல் சாட்சி

இயேசு அடக்கம் செய்யப்பட்ட பின் அவரது உடல் அக் கல்லறையிலேயே இருந்திருக்க வேண்டும். ஆனால் மூன்று நாட்களுக்குப் பின் அக்கல்லறை காலியாக இருந்தது. இதனை அனைத்து நற்செய்தியின் பாரம்பரியங்களும் தெளிவாகவே எடுத்துரைக்கின்றன. (மாற் 15:1-6, மத் 28:1-8, லூக் 24:1-8, யோவா 20:1-2)

இதன் மூலம், இச்செய்தியின் உண்மையையும் முக்கியத்துவத்தையும் நாம் நன்கு உணரமுடிகின்றது. 'காலியான கல்லறை' என்பது கிறிஸ்தவர்கள் பிற்காலத்தில் சொல்லப்பட்ட கதை. அதில் உண்மையில்லை என்று மக்கள் நினைக்கக்கூடும் என்பதை உணர்ந்த ஆதித் திருச்சபை, அக்கல்லறைக்கு யூதர்களே தங்கள் காவலர்களை நியமித்தனர் என்று குறிப்பிடுகிறது. (மத் 27:64 – 65). அக்காவலர்கள் கல்லறையை மூடியிருந்த கல்லுக்குச் சீல்வைத்து, கருத்தாய் கண்காணித்தனர் (மத் 27:66).
இயேசுவின் உடலைத் திருடிவிட்டனர் அவர் உண்மையில் உயிர்க்கவில்லை என்று ஒருசில யூதர்களின் கூற்றினை முறியடிக்கவே இந்நிகழ்ச்சியை மத்தேயு குறிப்பிடுகிறார்.

### கல்லறையின் சாட்சிகள்

யாராலும் இறந்த இயேசுவின் உடலைத் திருடிவிட முடியாது என்ற உறுதியான நிலை உருவாகி விட்டதுடன் இயேசுவின் உயிர்ப்புக் காட்சிகளை வருணிக்கின்றனர் நற்செய்தியாளர்கள். இதன் மூலம் இயேசுவின் உயிர்ப்பு நிகழ்ச்சியின் வரலாற்று உண்மையையும், அதில் அடங்கியுள்ள இறையாற்றலையும் தெளிவாக விளக்குகின்றனர். இதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட முதல் சாட்சி கல்லறையில் பெண்கள். வாரத்தில் முதல் நாள் இயேசுவின் கல்லறைக்கு பெண்கள் சென்றனர் என்று நான்கு நற்செய்தியாளர்களும் குறிப்பிடுகின்றனர். "பேதுருவின் நற்செய்தி" என்ற நூலில் இயேசுவின் உயிர்ப்புக் காட்சிகள் பற்றி குறிப்பிடும் போது அது ஆண்டவரின் நாளான ஞாயிற்றுக்கிழமையில் நடந்ததாக காணப்படுகின்றது. "அதிகாலையில்" என்று மாற்குவும் (16:2), "விடியற்காலையில்" என்று மற்ற மூவரும் நேரம் பற்றிக் குறிப்பிடுகின்றனர். சென்ற பெண்களின் எண்ணிக்கையை நற்செய்தியாளர்கள் வெவ்வேறாகக் குறிப்பிட்டாலும், பெண்கள் சென்றது உண்மை என்பதை மறுக்கமுடியாது. அதேபோன்று கல்லறை வாயிலில் இருந்த கல் அது பெரிய கல் என்றும் (மத் 27:60, மாற் 16:4), காவலர்களால் கவனமாக அங்கே வைக்கப்பட்டது என்றும் (மத் 27:66), "யார் நமக்கு இக் கல்லைப் புரட்டிவிடுவர்" என்று பெண்கள் கவலைப்பட்டதாகவும் (மாற் 16:3) குறிப்பிட்டு உயிர்ப்பில் அடங்கியுள்ள இயல்புக்கு மாறான இறையாற்றலை வலியுறுத்த விரும்பினர். அதனால்தான் அக்கல் தானே புரண்டிருப்பதாகவும் (மாற் 16:4), வானதூதர் புரட்டிவிட்டதாகவும் (மத் 27:2) எழுதுகின்றனர் நற்செய்தியாளர்கள்.

இறந்தவர் மீண்டும் உயிர்பெற்றெழுந்து வரயியலாத யூதரின் பொதுவான கருத்தை அக்கல் வெளிப்படுத்துகிறது. இருப்பினும் இறந்த இயேசு உயிர்த்துவிட்டார் என்பதைக் குறிக்க, "ஆண்டவரின் தூதரே அக்கல்லைப் புரட்டினார்" என்று மத்தேயு கூறுகின்றார் (மத் 28:2)
பொதுவாக பெண்களின் சாட்சியத்தை ஒரு பொருட்டாக யூதச் சமுதாயம் எடுத்துக் கொள்வதில்லை (லூக் 24:11) எனவே, பெண்கள் மட்டுமல்ல, திருத்தூதர்களும் கல்லறைக்குச் சென்றனர் என்று லூக்காவும் (24:12) யோவானும் (20:2) குறிப்பிடுகின்றனர். இயேசு அன்பு செய்த சீடரை யோவான் சேர்த்துக்கொண்டாலும், இருவருமே பேதுருவைக் குறிப்பிடுவதில் சிறப்பு உண்டு.

இயேசு கல்லறையில் இல்லை என்பதை திருத்தூதர்களின் தலைவரான பேதுருவே கண்டார் என்பதை இளந்திருச்சபைக்கு எடுத்துரைத்து காலியான கல்லறை பற்றிய வரலாற்று உண்மையை வலியுறுத்த நற்செய்தியாளர்கள் விரும்பினர்.

காலியாயிருந்த கல்லறை என்பது உயிர்த்த ஆண்டவருக்கு முதன்மையான சாட்சியைத் தருவதில்லை. இருப்பினும் இத்துடன் தொடர்புப்படுத்திக் காணப்படும் வானதூதரின் அறிவிப்பு, கல்லறையில் காவலர்கள் கதிகலங்கி நிற்கிறது, பேதுரு, யோவான், பெண்கள் போன்றோர் கல்லறையைப் பார்வையிடல் இவை யாவும் சேர்ந்து ஆண்டவரின் உயிர்ப்புக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

"சாவு முற்றிலும் அழிந்தது, வெற்றி கிடைத்தது" என்று (1கொரி 15:54) முழக்கமிட்ட புனித பவுலின் விசுவாச சத்தியத்தை இக்காலியான கல்லறை வெளிப்படுத்துகிறது என்பது உண்மைதான். ஆனால், நாசரேத்தூர் இயேசுவின் உயிர்ப்புக்கு அவர் அடக்கம் செய்யப்பட்ட கல்லறை காலியாக இருந்தது என்பது முதன்மையான சான்று அல்ல. இருப்பினும் இயேசு உயிருடன் எழுப்பப்பட்டார் என்ற வரலாற்று உண்மையினை இது கோடிட்டுக் காட்டுவதை மறுக்க முடியாது.

## 1ம் பக்க தொடர்ச்சி....

## குருத்துவ திருப்பொழிவு....

### செபஸ்ரியாம் பிள்ளை அன்ரன் தவராஜா

அருட்சகோதரர் அன்ரன் தவராஜா அவர்கள் கற்கிடந்தகுளம் பங்கு, இசைமாலைத்தாழ்வு கிராமத்த்தைச் சேர்ந்தவர். இவர் திரு.திருமதி செபஸ்ரியாம்பிள்ளை றோசலீன் தம்பதிகளின் புதல்வனாக 12.03.1976ல் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை மன்/முருங்கன் மகா வித்தியாலம் மற்றும் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவு செய்தார். அருட்பணி. தேவசகாயம்பிள்ளை அடிகளார் அவர்களால் அழைத்தல் ஊக்கம் பெற்று, மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்த இவர், பின்னர் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் தனது மெய்யியல்கல்வியை நிறைவு செய்து மெய்யியல்மாணிப்பட்டத்தைப் பெற்றார். தொடர்ந்து. கண்டி தேசிய குருமடத்தில் இறையியல் கல்வியை நிறைவு செய்து இறையியல்மாணிப்பட்டத்தை பெற்றார். 26.11.2009 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் தாழ்வுபாடு, மன்னார் பேராலயப் பங்குகளில் திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார். மன்னார் மறைமாவட்ட குருவாக திருநிலைப்படுத்தப்படும் இவர் தனது முதல் திருப்பலியை இசைமாலைத்தாழ்வு புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் 19.04.2010 திங்கட்கிழமை அன்று காலை 9.30 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்

### வெலிச்சோர் எமில் எழில்ராஜ்

அருட்சகோதரர் எமில் எழில்ராஜ் அவர்கள் அடம்பன் பங்கு, மாந்தையைச் சேர்ந்தவர். இவர் திரு.திருமதி சுவாந்த குரூஸ் வெலிச்சோர் சந்தியோகு அருள்சீலி அன்னம்மா தம்பதிகளின் புதல்வனாக 11.12.1979 இல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை மன்/நாவற்குளம் றோ.க.த.க பாடசாலையிலும் உயர்கல்வியை மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவு செய்தார். அருட்பணி யேசுராஜா அடிகளார் அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்று, மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் பாதம் பதித்த இவர். பின்னர் கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்து மெய்யியல்மாணிப்பட்டத்தை பெற்றார். தொடர்ந்து கண்டி தேசிய குருமடத்தில் இறையியல் கல்வியை நிறைவு செய்து இறையியல்மாணிப்பட்டத்தை பெற்றார். 26.11.2009 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் தலைமன்னார், பள்ளிமுனை பங்குகளில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார். மன்னார் மறைமாவட்டக் குருவாக திருநிலைப்படுத்தப்படும் இவர் தனது முதல் திருப்பலியை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் 18.04.2010 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்.

### பத்தினாதன் சத்தியசீலன் அ.ம.தி

அருட்சகோதரர் சத்தியசீலன் அவர்கள் அடம்பன் பங்கு, சகாயவீதியைச் சேர்ந்தவர். இவர் திரு.திருமதி பத்தினாதன், எலிசபெத் தம்பதிகளின் புதல்வனாக 26.03.1979 இல் பிறந்தார். தனத ஆரம்பக் கல்வியை அடம்பன் றோ.க.த.க பாடசாலையிலும் உயர்கல்வியை யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவு செய்தார். அருட்பணி ஜெரோ செல்வநாயகம் அடிகளார் அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்று, கொழும்புத்துறை புனித சூசையப்பர் சிறிய குருமடத்தில் பாதம் பதித்த இவர் பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் தனது மெய்யியல் கல்வியை நிறைவுசெய்து மெய்யியல் மாணிப்பட்டத்தை பெற்றார். தொடர்ந்து கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியை நிறைவு செய்து இறையியல்மாணிப்பட்டத்தை பெற்றார். 22.10.2009 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் வஞ்சியன் குளப்பங்கில் தனது திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார். அமல மரித்தியாகிகளின் சபையின் [illegible] குருவாக திருநிலைப்படுத்தப்படும் இவர் தனது முதல் திருப்பலியை அடம்பன் புனித வியாகுல மாதா ஆலயத்தில் 17. 04. 2010 சனிக்கிழமை அன்று காலை 9.30 மணிக்கு ஒப்புக் கொடுப்பார்.

### கிறிஸ்துராஜா தேவராஜன் பீரிஸ்

அருட்சகோதரர் தேவராஜ் பீரிஸ் அவர்கள் முத்தரிப்புத்துறை பங்கைச்சேர்ந்தவர். இவர் திரு.திருமதி பிலிப்பு கிறிஸ்துராஜா பீரிஸ் யுவானிஸ் சவிரியம்மா பர்னாந்து தம்பதிகளின் புதல்வனாக 26.12.1981ல் பிறந்தார். தனது பாடசாலைக் கல்வியை மன்/அரிப்பு றோ.க.த.க. நவோதய வித்தியாலயத்தில் நிறைவு செய்தார். அருட்பணி. அருள்ராஜா C.M.F. அடிகளார் அவர்களால் அழைத்தல் ஊக்கம் பெற்று, நீர்கொழும்பு கட்டுவ புனித கிளாரட் சிறிய குருமடத்தில் பாதம் பதித்த இவர், பின்னர் கண்டி தேசிய குருமடத்தில் மெய்யியல், இறையியல் குருத்துவ கல்வியை நிறைவு செய்து மெய்யியல்மாணி, இறையியல் மாணிப்பட்டங்களைப் பெற்றார். 24.10.2009 அன்று திருத்தொண்டராக உயர்த்தப்பட்ட இவர் குருநாகல் புலுபிட்டிய பங்கில் திருத்தொண்டர் பணியை மேற்கொண்டார். கிளரீசியன் துறவற சபை குருவாக திருநிலைப்படுத்தப்படும் இவர் தனது முதல் திருப்பலியை முத்தரிப்புத் துறை புனித செங்கோல் மாதா ஆலயத்தில் 17.04.2010 சனிக்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்னார் மறைமாவட்ட**
**மீள் குடியேற்ற பகுதியிலிருந்து......**

# மீள்குடியேற்ற மண்ணில் அன்பிய மறுமலர்ச்சி

விடத்தல்தீவு இலுப்பைக்கடவை அந்தோனியார் புர கிராமங்களில் அன்பிய செயற்பாடுகள் கடந்த காலத்தில் சிறப்பாக முன்னெடுக்கப் பட்டிருந்தாலும் போர்க்கால சூழமைவிலும் இடப்பெயர்வு – தடுப்பு முகாம் வாழ்க்கையினால் அவை கைவிடப்பட்டிருந்தன. மீண்டும் இக் கிராமங்களில் மக்கள் மீள்குடியமர்ந்த நிலையில் பங்குத்தந்தையர் களின் முயற்சியினாலும் அன்பிய ஆணைக்குழுவின் ஒத்துழைப்பினாலும் அன்பிய செயற்பாடுகள் புத்துயிர் பெற்றுள்ளன. அன்பிய ஆணைக்குழுவின் முதல் சந்திப்பில் அடையாளம் காணப்பட்ட அன்பிய பணியாளர்களுக்கு கடந்த 17.03.2010 அன்று அன்பிய பணியின் மூத்த உறுப்பினர் திருவாளர் பெஞ்சமின் அவர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு பணியாளர்களின் அர்ப்பணம் புதுப்பிக்கப்பட்டது. அதே தினத்தில் ஏற்கனவே அன்பிய ஆணைக்குழுவினால் சந்திக்கப்பட்ட இலுப்பக்கடவை - அந்தோனியார்புர கிராம மக்களிடையே அன்பிய அமைப்பு புதுப்பிக்கப்பட்டது. அதன்படி 137 குடும்பங்கள் 12 அன்பியங்களாக பிரிக்கப்பட்டு 24 அன்பிய பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு முதற்கட்டமாக குறுகிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

18.03.2010அன்று தேவன்பிட்டி கிராமத்திலுள்ள 151 குடும்பங்கள் அன்பிய இயக்குனர், அன்பிய தொடர்பக முழு நேர பணியாளருடன் இணைந்த மன்னார் மறைக்கோட்ட அன்பிய மத்தியகுழு உறுப்பினர் சிலரினால் தரிசிக்கப்பட்டன.





# மீள் குடியேற்ற மக்கள் மத்தியில் வாக்குவேட்டை மக்களின் மனநிலையை மதிக்காத அரசியல்வாதிகள்

## உண்மை நிலை உரைக்கின்றார் ஆட்காட்டிவெளி பங்குத்தந்தை



சொல்லமுடியாத துயரங்களை அனுபவித்து உடலிலும் உள்ளத்திலும் பாதிப்புற்று வாழ்விற்கான ஆதாரங்களை இழந்து பொருளாதாரம் முற்றாக சிதைக்கப்பட்ட நிலையிலும் கல்வி வளத்தில் பின்தள்ளப்பட்ட நிலையிலும் இருக்கும் மீள் குடியேற்றப்பட்ட மக்கள் மத்தியில் வாக்கு வேட்டைக்காக வந்து செல்லும் அரசியல்வாதிகள் தங்கள் பிரச்சாரத்தினால் மக்களை கற்பனை உலகிற்கு கொண்டு செல்கின்றனர். இம்மக்களின் தற்போதைய தேவைகளில் கவனம் செலுத்தாது, இயல்பு வாழ்விற்கு திரும்ப உதவி செய்யாது எதிர்கால வசந்தம் என்ற வாக்குறுதியை அள்ளி வீசுகின்றார்கள். இவர்களின் செயற்பாட்டிற்கு துணை போகும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்களால் கல்விச் சமூகம் பாதிப்புற்று விடுமோ என்ற அச்சம் நிலவுகிறது. இடப்பெயர்வினாலும், கால இழப்பினாலும், பௌதீகவள இழப்பினாலும் சரிந்து போயிலுள்ள கல்வி வளத்தை மீளக் கட்டியெழுப்பி மாணவர்கள் மட்டில் அதீத அக்கறை கொண்டு மேலதிக, மீட்டல் வகுப்புகள் ஊடாக அவர்களின் கல்வி வாழ்வில் ஒளியேற்றும் கடமையை உரியவர்கள் செவ்வனே ஆற்ற வேண்டியது காலத்தின் கட்டாயம். இதை உணர்ந்து அரசியல் லாபங்களுக்கு விலை போகாமல் அனைவரும் விழித்தெழுந்து எம் சமூகத்தை கட்டியெழும்பும் கிறிஸ்தவ மனநிலையை கொண்டு வாழ முன்வாருங்கள் என்று தன் ஆதங்கத்தை அறிக்கையிட்டிருக்கிறார் ஆட்காட்டிவெளி பங்குத்தந்தை அருட்பணி S. ஜெயபாலன் அடிகளார்.

# காத்தான்குளம் புனித சூசையப்பர் ஆலய பெருவிழா

ஆட்காட்டிவெளி பங்கின் காத்தான்குளம் ஆலய இறைமக்கள் மூன்று வருடங்களுக்கு பின் சொந்த மண்ணில் தம் விண்ணக பாதுகாவலராம் புனித சூசையப்பருக்கு பெருவிழா எடுத்து மகிழ்ந்தார்கள் கடந்த 16.03.2010 கொடியேற்றத்துடன் விழா நாட்கள் ஆரம்பமாகி திரிதின வழிபாடுகளுடன் 19.03.2010 அன்று மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றப்பட்டது. பங்குத்தந்தையுடன் இணைந்து ஆலய மேய்ப்புப்பணி சபையினரும் ஆலய மக்களும் திருவிழாவை சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தனர்.

இம்மக்களில் பலருக்கு வீடுகளற்ற, தொழில் வாய்ப்புகள் அற்ற வாழ்விற்கான ஆதாரமற்ற சூழ்நிலையிலும் தங்கள் ஆலயத்தை இயலுமான வகையில் திருத்தி தம் பாதுகாவலருக்கு விழா எடுத்தது இவர்களின் ஆழமான விசுவாசத்தை பறைசாற்றுகின்றது.

## என் பெற்றோர் நிலை நினைந்து.....

அன்பெனும் குடும்ப மழையில்
அனுதின உறவில் நனைந்து
இன்புற்று பள்ளிக்கூடம் நான் சென்றேன்
அன்றொரு நாள் கலவரம்

வீட்டினில் தாய் வேலைத்தளத்தில் தந்தை
கல்விக் கூடம் விட்டு ஓடி வந்தேன்
தாயும் இல்லை தந்தையும் இல்லை
தேடியலைந்து கடைசியில்
அநாதையானேன்

வருவோர் போவோர் என் கண்களுக்குத்
தாயும் தந்தையுமான கானல் நீர்
எங்கே என் அன்பு தெய்வங்கள்
ஏக்க பெருமூச்சின் தனிமையில் நானின்று

கண் காணா நிலையில் என் பெற்றோர்
கல்லாகிபோனதே என் வாழ்வு
ஆனந்த மழையில் அகமகிழ்வதெப்போ?
அன்பெனும் கடல் மூழ்கி
முத்தெடுப்பதெப்போ?

*அ. றூபிகா லியோன்,*
*அரிப்பு, சிலாபத்துறை.*

# கல்வி வளத்திற்கான ஏக்கப் பெருமூச்சுடன்

**A. தேவதாஸ், அதிபர் – மன் /தேவன்பிட்டி றோ. க. த. க. பாடசாலை**

றோமன் கத்தோலிக்க திருச்சபையினூடாக வளர்த் தெடுக்கப்பட்டு பின் அரச பாடசாலையாக்கப்பட்ட, மிகவும் பழமை வாய்ந்த பாடசாலையில் ஒன்றே, எமது மன் /தேவன்பிட்டி றோ. க. த. பாடசாலையாகும். இது மன்னார் மாவட்டத்தின் வடக்கு நோக்கி இருக்கும் இறுதிக் கிராமமாகும். அத்துடன் மடுவலயத்தின் வடக்கேயுள்ள இறுதிப் பாடசாலையுமாகும். இப்பாடசாலை அமைந்துள்ள பிரதேசம் கடற்கரை பிரதேசமாக இருப்பதால் குடிநீருக்கு காலாதி காலமாக மக்கள் சிரமப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இங்கு தற்போது 1-11வரையான வகுப்புக்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 300 வரையிலான மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். இவர்களின் கல்வி நிலை நடந்து முடிந்த அசாதாரன சூழ்நிலை, இடப்பெயர்வு என்பனவற்றிற்குப் பின் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதை நான் அவதானிக்கின்றேன். இந்த கல்வி நிலைக்கான காரணத்தை ஆராயும் போது முன்பு குறிப்பிட்ட காரணங்கள் முதன்மை பெறுகின்றது. மாவட்டத்தின் கடைசி கிராமம், மடுவலயத்தின் இறுதி தூரப் பாடசாலை இத்தோடு ஆசிரியர்கள் தங்குவதற்கான அனைத்து வசதிகளும் போதாத நிலையும் இங்கு வாழும் மக்களின் பொருளாதார, வாழ்வாதார குறைபாடுகளும் காரணங்களாக அமைகின்றன.

1998ம் ஆண்டு க. பொ. த. சாதாரணதரம் இப்பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் இன்று வரை இப்பிரதேச மக்களிடம் இருந்து இரண்டு ஆசிரியர்களே தெரிவு செய்யப்பட்டு, கடமை புரிந்து வருகின்றனர். இங்கு இக்காலப் பகுதிக்குள் 10 வரையிலான ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தால் ஓரளவிற்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர் தேவை பூரணப்படுத்தப்பட்டிருக்கும். இங்கு பணியாற்றும் அதிபர் ஆசிரியர்கள் மட்டில் பெரும் மதிப்பும் அக்கறையும் செலுத்தும் இம்மக்களுக்கு கல்வியில் தாம் முன்னேற வேண்டும் என்ற அவா பெரும் விருட்சமாக அவர்கள் மனங்களில் வேரூன்றிக் கிடக்கின்றது.

மீள் குடியேற்றத்தின் பின் இப்பாடசாலை 15.02.2010 இல் இருந்து ஆலய விறாந்தைப் பகுதியிலும் மர நிழலின் கீழும் தற்காலிகமாக இயங்குகின்றது. பாடசாலையின் கட்டடங்கள் முற்றாக சேதமடைந்துள்ளதாலும், பாடசாலை வளாகத்தினுள் எப்பொருட்களும் இன்றி வெறுமையுற்று இருப்பதாலும் மாணவர்கள் அங்கு கல்வியைத் தொடர முடியாத நிலை உள்ளது. கட்டடம் மற்றும் ஆசிரியர் விடுதி, தளபாடம் போன்ற தேவைகளை முன்னுரிமைப் படுத்தி செய்வதற்குரிய நடவடிக்கையை மடுக்கல்வி வலயம் எடுத்துள்ளது. ஏனைய வசதி வாய்ப்புக்களையும் படிப்படியாக செய்து தருவதாகவும் கூறியுள்ளது. இவ்வசதிகள் எமக்கு வெகு சீக்கிரம் செய்து தரப்பட வேண்டும் இடப்பெயர்வின் பின் இம்மாணவர்களின் கல்வி நிலை மிகவும் குறைவாக உள்ள இந்த நிலையில் இவ்வாண்டு பாடசாலை நாட்களும், முதலாம் தவணையைப் பூர்த்தி செய்ய எத்தனித்துக் கொண்டு இருக்கின்றன. இவ்வாறான நிலைகளில் O/L தரம் 05ம் மாணவர்களின் பரீட்சைக்கு ஆயத்தம் செய்வது என்பது மிகவும் எளிதான காரியமாக அமையப் போவதில்லை.

எனவே தொடர்ந்து வரும் காலங்களில் இப்பாடசாலைக்கான ஆசிரியர் வளம், மற்றும் இதர நவீன கல்வி வசதிகள் வாய்ப்புக்களை ஏற்படுத்தி, இழந்த கல்வியை மீளப் பெறவும், அடிப்படை மொழி, எண் விருத்திகளை சீர்செய்யக் கூடிய செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவும், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் தேங்கிக் கிடக்கும் கல்வி மீது உள்ள அக்கறை மேலும் வளப்படுத்துவதன் ஊடாகவும் இங்கு ஒரு வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் எனவே நல்மனம் கொண்டு கல்வி உலகில் பிரவேசித்து சிந்தித்து செயற்படும் அனைவரும் இம்மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு துணை புரிய முன்வர வேண்டும்.

# உதவி தேவைப்படுவோருக்கு உதவிடத் தயங்காதே

**தகவல் : எ. ஜோய் ஜயந்தன்**

கடந்த முப்பது வருடகால கொடூர யுத்தம் பல இலட்சக்கணக்கான அப்பாவி மக்களை நிலைகுலைய வைத்தது அனைவரும் அறிந்த உண்மையே. உயிரிழப்புக்கள், இடப்பெயர்வுகள், உடமைகள் அழிவு. பொருளாதாரப் பின்னடைவுகள், கல்விப்பாதிப்பு, வேலைவாய்பின்மை, கலாச்சாரசீர்கேடுகள் என்றவாறு பாதிப்புக்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அந்த வகையில் அனைத்தையும் இழந்து இன்று சொல்லன்னாத் துயரில் மூழ்கி அவதியுறுவோர் எண்ணிலடங்கா. இவர்களது அவல நிலையை போக்க முன்வருவோர் பாராட்டுக்குரியோர். வெளிநாட்டு உதவிகள், அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவிகள், என பல வழிகளிலும் இம்மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படினும் இவைகள் அனைத்தையும் விடமேலானவை யாதெனில் தேவையில் இருப்போரை இனங்கண்டு அவர்களின் இடங்களுக்கு பயணம் செய்து அவர்களை சந்தித்து உரையாடி உறவாடி அவர்களது அபயக்குரலிற்கு செவிமடுத்து ஆற்றுப்படுத்தல் மூலம் அவர்களை தேற்றி தம்மிடமுள்ளதை அவர்களோடு பகிர்ந்து கொள்ளுவதேயாகும். இதுவே உயர்ந்த உன்னதமான செயலாகும். கொடுப்பதால் எவருக்கும் குறைவு ஏற்படுவதில்லை. கொடுப்பவரும் பெறுபவரும் நிறைவடைகின்றனர். கொடுப்போரின் கரங்களை இறைவன் தாங்கிக்கொள்கின்றார். கொடுப்போரின் கரங்கள் சோர்வடைவதில்லை.

இந்த வகையில் மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் ஆதரவில் தென்பகுதி மறைமாவட்டங்களான கொழும்பு, சிலாபம், பதுளை ஆகியவை அல்லல்படுவோருடன் நட்புடன் உறவாடி தம்மிடமுள்ளவைகளைப் பகிர்ந்துகொள்ளும் உயர்ந்த நோக்கத்தோடு முன்வந்தமை பாராட்டுக்குரியது. எமது மறைமாவட்ட ஆயருக்கும் சிலாபம் மறைமாவட்ட ஆயருக்குமிடயிலான கலந்துரையாடல் காரணமாக சிலாபம் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் செயற்பாடானது மன்னார் மறைமாவட்டத்தில் மீள்குடியேற்றம் இடம்பெற்ற பங்குகளில் ஒன்றான ஆட்காட்டிவெளிப் பங்கின் சாளம்பன் கிராமத்தில் இடம்பெற்றது.

சிலாபம் மறைமாவட்டத்திலிருந்து வந்த இளைஞர் குழாம் சாளம்பன் கிராமத்தின் அழிவுகளை நேரில் பார்வையிட்டதன் பின்பு அவ்வூர் மக்களைச் சந்தித்து கலந்துரையாடியபின் தாம் கொண்டுவந்த உதவிப்பொருட்களை வழங்கினர். இச்செயற்பாடானது சாளம்பன் வாழ் மக்களிற்கு பெரும் மகிழ்ச்சியை அளித்தது மட்டுமல்லாது இரு இனங்களிற்கும் இடையே புதிய உறவையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தியது இங்கு குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

இந்த வகையில் ஏனைய மறைமாவட்டங் களும் தமது உதவிக்கரங்களை வறுமையில் இருப்போரை நோக்கி நீட்டவேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தை மனத்தில் கொண்டு கொழும்பு மற்றும் பதுளை மறைமாவட்டத்தின் இளைஞர் ஆணைக்குழு இயக்குனர்கள் தமது ஆரம்ப செயற்பாடாக எட்டு துவிச்சக்கர வண்டிகள் ஆட்காட்டிவெளிப் பங்குத்தந்தை அருட்திரு ச.ஜெயபாலன் அடிகளாரால் தெரிவுசெய்யப்பட்ட 8 மறைஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன. இவ்வுதவியானது அவர்களது பணிகளுக்கு பேருதவியாக இருக்கும் என்பது அனைவரது நம்பிக்கை. அத்தோடு அதே தினத்தில் பதுளை மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவும் கரிதாஸ் ஜெனசவிய அமைப்பும் இணைந்து ஐந்து துவிச்சக்கர வண்டிகளையும் நூற்றுக்கு அதிகமான உணவுப்பொதிகளையும் வழங்கியமை பாராட்டுக்குரியதாகும். ஏனைய மறைமாவட்டங்களும் இது போன்ற நற்பணிகளை செய்து இரு இனங்களுக் - கிடையேயும் நல்லதொரு புரிந்துணர்வை ஏற்படுத்துமாறும் சிறுதுளி பெருவெள்ளம் என்பதற்கமைய சிறு உதவிகளையாயினும் பெருமனதுடன் உவந்தளித்து எமது மக்களின் மனங்களில் மகிழ்ச்சி ததும்பச் செய்யுமாறும் மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருட்திரு பி. ஜேசுராஜா அவர்கள் தென்னிலங்கையின் ஏனைய மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுக்களின் இயக்குனர்களை கேட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸ்கா பொழிவு

## உயிர்ப்பு விழா பயணமும், பணியமும்

அருட்பணி. ஜெறி சே.ச.

ஈஸ்டர் திருவிழிப்பும், உயிர்ப்புப் பெருவிழாவும் கிறிஸ்தவ இயக்கத்தின் எழுச்சித் தினங்கள் - வரலாற்றின் துவக்கம் முதல்!

ஈஸ்டர் என்ற வார்த்தை வந்ததற்குப் பல்வேறு வியாக்கியானங்கள் இருக்கின்றன. அனைத்தும் இங்கு எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. எனினும் பரவலாகக் கோடிட்டுக் காட்டப்படும் விளக்கமொன்றை எடுத்தியம்புவது இவ்விழாவிற்கு அர்த்தமும் அழுத்தமும் தரும்.

"ஈஸ்ட்" – East – என்பது திரிந்து விரிந்து ஈஸ்டர் என வரலாயிற்று. மேற்கே மறையும் கதிரவன் ஈஸ்டிலே – கிழக்கிலே மீண்டும் உதயம் பெறுகின்றான். அதுபோலவே அநீதியின் செயல்பாடான சிலுவையைச் சுமந்து கொலை செய்யப்பட்டு கீழே அடக்கமானவன், நீதியை நிலைநாட்ட மீண்டும் மேலே உயிர்ப்புப் பெறுகின்றான். இரத்தத் திலகமிட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டவன், இலட்சியத் திலகமிட்டு வெளிச்சத்திற்கு வந்ததுமட்டுமல்ல!

- 4 – ஆம் நூற்றாண்டின் காலத்திலெல்லாம்! இத்தின திருவிழிப்பு, சனியன்று இரவு முழுவதும் இருந்தது ஞாயிறன்று வழிபாடு இல்லை.
- 6 – ம் நூற்றாண்டின் போதுதான் திருவிழிப்பு என்று சனி நடு இரவும், உயிர்ப்பு விழா என்று ஞாயிறு தனி வழிபாடும் நடைமுறைக்கு வந்தன.
- "ஈஸ்டர் திருவிழிப்பு – திருவிழிப்புக்களுக் கெல்லாம் தாயானவள்" என்பார் புனித அகுஸ்தீனார்.
- கி.பி 325ஆம் ஆண்டு முதற்கொண்டு, நிசியா திருச்சங்கத்தின் முடிவுப்படி, இலையுதிர் காலத்தின் பௌர்ணமிக்குப் பின்வரும் முதல்



ஞாயிறை, உயிர்ப்பின் ஞாயிறாக ஏற்றுக் கொள்ளப்படும் வரலாறு வந்தது.

- இதனால் யூதர்களின் பாஸ்கா கடத்தல் பெருவிழாவையொட்டி எப்போதும் உயிர்ப்பு ஞாயிறு வராது போனது.
- ஒளி வழிபாடு
- திருமுழுக்கு வழிபாடு
- நற்கருணை வழிபாடு என நான்கு முக்கிய பாகங்களாக விரியும் இந்தத் திரு இரவு வழிபாடானது நெடியது.

ஏன்?

அமாவாசை அமாவாசையாக என்றும் இருக்கப்போவதில்லை, அதற்கும் உண்டு பௌர்ணமி வந்தே தீரும். அதற்கும் உண்டு வளர்பிறை, தேய்பிறை.

சத்தியத்திற்கு சமாதி இருந்ததாக சரித்திரம் இல்லை.

சமதர்மமும் சகோதரத்துவமும் சாவைச் சந்தித்ததாக சரித்திரம் இல்லை.

சமத்துவமும் சகாப்தத்திற்கான சாத்தியங்களே சரிந்ததாக சரித்திரம் இல்லை. அப்படியே சரிவுகள் நிகழ்வதாகத் தென்பட்டாலும், அத்தகைய நிகழ்வுகள் நிரந்தரமானவையல்ல. கதிரவனை கருமேகங்கள் எத்தனை காலத்திற்குத்தான் மறைத்துக் கொண்டிருக்க முடியும்? நீருக்குள் பூத்த நெருப்பு தம் வெப்பத்தை வெளிக்கொணராமல் எத்தனை காலத்திற்குத்தான் மறைந்து இருக்க முடியும்? அடக்கம் செய்யப்பட்ட இயேசுவை கல்லறை கட்டுப்படுத்த முடியவில்லை, முடியாது! "கசக்கிப் பிழிந்து ருசித்துச் சுவைத்தபின் தூக்கி எறியப்படுகின்ற மாங்கொட்டைகள்
மரங்களாக விஸ்வரூபமெடுக்கும்
என்பதை மறந்து போயிருக்கின்றார்கள்."
உயிர்த்தவர் இயேசு மட்டுமல்ல. உயிர்த்தது அவரது சீடர்களும், சரித்திரமும், பயந்து பணிந்திருந்த சீடர்களும் மற்றவர்களும் கட்டியெழுப்பப்பட்டார்கள். சமுதாயம் உசுப்பப்படுகின்றது, சுதந்திரம் சரித்திரமாகிறது. "சுதந்திரம் என்பது அரசியல் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதை மட்டும் குறிப்பதல்ல. செல்வத்தையும், வளத்தையும், பாகுபாடின்றிப் பங்கிடுவதையும் சாதித் தடைகளையும் சமூக ஏற்றத் தாழ்வுகளையும், சமய சகிப்புத் தன்மையற்ற நிலையையும், ஆணாதிக்க வெளிப்பாடுகளையும், வகுப்பு வாதத்தையும் ஒழிப்பதே உண்மையான சுதந்திரத்தைக் குறிக்கும்" என்பார் - நேதாஜி
இறையாட்சியின் விழுமியங்களுக்காகவும் மானிட உரிமைகளுக்காகவும் போராடும் ஒவ்வொருவரிலும், ஒவ்வொரு குழுமத்திலும் ஒவ்வொரு சூழமைவிலும் இயேசு உயிர்க்கின்றார். நம்மில் உயிர்க்கின்றார், நாமாக உயிர்க்கின்றார்!

## உயிர்ப்பின் ஒளி



எளியவ ரெம்குறை நீக்க
ஏந்தலரும் வீண்பழியை
ஏற்றிட்டார் என் சொல்வோம்
ஏக பரன் வேதனையை

பாவங்கள் ஒன்று சேர்ந்த
பாரச் சிலுவையினை
பரமனும் சுமந்ததனைப்
பாவியர் நாம் மறவோம்

தூய வழி யன்றோ
தூயவரின் சிலுவைவழி
பாவியரை மீட்டிடப்
பரமன் சென்ற பாதையது

இருளினில் வீழ்ந்திடாது
இன்பமுடன் தொடர்ந்திடுவோம்
உயிர்ப்பின் ஒளியினில்
உறுதியுடன் சென்றிடுவோம்

வசந்தி சுவாந்த குரூஸ், வட்டக்கண்டல்

## உயிர்த்த தேவன்

உயிர்ப்பின் உண்மையினை அறிய
உள்ளங்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறதே
உன்னதத்தின் தேவன் - எம்
உள்ளங்களில் எழுந்தருள்வாரே!

உறவுடன் தொடர்ந்து நாம் ஒன்றுபட
உளமாறி மகிழ்ந்திட வேண்டுமென்று
உயிர்த்து விட்டாரே எம் தேவன் அவர் - எம்
உள்ளங்களில் எழுந்தருள்வாரே!

உன்னதத்தின் தேவன் புகழை
உலகினர் அனைவரும் அறிந்திடவே
உறவினருடன் ஒன்று கூடிட வேண்டும்
அப்போது எம்
உள்ளங்களில் எழுந்தருள்வாரே!

உயிர்ப்பின் மூலமாக தேவனின் மகிமையினை
உலகினருக்கு வெளிக்காட்டிய தேவன்
உறவுடன் நாம் அவரை தொடர்ந்திட – எம்
உள்ளங்களில் எழுந்தருள்வாரே!

தே. கிறிஸ்டி டொமினிக் துரம்- பேசாலை

## நிலைமை மாறட்டும்

உயிர்ப்பின் வெளிச்சம் உலகை நிரப்பட்டும்
இருட்டின் இராட்சதம் விரைதோடி மறையட்டும்

ஆலயத்தின் தெய்வம் அண்டைவீட்டுக்கு
குடிவரட்டும்
ஆயத்த வழிபாடு அங்கிருந்தே தொடங்கட்டும்

அகதி என்ற பதம் தன் அர்த்தத்தை
இழக்கட்டும்
உரிமையுடன் இங்கு மனிதன் வாழட்டும்

நிவாரணத்திற்கலைகின்ற நிலைமை மாறட்டும்
நிலையான தொழில் செயல் நெஞ்சங்கள்
நிமிரட்டும்

எங்கள் வயலெங்கும் இளங்காற்று வீசட்டும்
உழைக்கும் வர்க்கம் தன் களைப்பை
மறக்கட்டும்

இழப்பின் துயரங்கள் இதயத்துள் இருக்கட்டும்
இறையரசின் பெறுமதிக்காய் நம் பயணம்
நடக்கட்டும்

உயிர்ப்பின் வெளிச்சம் உலகெல்லாம்
நிறையட்டும்
இருட்டின் இராட்சதம் இனியேனும் அகலட்டும்

ஜெயபாலாஜி முருங்கன்

## வெறுமையான கல்லறை

அருட்பணி இம்மானுவேல் - தத்துவஇயல் இயக்குனர்
தேசிய குருமடம் - அம்பிட்டிய

*"பின்னர் கல்லறைக்கு முதலில் வந்து சேர்ந்த சீடரும் உள்ளே சென்றனர். கண்டார், நம்பினார்"* (யோவா 20:8)

### மரணத்தின் வடுக்கள்

பல காரணங்களால் மனிதர் மரணத்தை எதிர்கொள்கின்றனர். இன்றைய உலகில் இயற்கை மரணம், இயற்கை அனர்த்தங்களால் வரும் மரணம், மனித கொடுமையால் வரும் மரணம் என்று மரணத்திற்கு பல வடிவங்கள் உண்டு. ஒருவரது மரணம் கல்லறையில் முடிந்தாலும் அந்த இழப்பை சுமப்பவர்கள் ஆறுதல் பெற கல்லறையைத் தேடி வருவது வழமை. முறையாக நல்லடக்கம் இவர்களுக்குப் பெரும் ஆறுதலைத்தரும். தம்மவர்களின் இறந்த உடலைக் காணாமல் தவிப்போரும், முறையாக அடக்கம் செய்ய முடியாமல் தவிப்போரும் இன்று எம் நாட்டிலும் பலர் உள்ளனர்.

மனித சித்திரவதைகளால் கொல்லப் படுபவர்கள் அதிகம் ஆண்களே. மனித அவலங்கள் காரணமாக நிர்க்கதியற்று அதன் பதிவுகளைச் சுமப்பவர்கள் பெண்கள். பெண்களே தம் குடும்பத்தின் பாரங்களை சுமந்து தொடர்ந்து தம் பிள்ளைகளைப் பராமரித்து, நடைபெற்ற அநீதிகளுக்கு மாற்றுவழி காணக்கூடியவர்கள்.

### கல்லறை வெறுமையாக...


இயேசுவின் உயிர்ப்புக்கு முதல் சாட்சிகள் பெண்கள். யோவான் நற்செய்தியில் மதலேன் மரியாள் கல்லறை நோக்கி வருவதாகவும், மாற்கு நற்செய்தியில் மூன்று பெண்கள் வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. வெறுமையான கல்லறையைக் கண்ட இவர்கள் குழம்பிப் போனார்கள். பேரதிர்ச்சி இவர்களுக்குக் காத்திருந்தது. கல்லறையின் வாயிலில் கல் புரட்டப்பட்டிருந்தது. இவர்களுள் ஏற்கெனவே பல குழப்பங்கள் உணர்வுகள் காணப்பட்டன. இயேசுவின் சிலுவை மரண நிகழ்வுகளின் தாக்கங்கள், அவசர அவசரமான அடக்கம், இப்போது வெறுமையான கல்லறை. இங்கு கல்லறையின் நியதிகளும் மீறப்பட்டிருந்தன.

இயேசுவின் உடலை அவசரமாக அடக்கம் செய்தாலும் அந்த உடலுக்கு சமூக வழமைப்படி நறுமண தைலம் பூசி, முறையாகத் துணியால் மூட வேண்டும் எனும் நோக்கத்தோடு இந்தப் பெண்கள் வந்திருந்தார்கள். இதன்மூலம், தமது நினைவில் புதிய உறவைத் தொடங்க இருந்தார்கள். உடல் இல்லையென்றால் இவர்களது துன்பமும் தொடரும். இயேசுவின் உடலைத் திருடிவிட்டார்களே? இங்கு வெறுமை கல்லறையில் மட்டுமல்ல, இவர்களது உள்ளங்களிலும் இருந்தது. இந்த வெறுமை தொடரக்கூடாது. எனவேதான் இறந்தோருக்குக் கல்லறையிலும், சொந்தங்களின் இறந்த உடலை காணவோ அடக்கம் செய்யவோ முடியாத நிலையில் அவர்களுக்கு நினைவுத் தூபி எழுப்புவதும் உலக வழமையாகும்.

### இயேசுவின் வழிகாட்டல்....

கல்லறை மரணத்தின் அடையாளம். கல்லறை ஒப்புரவின் அடையாளம். கல்லறைக்குச் சென்று அமைதி, தம் வெறுமைக்கு ஒப்புரவு காண்பதுதம் மனிதர் வழக்கம். கல்லறையே வெறுமையான போது எங்கு ஆறுதல் பெறுவது?

கல்லறை வெறுமையாக இருந்தாலும் உயிர்த்த ஆண்டவர் இவர்களை வெறுமையாக விடவில்லை. மதலேன் மரியாளுக்குத் தோன்றி தன்னை வெளிப்படுத்தினார். வெறுமையான கல்லறையாக இருந்தாலும் அங்கு அவரைச் சுற்றியிருந்த துணி இருந்தது. யாராவது ஆண்டவரின் உடலை எடுத்திருந்தால் துணியோடு கொண்டுபோயிருப்பார்கள். இந்த வெளிப்பாடு யோவானுக்கும் பேதுருவுக்கும் நம்பிக்கையைக் கொடுத்தது. மேலும் உயிர்த்த ஆண்டவர் எம்மாவுஸ் பாதையில் சீடர்களுக்குத் தோன்றி அவர்களை வழிநடத்தினார். மூடியிருந்த அறையினுள் திடீரென சீடர்களுக்குத் தோன்றி பல உண்மைகளை வெளிப்படுத்தினார். திபேரியாக் கடலருகே சீடர்களுக்குத் தோன்றினார். இவ்வாறு அவர்களை உண்மையில் வழிநடத்தினார்.



### புதிய உறவு ....
### மரிய மதலேனாள் செயல்

இயேசுவின் உயிர்ப்புக்கு முதலில் பெண்களே சான்று பகர்ந்தனர். அதேவேளை அன்று சமூகத்தில் பெண்கள் ஆண்களோடு சமமாகக் கருதப்படவில்லை. இங்கு மரியா உயிர்த்த ஆண்டவரை சந்திக்கிறார். இந்த சந்திப்பு சில நிலைகளைக் கொண்டிருந்தது.

1. இரு வானதூதரைக் கண்டார். இவர்களது கேள்வி மரியா தன் உள்ளக் குமுறல்களை பகிர்ந்துகொள்ள வைத்தது.
2. தோட்டக்காரர் போல இயேசு... மீண்டும் கேள்வி. மீண்டும் பதில்.
3. உயிர்த்த ஆண்டவர் தன்னை வெளிப்படுத்தினார். "மரியா". மரியாளின் "ரபோனி". இங்கு இயேசு ஒரு புதிய உறவிற்கு மரியாவை அழைத்து வந்தார். இது புதிய ஆன்மீக உறவு. இதுவரை இயேசு போதகராக இருந்தார். இப்போது அவர் ஆண்டவர்.

மரியாளும் இயேசுவைப் பற்றிக்கொண்டிருப்பதில் நேரத்தை விரயம் செய்யாது, ஓடிச் சென்று தன் அனுபவத்தை அடுத்தவரோடு பகிர வேண்டும். இயேசு இங்கு ஒரு செய்தியைக் கொடுக்கிறார். மரியாள் சென்று ஆண்டவரின் செய்தியை சீடர்களுக்குச் சொல்ல வேண்டும். செயல்பட்டார் மரியாள்.

### எம் வாழ்வில் ஆண்டவர்.....

உடைமையிழந்து, சொந்தம் இழந்து, வாழ்விழந்து, எதிர்காலம் இழந்து வாழ்வே கல்லறையாகி நாம் தவித்தாலும், ஆண்டவர் எம்மை வெறுமையான கல்லறையோடு விட்டுவிடுவதில்லை. இதுவரை கல்லறை வெறுமையைக் கொடுத்தது. ஆனால் இயேசுவின் கல்லறை வாழ்வைக் கொடுக்கிறது. எனவே பேதுரு, யோவானைப் போல நாமும் கல்லறையை நோக்கி ஓடுவோம். அந்த வெறுமையில் ஆண்டவரைக் கண்டு வாழ்வு பெறுவோம்.

16ம் பக்கதொடர்ச்சி..............

### கவிதை நூல் வெளியீடு..............

கலாபூசணம் திரு.எஸ் ஏ. மிராண்டா, மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்பணி. தமிழ் நேசன், எழுத்தாளர் திரு.எஸ் டேவிற், கவிஞர்கள் திரு மன்னார் அமுதன், திரு.எஸ்.ஜெகன், திரு.எஸ்வி. சிவகரன் ஆகியோர் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டனர். இந்நிகழ்வுகளுக்கு பேசாலையின் எழுத்தாளர் திரு.எஸ்.ஏ. உதயன் அவர்கள் தலைமை தாங்கி தலைமையுரையினை வழங்கினார். நூல் நயப்புரையை திரு.பி. தர்மராஜா வழங்க பாராட்டுரைகளை திருமதி. செபஸ்ரியான் சுகந்தியும், அருட்பணி.பி.ஜெறோம் லெம்பேட் அடிகளாரும் நிகழ்த்தினர். பிரதம அதிதியால் சிறப்புரை கொடுக்கப்பட்டது. சமுதாயத்தில் பல்வேறு தளங்களையும் கவி வரிக்குள் கணக்கிட்டுள்ள ஆசிரியர், திரு.து. அமல்ராஜ் றெவலின் இப்படைப்பிற்காய் அவரை பாராட்டுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோசப்வாஸ் முனிவரின் குருத்துவப் பணி

# ஓர் சூழமைவுப்பார்வை

அருட்பணி. இ. அ. ஜெராட் B ரொசய்ரோ அ. ம. தி.

இக்கட்டுரையில் அன்றைய காலணித்துவ சூழமைவில் யோசப்வாஸ் முனிவரின் குருத்துவப் பணிப்பாங்கு அடிக்கோடிடப்பட்டு, இன்றைய சூழமைவில் குருத்துவப் பணி எதிர்கொண்டுள்ள சாவால்கள் சுட்டப்படுகின்றன.

## காலணித்துவ சூழமைவு

போர்த்துக்கேய, ஒல்லாந்த காலணித்துவ அரசியல், முதலீட்டு வர்த்தகப் பொருளாதார ஈடுபாட்டுடன் அடக்குமுறையும் நிலவிய காலமதுவாகும். இலங்கையில் கால்கொண்டிருந்த முன்னையவரை விரட்டி அடித்துவிட்டு, அவர்கள் பிடித்திருந்த இடங்களைக் கைப்பற்றி அப்பகுதி வாழ் மக்களை, குறிப்பாக கத்தோலிக்கரைத் துன்புறுத்தினார்கள் ஒல்லாந்தர்கள். இலங்கையின் மூலவளங்களைச் சுரண்டும் நோக்குடன் இங்கு நுழைந்த போர்த்துக் கேயருடன் வருகைதந்த குருக்களால் வளர்க்கப்பட்டது கத்தோலிக்கம். கத்தோலிக்க விசுவாசிகள் வளராது தடுப்பதில் முனைப்புக் கொண்டு, அக்குருக்களை நாடுகடத்தினார்கள் ஒல்லாந்தர்கள். குருக்கள் அயல் நாட்டிலிருந்து வருவதைக் கொலைக்குற்றமாக கணித்திருந்தனர். ஒல்லாந்தரின் சமய நம்பிக்கையை திணித்தனர். பள்ளிகளில் பிள்ளைகளுக்கும் கல்வீனிய சிந்தனையைப் புகட்டினர். கத்தோலிக்கர் தம் பிறப்பு, திருமணம், இறப்பு போன்ற பதிவுகளை ஆட்சியாளரின் வேண்டுகோளின்படி பதிவு செய்யவும் வற்புறுத்தப்பட்டார்கள். சாதுரியமான, 'வன்முறையற்ற' இந்த அடக்குமுறைக்கு ஒத்துழையாதவர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

## காலணித்துவக் கத்தோலிக்கம்

இப்பின்புலத்தில் கத்தோலிக்க விசுவாசிகள் ஆயனில்லாத ஆடுகளானார்கள். அயல் நாட்டுக் குருக்களால் வளர்க்கப்பட்ட கத்தோலிக்கத்தில் மக்கள் எண்ணிக்கை அதிகரிப்பு கவனத்தில் கொள்ளப்பட்டு, அதுவே மறைபரப்பு வெற்றியாகக் கணிக்கப்பட்டது. கத்தோலிக்க நிறுவனப்பாதுகாப்பும் பேணலுமே அன்றைய குருத்துவப் பணியில் முதன்மை பெற்றிருந்தன. கத்தோலிக்க விசுவாசிகள் பொம்மலாட்டப் பாவைகளாகப் பயிற்றப் பட்டிருந்தார்கள். சுயமண்ணில் சுய நிர்ணயத்துடன் வாழப் பயிற்றுவிக்கப் பட்டிருக்கவில்லை. குருத்துவத் தலைமைத்துவத்தை நாடி, அதில் தங்கி, சொல்வதைக் கேட்டு வாழும் நிலையிலேயே கத்தோலிக்கர் வளர்க்கப்பட்டார்கள்.

கத்தோலிக்கம் காலணித்துவர்களால் இலங்கையில் பேணப்பட்டது என்பது அனுகூலமான ஒரு பரிமாணமானாலும், விசுவாசத்தை வளர்க்கும், வாழும் முகாமையாளர்களான விசுவாசிகளின் உருவாக்கம் முழுமையானதாக அமையவில்லை. இன்றும் நிலைமை பெரும் மாற்றமடையவில்லை. மண்ணின் மக்களின் மொழியைப் பேசாத அறியாத குருக்களின் பணியில், அடித்தட்டு மக்களின் குரல், அழுகை, தேடல் முழுமையாகப் புரிந்து கொள்ளப்பட்டதா என்பது விமர்சனத்துக்கு உட்பட்டதாகும். அந்நியரின் ஆசார உருவில் இரவல் பொருளாகப் பேணப்பட்டு, பகிரப்பட்டதோ கத்தோலிக்க விசுவாசம் என்ற பிரமை ஏற்படுகின்றது. நம்மவரிடையே ஒரு பழக்கமிருந்தது. அரச, குடிமைச் சமூக சலுகைகளைப் பெறுவதற்காக காலணித்துவ ஆட்சியாளரின் சமயத்தைப் பின்பற்றினாலும், அவரவர் சமயச் சடங்குகள், சம்பிரதாயங்களையும் இரகசியமாகக் கடைப்பிடித்து, காலப்போக்கில் சைவர்களாக, பௌத்தர்களாக வாழ்வது. இதற்கு புவனேகபாகுவின் செயல்பாடுகள் ஓர் எடுத்துக்காட்டாகும். இக்காலணித்துவ சூழமைவு இடைஞ்சல்கள், இடர்கள், இன்னல்களுக்கு மத்தியிலும், கத்தோலிக்க விசுவாசிகள் மத்தியில் விசுவாசத்தை வாழவேண்டும் என்ற வாஞ்சையும், அதற்காகக் குருக்களைத் தேடும் நிலையும் இலைமறை காயாக காணப்பட்டன.

## யோசப்வாஸ் வருகை

இந்தியாவில், கன்னட மாநிலத்தில், கோவை என்ற பகுதியில் கொங்கனி மொழிபேசும் பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்த யோசப் வாஸ் அடிகளார், தமது குருத்துவ வாழ்க்கையின் ஆரம்ப காலத்தில் தம் ஊருக்கு அயலில் பணிபுரிந்தார். வழமையான குருத்துவப் பணி வாழ்க்கையில் மறையுரை ஆற்றல், இளைஞரை நெறிப்படுத்தல் போன்ற புதிய பணிப்பரிமாணங்களிலும் ஈடுபாடுகொண்டார். மக்கள் மத்தியில் உடன்பயணிப்பு, மக்களின் தேவைகளைக் குவிமையங்கொண்ட அர்த்தமுள்ள வழிபாடுகள், மக்களின் குரலை அறிந்து அறிவுரை வழங்கல், எளிமையான வாழ்க்கை என்பன அவரது குருத்துவ வாழ்வின் காலைப் பொழுதிலேயே விடியல் பெற்று, அவருக்கு பெயரும் புகழும் சேர்த்தன.

இக்காலகட்டத்தில்தான் இலங்கையில் கத்தோலிக்க விசுவாசிகளின் இன்னல்கள் பற்றிய செய்தி அவருக்கு எட்டியது. தான் கேள்வியுற்ற செய்தியில் இறைவனின் அழைப்பை மீண்டும் உணர்ந்து, கேட்க விழைந்தார். மக்களின் காலத்தை ஒட்டிய தேவைகளையும், அவர்களின் துயரங்களையும் அறியும்போது, இறை தூண்டலை உணர்ந்து செயல்படுவதே இறை அழைத்தலின் உண்மைத்தன்மையைப் பேணும் வழியாகும். இறை அழைத்தலில் இளமை குன்றாது, இயக்காற்றலுடன் வாழும் இரகசியமாகும். இப்பண்பை யோசப் வாஸ் அடிகளாரின் குருத்துவ வாழ்வில் உள்ளங்கை நெல்லிக்கனி போல காணமுடிகிறது.

இலங்கைக்கு ஓர் கத்தோலிக்க குரு செல்வது அவரது உயிருக்கே ஆபத்து என அறிந்தும் இலங்கை செல்வதற்கு எண்ணித் துணிந்தார். ஓர் இரவலர் வேடம் பூண்டு பயணமானார். எங்கு கரை சேர்வோம் என்ற ஆதங்கம் இன்றிப் பயணமானார். அவருக்கு இறை நம்பிக்கை, இன்னலுற்றவர் மத்தியில் பணிபுரியும் தெளிந்த பார்வை, அர்ப்பணிக்கும் மனத் திண்மம் நிறையவே இருந்தது. மன்னார் கரையில் இறக்கிவிடப்பட்டார். இரவல் இடங்களில் தங்கி, இரந்துண்டு, மக்களைச் சென்றடைய நடைபயணமானார். இலங்கையின் வடபகுதி, வடமேற்பகுதி, வன்னி நிலப்பரப்பு, மத்திய மலைப்பகுதி எனப் பயணித்தார். இப்பயணத்தில் மக்களுடன் உரையாடி, விசுவாசத்தை வாழ, அவர்கள் குருக்களைத் தேடும் அவர்களின் இலைமறைகாயாக இருந்த தேவையை அறிந்தார். இரவலர் வேடத்தில் ஓர் குருவை அடையாளங்கண்ட சிலர் அவருக்கு தங்குமிடமும் பாதுகாப்பும் அளித்தனர். ஆனால் அவ்விடங்களில் நிரந்தரமாகத் தங்கிடாமல், மக்களைத் தேடிச்செல்லும் தம் பயணத்தை தொடர்ந்தார். நோய்வாய்ப்பட்டார். ஆனால், மக்கள் கூடியிருந்த இடங்களுக்குச் சென்று, அவர்கள் மத்தியில் திருப்பலி நிறைவேற்றினார். நோயாளர்களுக்காக செபித்தார். அறிவுரைகள் வழங்கினார். காலணித்துவ சூழமைவில் சமூக அடித்தட்டில் தங்கி, பயணித்து பணிபுரிந்த பாங்கு அவரது பணிவாழ்வின் சிறப்பு அம்சமாகும். இலங்கையில் விசுவாசிகள் துன்புறுத்தப்பட்டு, வாழ்வே அச்சுறுத்தப்பட்ட ஓர் சூழமைவில், விசுவாசத்தில் மக்களை உறுதிப்படுத்தி, அவர்களைக் குழுமம் குழுமமாக வாழ்வித்த ஓர் முதன்மை பணி முகவராக யோசப் வாஸ் அடிகளார் விளங்குகின்றார்.

## இன்றைய சூழமைவுச் சவால்கள்

போர் முடிவுற்றதாகப் பேசப்பட்டாலும், அதற்குக் காரணியான முரண்பாடுகளை முகாமைப்படுத்துவதற்கும், முரண்பாடுகளை உடன்பாட்டிற்குத் திசைதிருப்புவதற்கும் உகந்த செயற்பாடுகள் வடிவமைக்கப் பெறாத நிலை காணப்படுகின்றது. இதனால் அரசியல் இலாபம் தேடுபவர்கள் மக்களைக் குழப்பியும், இன்னும் அவர்களைச் சிதறடிக்கச் செய்யும் நிலை வளர்கின்றது. ஒடுக்கலையும், சுரண்டலையும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஆதிக்க சக்தி சமயத்துக்குள்ளும் செயல்படுவதால், மேலாண்மை செலுத்தும் மதம், மொழி, பண்பாடு பாதிக்கப்பட்ட மக்கள் மீது



திணிக்கப்படுகின்றது. மக்களுக்கு குடிமைச் சமூக வாழ்வுக்கு வாய்ப்பின்மையால் மக்களின் நாளாந்த இயல்பு வாழ்வியல் பாதிப்பும், சமூக உடைவும் ஏற்பட்டுள்ளது. அடிப்படை வாழ்வியல் வளங்களை இழந்து. மீதமாய் இருப்பவை வாய்க்கு எட்டாத நிலையில், மக்கள் உளத் தாக்கத்தையும், சமூக ரீதியான பிரச்சினைகளையும் சந்தித்து நடைபாதை வாசிகளாகியுள்ளனர். இங்ஙணம், போரின் பின்விளைவுகளான மக்கள் வாழ்வியல் சவால்கள் புற்றீசல்கள் போன்று வளர்கின்றன. இயல்பு வாழ்வியலுக்கான இச்சவால்களுக்கு மத்தியில், குருக்களின் தேவையை மக்கள் உணர்கின்றார்களா? அப்படியாயின், மக்கள் அதற்குக் கூறும் காரணிகள் எவை?

## சவால்கள் மத்தியில் பணிவாழ்வு

மேற்கண்ட சில வாழ்வியல் சவால்களை அடித்தள மக்களுடன் இருந்து, மக்கள் பார்வையில் அறிவு பூர்வமாக, எடுத்த எடுப்பில் ஆன்மீகப்படுத்தாது, ஆராயவேண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட இடத்தின் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு எதார்த்தங்களையும், மெய்மைகளையும் முதலில் சீரிய முறையில் கணிப்பில் எடுக்கும் தேவையுண்டு. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் விழிப்புப் பெறச்செய்ய வேண்டிய தேவையுண்டு. அதற்கு மக்கள் மத்தியில் பயணிக்கும் பணிப்பாங்கு நடைமுறையாக வேண்டும்.

கிறிஸ்தவ இறையியலும், அருள்வாழ்வும் இறைவனின் சாயலாகவும், படைப்பின் சிகரமாகவும் உள்ள மானிடருக்கும், ஆள்-ஆள் உறவுக்கும் அதிக அழுத்தம் கொடுக்கிறது. விடுதலை உணர்வு, தோழமை, மனித நேயம், நீதி, நியாயம் போன்ற விழுமியங்களை ஒடுக்கப்படும் மக்கள் வாழ விரும்புகிறார்கள். ஆக, இறையாட்சி என்னும் சமத்துவ சமுதாயத்தை மலரச் செய்ய இயேசுவின் அம்மை-அப்பன் இறைமை அனுபவம் பணியாளரில் வளர்ந்து முதிரவேண்டும். இறைவன் மானிடரை நிபந்தனையற்ற முறையில் நிரந்தரமாக ஏற்று அன்பு செய்கிறார் என்ற ஆழ்நிலை அக அனுபவம் இறையாட்சியின் அடித்தளமாகும். இந்த அனுபவம் பணியாளனை அவனுக்குள்ளிருந்து வலுக்கட்டாயமாக உந்தித்தள்ளும் ஊனியல்புகளிலிருந்து (உரோ. 7:14-24) வெளியேறி பணியாளன் வாழும் சமுதாயத்திலிருந்து அவனை அழுத்தும் சமுதாய அந்தஸ்து, அதிகாரம், செல்வச் சேர்ப்பு போன்ற சக்திகளிலிருந்தும் விடுவித்து நம்பகத்தன்மையும், உண்மைத்தன்மையும் உள்ள பணியாளனாகிட ஆக்க சக்தியாகும்.

இவ்விறை அனுபவமிருந்தால், இறை நம்பிக்கையுடைய பணியாளர், இறைவனை, இறைவன் தாம் இருப்பதாக அவரே சுட்டிக்காட்டும் மக்களிலும், செயல் பாடுகளிலும், இடங்களிலும் தேடுகிறார்களா என்பது முதன்மையான கேள்வியாகும் (விப. 3:7-11 மத். 25. 31-46). அத்துடன், இறையாட்சி சமத்துவ சமூகத்தை உருவாக்கிட, கட்டிடங்களையல்ல, நீதியான அமைப்புக்களும், சூழலும் உருவாக்கப்படுவதில் முதன்மைக் கவனம் செலுத்தப்படுகின்றதா என்பதும் ஆராயப்பட வேண்டியதாகும்.

## நிறைவாக

மனிதமாண்போடு ஏழைகளை வாழவைப்பதும், அங்ஙணம் அவர்கள் வாழ்வதற்கான நிலைப்பாடுகள், செயற்பாடுகள், போராட்டங்களில் பங்கேற்பதுமே இன்றைய சூழமைவில் நம்மவரின் மானிட மீட்புக்கு வழியாகும். ஏழைகளின் வளமான வாழ்வே இறைவனின் மகிமையாகும். ஆக, இன்று பணியாளன் கடவுளைத் தியானித்தால், கடவுள் பணியாளனில் ஏழைகளின் விடுதலை வாழ்வுக்காக செயலாக்கம் பெறவேண்டும். இதுவே முனித்துவத்தின், முத்திப்பேற்றின் நம்பகத்தன்மையுள்ள வெளிப்பாடாகும்.

## அருளாளர் யோசவ்வாஸ் அடிகள் வாழ்வில் சில மைல்கற்கள்

- ❖ பிறப்பு : 21.01.1651 ❖ குருத்துவம் : 1676
- ❖ அன்னை மரியாளுக்கு அடிமையாக அர்ப்பண மடல் : ஆவணி 1677
- ❖ கர்நாடகாவில் பணி : 1681-1684
- ❖ கோவாவில் தியான யோக சம்பிரதாய சபை உருவாக்கம் : 1685
- ❖ மன்னாரில் கால்பதித்தது-சித்திரை: 1687
- ❖ இலங்கை மண்ணில் மறைந்து பணியாற்றியது:1687-1689
- ❖ மடுப்பகுதியில் பணியாற்றியது :1689-1690
- ❖ கண்டியில் ஒற்றன் என கைது செய்யப்பட்டு சிறைவாசம் : 1691
- ❖ கண்டியில் மழை பொழியச் செய்த அற்புதம் : 1693
- ❖ கண்டியில் வைஸ்தூரி நோயை நீக்கிய புதுமை 1697
- ❖ இலங்கை முழுவதுமான 2வது மறைத்தூதுப்பயணம் : 1698-1699
- ❖ சுதேச கலாசாரத்திற்கேற்ப இலங்கையில் பணி :1703 தொடக்கம்
- ❖ மூன்றாவது மறைத்தூது பயணமும் இலங்கையின் முதல் ஆயராக நியமன முயற்சி: 1705 ❖ இறப்பு : 16.01.1711
- ❖ முத்திபேறுபெற்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது 16.01.1995

அருளாளர் யோசவாஸ் புனித நிலைக்கு உயர்த்தப்பட தொடர்ந்து செபியுங்கள்

## நெருப்பை நெருப்பால் அணைப்பதா?

உயிரும் உடைமைகளும் மனித உரிமைகளும் என்றுமே பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதை ஏனோ இன்று பலர் மறந்து விடுகின்றனர். வன்முறைகள் வரலாற்றில் நெடுந்தொடராகத்தான் நீண்டு வருகின்றன. டேனியல் ஜோனா கோல்தகன் என்ற எழுத்தாளர், 'வொர்ஸ் தேன் வார்' என்ற தனது நூலில் வரலாற்றில் இடம்பெற்ற இனப் படுகொலைகளையும் இன அழிப்புக்களையும் பட்டியலிட்டுள்ளார். 1904ம் ஆண்டில் ஜெர்மன் பேரரசு தற்போதைய நமீபியாவில் ஹெரேரோ மக்களில் 80 விழுக்காட்டினை ஈவிரக்கமின்றி அழித்துள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டு 35வது அரசுத்தலைவர் ஹாரி ட்ருமன், இரண்டாம் உலகப் போரில் மூன்று இலட்சம் ஜப்பானியர்களை அழித்தார்.

துருக்கியர்கள், 12 இலட்சம் அர்மீனியர்களைக் கொலை செய்தனர், மேலும் எட்டு இலட்சம் பேரை நாடு கடத்தினர். ஹிட்லர், இரண்டாம் கிம் சுங், போலட் பாட், ஸ்டாலின், மாசே துங் போன்றோரது ஆட்சிகளில் இவை போன்ற இன அழிப்புக்கள் நடந்தன என்று கூறும் கோல்தகனின் பட்டியல் நீள்கிறது. 1994ம் ஆண்டில் ருவாண்டாவில் ஹுட்டு இனத்தவர் எட்டு இலட்சம் டுட்சி இனத்தவரைப் படுகொலை செய்தனர். மொத்தத்தில் இன அழிப்பு நடவடிக்கையில் கடந்த நூற்றாண்டில் 12 கோடியே 70 இலட்சம் முதல் 17 கோடியே 50 இலட்சம் பேர் வரை இறந்துள்ளனர் என்று கோல்தகன் எழுதியிருக்கிறார். கடந்த நூற்றாண்டு என்ன, கடந்த ஓராண்டில் மட்டுமே இல்ங்கையில் நடந்தது என்ன, கொல்லப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதை கணக்கிட முடியாது. சமூகங்களில் நடக்கும் இந்த வன்முறைகளுக்கு, அன்பர்களே, நாமும்

- தொடர்ச்சி 13ம் பக்கம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக மாற்றமே மனிதகுலத்தை மாண்புடையதாக உயர்த்தும்

வண.அ.சகாயநாதன் ஐ.வி.டி - கண்டி



"மாற்றமே மானிடத்தின் தத்துவம்" என்றான் ஒரு கவிஞன் நாம் எல்லோரும் மாற்றத்தை விரும்புகிறோம் எதிர்பார்க்கிறோம். மனித சிந்தனையே எண்ணற்ற மாற்றத்திற்கு வழிவகுத்தது. மாற்றம் இல்லாதிருந்தால் இவ்வுலகம் நில்லாது. அழிந்திருக்கும். நாம் காணும் விண்ணும் மண்ணும் கூட மாறாது இருப்பவைப்போலக் கண்ணுக்குத் தெரிகின்றது ஆனால் இது உண்மையன்று இவை சிறிது சிறிதாக மாறிக் கொண்டே இருக்கிறது. இதுதான் உண்மை. எனவே இயற்கையோடு இணைந்த நாம் மாற்றத்திற்கு உட்பட்டவர்களாகி வளர்ந்து வாழ்ந்து வளமுடையதாக வாழ்வை மாற்றிக் கொள்வோம்.

மனித குலத்திற்கான மாற்றம் இரண்டு வகையில் ஏற்படுகிறது. ஒன்று அகமாற்றம், மற்றது புறமாற்றம். ஒன்று கண்ணுக்குப் புலப்படாதது. மற்றொன்று வெளிப்படையாக தோன்றும் வெளிமாற்றம். இவை இரண்டையும் தனிப்பட்ட வாழ்வில் ஆய்வுக்குட்படுத்தி ஆன்மீகவாழ்வில், ஒழுக்கவாழ்வில் முன்னேறிச் செல்ல மனமாற்றத்தை ஏற்படுத்த காலத்திற்கு காலம் நமக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது, புற மாற்றத்தை வெளிப்படுத்துகின்ற ஞானச் செயல்கள் பலவுண்டு. அவற்றில் சில உண்ணா நோன்பு இருத்தல், மரக்கறி உணவை உண்டு தம்மை கட்டுப்படுத்துதல், காவி உடையணிந்து கடும் தவம் புரிதல், திருப்பலிக்கு ஒவ்வொரு நாளும் தவறாமல் செல்லுதல், சிலுவைப் பாதை சொல்லுதல், வழிபாடுகளிலெல்லாம் பங்குகொள்ளுதல், திருத்தலம் நோக்கிய பயணங்கள். இவை எல்லாம் தேவை மிக மிக நல்லது. ஆனால் இந்த புறமாற்ற செயல்கள் நம் அகவாழ்வை மாற்றுகின்ற செயல்களாக இருக்கவேண்டும். புதிய மனமாற்றத்திற்கு புடமிடப்பட்டதாக, புதிய வாழ்வை நோக்கி பயணிக்க வேண்டும். இப்படியான புறநிலை செயல்கள் கண்ணுக்குப் புலப்படாத அக நிலை மாற்றத்தை முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும். உடலின் மாற்றத்தைவிட உள்ளத்து மாற்றம் தான் தேவை. அதில்தான் நிலையான வாழ்வு அடங்கியிருக்கிறது என்பதை சிந்தித்து செயல்பட வேண்டும். புறமாற்ற செயல்கள் அகமாற்றத்திற்கு இட்டுச்செல்ல வேண்டும். இல்லையென்றால் பயனற்றது.

நாம் எல்லோரும் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதில் மிகவிருப்பம் கொண்டவர்கள். ஆன்மீகத்தில் அரசியலில் குடும்பத்தில், சமூகத்தில். இதில் நானும் ஒருவன் என்பதை எடுத்துவிடுகிறோம். அதனால் தான் விருப்பம் நிறைவேறுவதில்லை. உண்மையான மாற்றம் எங்கிருந்து வரவேண்டும் என்றால் முதலில் என்னில், அதுவும் அகத்திலிருந்து ஆன்மாவை தட்டி எழுப்புவதாக இருக்கவேண்டும். மாறாக நாம் அடுத்தவரிடம் எதிர்பார்க்கிறோம். அதனால் அக மாற்றத்தில் பின்னடைவு ஏற்படுகிறது. ஒரு திரைப்படத்தில் வருகின்ற நகைச்சுவை பாணியில் சில மாற்றத்தோடு சொன்னால் "மாறும் ஆனா மாறாது" இப்படி எமது ஆன்மீக வாழ்வில் இருந்துவிட கூடாது. புறமாற்றத்தை மற்றவர்களாலும் ஏற்படுத்தலாம். ஆனால் அகமாற்றம் மற்றவர்களின் அழுத்தத்தினால் அல்ல என்னுடைய விருப்பத்தினால்தான் ஏற்படுத்த வேண்டும். அது என் ஆன்மாவோடு தொடர்புடையது அதற்கு என் முழு விருப்பம் அவசியமானது, மற்றவர்களால் திணிக்கமுடியாது. ஆனால் புற செயலை கொண்டு அகமாற்றத்தை ஏற்படுத்த மற்றவர்களின் அறிவுரைகளை, வழிகாட்டுதல்களை பின்பற்றலாம்.

"ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கைகளை செலுத்த வரும்போது.... முதலில் அவரிடம் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்" (மத்5:23-24).

இந்த புறநிலை செயல் அகநிலை மாற்றத்திற்கு இட்டுச் செல்கிறது என்பதை இறைவார்த்தை தெளிவுபடுத்துகிறது. இப்படி பலவற்றை வேதாகமத்தில் படிக்கலாம். இயேசு சக்கேயுவை நோக்கி "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" (லூக் 19:9) என்றார். சக்கேயுவிடம் ஏற்பட்ட அகப்புற மாற்றத்தை இன்று யேசு நம்மிடம் எதிர்பார்க்கிறார். "நீங்கள் உங்கள் உடைகளை கிழித்துக்கொள்ள வேண்டாம். இதயத்தை கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" (யோவேல் 2:13).

நிறைவாக புறநிலை செயல்களோடு எம்மை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் அகநிலை செயல்கள் கடினமாக இருந்தாலும் ஆர்வத்தோடு மாற்றத்தை ஏற்படுத்தி முன்னேற வேண்டும். மனத்தில் தூய்மை, வாழ்வில் நேர்மை, உண்மை, நீதி, ஒழுக்கத்தில் நிற்றல், எதையும் விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, சமாதானத்தோடு வாழுதல், இருப்பதை பகிர்ந்து உறவை வளர்த்தல், அவதூறு பேசுவதையும் மற்றவர் நற்பெயரை கெடுப்பதையும் நிறுத்தி அகநிலை மாற்றத்தை ஏற்படுத்தி இறையரசு விழுமியங்களை நிலைநாட்டுவோம்.

## அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் அமரத்துவமாகி ஓராண்டு நிறைவு



பன்முக ஆளுமைப் பண்புகளைக் கொண்டிருந்த அமரர் அருட்சகோதரர் கலாநிதி ஜோண் பப்ரிஸ்ற் குரூஸ் F. S. C. அவர்கள் மீளாத்துயில் கொண்ட ஓராண்டு நிறைவு (23.03.2010) நினைவில் நின்று எம் இதய அஞ்சலியை இயம்புகிறோம். சிறந்த கல்விமானாகவும் மனித நேயமிக்க பண்பாளராகவும் தலை சிறந்த பேச்சாளராகவும் இறை அன்பிற்கும் மனித அன்பிற்கும் முன்னுதாரணமாகவும் திகழ்ந்து வாடாத புன்முறுவலுக்கு சொந்தக்காரராக இருந்த மன்னார் மண்ணின் மைந்தர் அமரர் அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் அவர்களின் நினைவு அவரை அறிந்தவர்கள் அனைவரின் நெஞ்சினில் நீங்கா இடம் பிடித்துள்ளது. அன்னாரின் ஓராண்டு நினைவு இரங்கல் திருப்பலி அவரின் பிறந்தகமாம் வங்காலையின் புனித ஆனாள் ஆலயத்தில் கடந்த 23.03.2010 செவ்வாய்கிழமை பி. ப. 5.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு அஞ்சலி கூட்டம் ஆலய மண்டபத்தில் இடம் பெற்றது. அவரின் ஆன்மா நித்திய சாந்தி அடைவதாக!




# அமலமரித்தியாகிகளின் யாழ் மாகாணத்திற்கு புதிய குருக்கள்





அருட்சகோதரர்
**அன்ரனி கியூபேட் அ.ம.தி.**

திரு.திருமதி மேரி யோசவ் பிலோமினா தம்பதிகளின் மகனாக 05.10.1976 அன்று பண்டத்தரிப்பில் பிறந்தார். பண்டத்தரிப்பு புனித செபமாலை அன்னை ஆலயத்தை சேர்ந்த இவர் அருட்பணி. சந்திரபோஸ் குரூஸ் அ.ம.தி அவர்களால் அழைத்தல் ஊக்குவிப்பு பெற்று சிறிய குருமடம் நுழைந்தார்.




அருட்சகோதரர்.
**ஜோண் பற்றிக் அ.ம.தி**

திரு. திருமதி ஜோன் மேரி மேரிராணி தம்பதிகளின் மகனாக 17.02.1979 அன்று மண்டைதீவில் பிறந்தார். மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தை சேர்ந்த இவர் அருட்பணி. சந்திரபோஸ் குரூஸ் அ.ம.தி. அவர்களால் அழைத்தல் ஊக்குவிப்பு பெற்று சிறிய குருமடம் நுழைந்தார்.



அருட்சகோதரர்
**செல்வ விஜேந்திரன் அ.ம.தி.**

திரு.திருமதி இன்னாசிமுத்து, இமெல்டா தம்பதிகளின் மகனாக 28.04.1980ல் யாழ்ப்பாணத்தில் பிறந்தார். யாழ் புனித அடைக்கலநாயகி ஆலயத்தைச் சேர்ந்த இவர் அமரர் அருட்பணி. கிருபானந்தன் அவர்களால் அழைத்தல் ஊக்குவிப்பு பெற்று சிறிய குருமடம் நுழைந்தார்.



அருட்சகோதரர்
**ஆன்சன் றெஜிக்குமார் அ.ம.தி.**

திரு.திருமதி தார்சியஸ், செபமாலையம்மா தம்பதிகளின் மகனாக 30.04.1980ல் செம்பியன் பற்று கிராமத்தில் பிறந்தார். செம்பியன்பற்று தூய பிலிப்பு நேரியார் ஆலயத்தைச் சேர்ந்த இவர் அமரர் அருட்பணி யோண் லொறட் அவர்களால் அழைத்தல் ஊக்குவிப்பு பெற்று சிறிய குருமடம் நுழைந்தார்.



அருட்சகோதரர்
**றாஜ் கிளேயர் அ.ம.தி**

திரு.திருமதி பஸ்ரியாம்பிள்ளை யோசப், மேரி ஜசிந்தா தம்பதிகளின் மகனாக 20.09.1980ல் ஊர்காவத்துறையில் பிறந்தார். ஊர்காவத்துறை புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த இவர் அமரர் அருட்பணி. கிருபானந்தன் அவர்களால் அழைத்தல் ஊக்குவிப்பு பெற்று சிறிய குருமடம் நுழைந்தார்.

இவர்கள் அனைவரும் சிறிய குருமட பயிற்சியை கொழும்புத்துறை புனிதவளனார் குருமடத்திலும் மெய்யியல் கல்வியை கண்டி தேசியகுருமடத்திலும் நிறைவு செய்து மெய்யியல்மாணிப்பட்டம் பெற்று இறையியல் கல்வியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் கற்று இறையியல்மாணிப்பட்டத்தையும் பெற்றுக்கொண்டனர். 22.10.2009 திருத்தொண்டர்களாக உயர்த்தப்பட்ட இவர்களின் குருத்துவ திருநிலைப்படுத்தும் திருச்சடங்கு யாழ் பேராலயத்தில் 12.04.2010 அன்று யாழ் ஆயர் அதி.வண. தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களால் நடைபெற உள்ளது. புதிய குருக்களை 'மன்னா' வாழ்த்தி மகிழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஏ - பதின்நான்கு" நெடுஞ்சாலை

ஜெ. எம். யோசேப் பெனாண்டோ

ஆங்கிலேயன் எம்மை ஆண்டபோது முதலில் நாட்டின் பாதைகளைத்தான் சீரமைத்தான். அந்த திட்டத்தில் உருவானதுதான் தலைமன்னார் - மதவாச்சி ஏ-14 நெடுஞ்சாலையாகும். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பாதை அவர்களால் உருவாக்கப்பட்டது.

ஆங்கிலேயர்கள் மன்னார் பட்டினத்தில் தளம் அமைத்து மாவட்டத்தை ஆண்டு வந்த போது முதலில் தரைவழிப் பாதையையும், பின்னர் தொடருந்துப் பாதைகளையும் உருவாக்கினர். அதன்படி முதன் முதலில் உருவாக்கப் பட்டதுதான் இந்த ஏ-14 தரைவழிப் பாதையாகும். அதற்கு முன்னர் சிலாவத்துறை - புத்தளம் கரையோரப் பாதையே மன்னார் - புத்தளம் மக்களின் போக்குவரத்துப் பாதையாக இருந்து வந்தது. இப்பாதை மன்னாரில் இருந்து வங்காலை, நானாட்டான், அரிப்புத்துறை, கொண்டச்சி, முள்ளிக்குளம், வில்பத்து வனத்தின் ஊடாக சுமார் 75 கிலோ மீற்றர்வரை நீண்டு சென்று புத்தளம் நகரை அடைந்தது. இதன் ஊடாக பெரும் காடுகளும், ஒரு சில கிராமங்களுமே தென்பட்டன.


தற்போது சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் மிகவும் பிரசித்தி பெற்ற மர முந்திரிகைத் தோட்டங்கள் கொண்டச்சி கிராமத்தின் காடுகளில் பல்லாயிரம் ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யப்பட்டு நாட்டிற்குப் பெருமளவில் அந்நியச் செலாவணியை ஈட்டித்தந்தன.

ஏ-14 நெடுஞ்சாலை தலைமன்னார் இறங்கு துறையில் ஆரம்பமாகி முறையே தலைமன்னார் ஸ்டேசன், பேசாலை, தோட்டவெளி, மன்னார், முருங்கன், மடுவீதி, பறையனாங்குளம், செட்டிகுளம், மாங்குளம், மதவாச்சி சந்தி, மதவாச்சி நகர், என்று சுமார் நூறு கிலோமீற்றருக்கு அதிகமாகச் சென்று கொழும்புடன் தொடர்பை ஏற்படுத்துகின்றது. இதன் மற்றொரு பாதையான தலைமன்னார் துறை முதல் மதவாச்சி வரையிலான தொடருந்துப் பாதைகள் 1913இல் அமைக்கப்பட்டன.

ஆங்கிலேயர்கள் தங்கள் வர்த்தக நடவடிக்கை-களுக்காகவும், நிரந்தர வாழ்விடங்களுக்காகவும் தங்கள் ஆளுமையை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவதற்காகவும் இப் பாதைகளை அமைத்தனர். இலங்கையில் அபரீதமாக விளைந்த தேயிலை, இறப்பர், தெங்கு, மற்றும் கறுவா பயிர்ச்செய்கை என்பவற்றின் ஊடாக கோடான கோடி அன்னியச் செலாவணியைப் பெற்றுக் கொள்வதற்காகவும் இப் பாதைகளை அவசர அவசரமாக அமைத்துக் கொண்டனர்.

இதற்காக பல இலட்சக் கணக்கான தென் இந்தியத் தமிழர்களை இங்கு கொண்டு வந்து கொத்தடிமைகளாக சிறிய கொட்டில் லயங்களுக்குள் முடக்கிவைத்து தங்கள் வர்த்தக மேம்பாட்டை விருத்தி செய்தனர்.

முதலில் தலைமன்னார் துறைவரை மன்னார் தீவின் தலைநகர், மன்னார் பட்டினம்வரை இப்பாதையை அமைத்தனர். மன்னார்



பட்டினத்தில் இருந்து இலங்கை பெருநிலப்பரப்பை பிரிக்கும் சுமார் நாலரைக்கிலோமீற்றர் நீளமான பறவைக்கடலை கடப்பதற்காக பாலம் ஒன்றையும் நிறுவினர். இதற்காக 1928இல் மன்னார் அரச அதிபரால் அடிக்கல் நடப்பட்டு 1930இல் அப்போதைய பிரித்தானிய ஆளுனரினால் அப்பாலம் திறந்துவைக்கப்பட்டது. அது முதல் இன்றுவரை இப்பாலம் மன்னார் தாம்போதி பாலம் என்று அழைக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் தாம்போதி 1964 மார்கழித்திங்கள் 26ஆம் நாள் நள்ளிரவில் இலங்கையில் நிகழ்ந்த கொடிய சூறாவழியால் முற்றாகத் தகர்ந்தது. இப்பாதையில் பல இடங்களில் உடைப்பு எடுத்தது. எனினும் ஒருவருடத்தின் பின் இலங்கை இராணுவத்தினரின் பொறியியல் பிரிவினரால் முற்றாக சீரமைக்கப்பட்டது. இலங்கையில் நடைபெற்றுவந்த உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக 1990 யூன் மாதம் ஒரு விடிகாலைப் பொழுதில் தமிழீழ விடுதலைப்புலிகளால் மேம்பாலம் குண்டுவைத்து தகர்க்கப்பட்டது. அதன்பின்னர் 1991இல் அன்றைய ஜனாதிபதி பிறேமதாஸவினால் தற்காலிக பாலம் ஒன்று அமைக்கப்பட்டு 1991இல் அவரே மன்னார் வந்து மேம்பாலத்தைத் திறந்துவைத்தார்.

அன்றுமுதல் இன்றுவரையில் மன்னார் மக்களின் வாழ்வாதாரமாக இந்த தற்காலிக பாலமே இருந்துவந்தது. சென்ற ஆண்டில் யப்பான் அரசு மனமுவந்து கொடுத்த சுமார் 190 கோடி ரூபா செலவில் முற்றிலும் கொங்கிறீற் கலவையினால் இருவழிப்பாதையாக அமைக்கப்பட்டு பாலத்திற்கு மன்னார் சமாதானப் பாலம் என பெயரிடப்பட்டது. தற்போது இப்பாலம் போக்குவரத்திற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் திறந்து வைக்கப்பட்டது. ஒரு காலத்தில் இலங்கையிலேயே மிக நீளமான கடற்பாலம் என்று இலங்கை வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருந்த மன்னார் தாம்போதி இதுவாகும்.

இந்த பாலத்தின் ஊடாகவே இலங்கை இந்திய உறவுகள் வலுப் பெற்றதும், தமிழ் சிங்கள குடியேற்றங்கள் நிலை பெற்றதுமாகும். 1990இல் முஸ்லீம்களின் வெளியேற்றத்திற்கு முன்னர் மன்னார் மாவட்டத்தில் சுமார் நான்காயிரம் சிங்களக் குடும்பங்கள் வாழ்ந்து வந்ததாக வரலாறுகள் சொல்கின்றது. இவர்கள் மன்னார் தீவகற்பகத்தில் மன்னார் நகர், சவுத்பார், ஆமைப்படுகை, வங்காலைப்பாடு, பேசாலை, தலைமன்னார் துறை, அரிப்புத்துறை, சிலாவத்துறை, விடத்தல்தீவு, அடம்பன், பறையநாலங்குளம், நாச்சிக்குடா ஆகிய இடங்களில் வாழ்ந்து வந்தனர்.

தலைமன்னார் துறையில் இருந்து இந்தியர்கள் தமிழ் நாடு ராமேஸ்வரம் வழியாக இங்கு அழைத்துவரப்பட்ட பல இலட்சக்கணக்கான தென்னிந்திய கூலிக்குடும்பங்கள் இந்தியாவில் இருந்து "இராமானுஜம்", மற்றும் "இர்வின்" என்று பெயர் சூட்டப்பட்ட இரண்டு சரக்குகள் ஏற்றும் கப்பல்கள் மூலம் தினமும் தலைமன்னார் இறங்குதுறைக்கு அழைத்துவரப்பட்டு கால்நடையாகவே சுமார் 300கிலோமீற்றர் தூரத்தை பல நாட்கள் பிரயாணம் செய்து மலையகத்திற்கு கொண்டுவரப்பட்டு சிறிய லயங்களில் குடியமர்த்தப்பட்டனர்.

வரும் வழியில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பல்வேறு நோய்களினால் செத்து மடிந்தனர். பின்னர் 1913இல் தலைமன்னார் மதவாச்சி தொடருந்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அதில் சரக்குகள் ஏற்றும் "கூட்ஸ்" பெட்டிகளில் அடைத்துவைக்கப்பட்டு மலை நாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டனர். இந்த தென் இந்திய மக்கள் 1948இல் நடைபெற்ற இலங்கையின் முதலாவது பொதுத்தேர்தலில் சுமார் 10நாடாளுமன்ற அங்கத்தவர்களை தெரிவுசெய்து நாடாளுமன்றம் அனுப்பும் சக்தியைப் பெற்றிருந்தனர். இதைக் கண்டு சகித்துக் கொள்ளமுடியாத அப்போதைய ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பு தென் இந்தியர்களின் பிரஜா உரிமையை உடன் ரத்து செய்தது.

இதன் விளைவாக சுமார் ஆறு லட்சம் தென் இந்திய தமிழர்கள் தங்கள் வாழ்விட உரிமையை இழந்ததோடு ஆளும் வலிமையையும் இழந்தனர். இந்த நாட்டை இந்திய தமிழர்கள் ஆள்வதா என்ற காற்புணர்ச்சியுடன் நடத்தப்பட்ட இவர்கள் தங்கள் சுய உரிமையை இழந்து மீண்டும் "கள்ளத்தோணிகள்" என்ற நாமம் பெற்றனர்.

ஏ-14 நெடுஞ்சாலை ஊடாகவே மன்னார் மக்கள் நாட்டின் பலவேறு பகுதிகளுக்கும் சென்று அரச ஊழியம், தொழில் வாய்ப்பு, வர்த்தகம், விவசாயம், மீன்பிடி என்பனவற்றில் ஈடுபட்டு பெரும் செல்வம் சேர்த்தனர். அது போலவே தென் இலங்கைச் சிங்களவர்களும் இங்கு வந்து மீன்பிடி, கருவாடு பதனிடல், வாகனம் திருத்துதல், சிறு கைத்தொழில்கள், அரச ஊழியம் என்று பல் தொழில்ககளை செய்து வந்தனர் நின்றனர்.

1983இல் இடம்பெற்ற உலகம் கண்டும் கேட்டும் இராத திட்டமிட்ட இனப் படு கொலையின் பின்னர் இலங்கையில் நடைபெற்றுவந்த மூன்று தசாப்த கெரில்லா யுத்தத்தின் விளைவாக நாட்டில் தமிழ் சிங்கள முஸ்லீம் உறவுகள் சீர்குலைந்து அழிந்து போனதுடன் மன்னாரில் பல்வேறு வளங்களும் அழிந்து போயின அவற்றில்

முதலில் தலைமன்னார் மதவாச்சி தொடருந்து சேவைகள், இரும்புப்பாதைகள், நிலையங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. 1983இலேயே இலங்கை இந்திய கப்பல்சேவைகள் நிறுத்தப்பட்டது. 2006ஆம் ஆண்டு மதவாச்சியைத்தாண்டி மன்னார் மக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அதே போல் தென்பகுதி மக்கள் இங்குவர முடியாத நிலை ஏற்பட்டது. நாட்டில் தொடர்ந்து



அவசரகாலச்சட்டம், கடும் கண்காணிப்பு, இராணுவ சுற்றிவளைப்பு, இளைஞர் யுவதிகள் தேடல்கள் என ஆரம்பித்து மதவாச்சி முதல் மன்னார் வரையான சுமார் 10 இடங்களில் தடை முகாம்கள் அமைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட மக்களே மன்னார் நகருக்குள் நுழைவதற்கு தங்கள் அடையாள அட்டைகளை நகரின் நுழை வாயிலில் உள்ள கடற்படை காவல் முகாமில் ஒப்படைத்துவிட்டு அவர்கள் தரும் போலி அட்டையைக் கொண்டு திரியும் அவ்ல நிலை அதே போல் மாவட்டத்திற்கு வெளியே இருந்து வருபவர்கள் தங்களது அடையாள அட்டைகளுடன் உள்ளூர் பிரமுகர் ஒருவரையும் தனக்கு பிணையாக வைத்து உள்ளே நுழையும் நிலைமை. நடைமுறையில் இருந்தது.

ஆங்கிலேயன் எம்மிடம் நாட்டை ஒப்படைத்த பின்னர் இந்த ஏ-14 நெடுஞ்சாலை ஒருமுறைகூட முற்றாக திருத்தம் செய்யப்படவில்லை. பாதையின் இருமருங்கிலும் ஆங்கிலேயர்களால் நட்டுவைக்கப்பட்ட நிழல்தரும் ராட்சத மரங்கள் அனைத்தும் உள்ளூர் அரசியல் வாதிகளால் வெட்டிச்சாய்த்து கொள்ளை விலைக்கு விற்கப்பட்டன. சென்ற 2007ஆம் ஆண்டு இப்பாதையை செப்பனிட்டு கார்பட் பாதையாக மாற்றுவதற்கு சுமார் 25கோடி ரூபாய்கள் வெளிநாட்டு அரசு ஒன்றின் உதவியால் ஒதுக்கப்பட்டது.

தலைமன்னாரில் இருந்து மன்னார் நகரம் வரையான பாதை புனரமைப்பு வேலைகள் அவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டு ஆமை வேகத்தில் நடைபெற்று நான்கு ஆண்டுகளின்பின் தற்போது முடிவுற்றுள்ளது. இக்காலங்களில் பல்வேறு ஒப்பந்தக் காரர்களும் கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகிவிட்டனர். பின்னர் மீண்டும் 20கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் முடிக்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் சுமார் 40 அடி அகலத்தில் கார்பட் போடப்பட்டு இரு வழிப்பாதையாகவும், இருபுறமும் சுமார் 10 அடி அகலத்தில் நடைபாதையாகவும் அமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆயினும் இப்பாதை சாதாரண தார் பாதையாகவே அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நடைபாதையும் அமைக்கப்படவில்லை.

இந்த நிலையில் நெருக்கமான பாதையில் தறிகெட்டு அசுர வேகத்தில் ஓடித்திரியும் கனரக வாகனங்கள் பேருந்துகள், சிற்றூர்திகள், உந்துருளிகள், முச்சக்கர வாகனங்கள், மற்றும் குளிரூட்டப்பட்ட அரச அரசுசாரா நிறுவனங்களின் வாகனங்கள், அமைச்சர்களின் தொடர் வாகன அணிகள் என்பவற்றினால் மன்னார் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் மிதி வண்டியில் பிரயாணம் செய்ய முடியாதுள்ளதுடன் வயோதிபர்கள், பெண்கள், சிறுவர்கள், மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் உள்ளடங்களாக எவருமே நடமாடுவதில் அச்சநிலை உள்ளது.

# வரலாற்று தடம் பதித்த மன்னார் விளையாட்டு மைதானம்

மக்கள் காதர்

சுமார் 500 ஆண்டுகள் பழமைவாய்ந்தது மன்னார் பொது மைதானம். இலங்கையை போர்த்துக்கேயர் கைப்பற்றி சில ஆண்டுகளின் பின்னர் மன்னாரையும் கைப்பற்றினர். அங்கு கற்கோட்டை அமைத்து ஆட்சி செய்து வந்தனர். இவர்களின் ஆட்சிக்காலத்தில் அமைக்கப் பட்டதுதான் தற்போதைய மன்னார் பொது விளையாட்டு மைதானமாகும்.

இம் மைதானம் அக்காலத்தில் மன்னார் மக்களின் சேமக்காலையாக இருந்தது. போர்த்துக்கேயர்கள் மற்றும் இறந்து போன கத்தோலிக்க மக்களின் உடல்கள் இங்குதான் அடக்கம் செய்யப்பட்டன. அதன் பின்னர் மன்னார் ஒல்லாந்தர் வசமானபோதும் அதன் பின்னர் இறுதியாக பிரித்தானியர் வசமான போதும் அவர்களின் உடல்கள் இங்குதான் அடக்கம் செய்யப்பட்டுவந்தன. எமக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்ற பின்னரே இந்த சேமக்காலை ஏ-14 பிரதான நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டைக்கு மாற்றப்பட்டது. அதன் பின்னர் இச் சேமக்காலை எவ்வித பயன்பாடும் இல்லாமல் பாழ்பட்டுக்கிடந்தது. மன்னார்

பட்டணத்தின் கிழக்குபுற ஓரத்திலே ஏ-14பாதை அருகிலே சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பிலே இச் சேமக்காலை அமைந்து இருந்த அக்காலங்களில் மன்னார் பொது விளையாட்டு மைதானம் மன்னார் பட்டணத்தின் நடுவில் மூர்வீதிக்கும் பெரிய கடைக்கும் இடைப்பட்ட "விளையாட்டு வீதியின் அருகே சுமார் 50 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டு சகல விளையாட்டுக்களும் நடைபெற்று வந்தன.

1948 ல் இலங்கையின் முதலாவது சுதந்திர தின வைபவம் இம் மைதானத்திலேயே கொண்டாடப்பட்டது. அரசாங்கம் இராணுவம் காவல்த்துறை அரச திணைக்களங்கள் கல்வி கூடங்கள் என்பவை கூட்டாக இவ்வைபவத்தை நாள்முழுவதும் கோலாகலமாக கொண்டாடியது.

பின்னர் 1964ல் மன்னாரில் வீசிய கொடிய சூறாவளியின் விளைவாக இவ்மைதானத்திற்குள் கடல் நீர் உட்புகுந்ததால் மைதானம் உப்பு தரையாக மாற்றமடைந்தது. இதன் விளைவாக அதன் பின்னர் நெதர்லாந்து அரசு கொடுத்த ஒருதொகைப்பணத்தில் இம்மைதானம் புனரமைக்கப்பட்டது. புனரமைப்பு வேலையின் போது முற்றிலும் அழிந்து போகாத மனித எலும்புக்கூடுகள் அப்புறப்படுத்தப்பட்டு நினைவுச்சின்னமாக முன்புறம் சுவரமைத்து அதனுள் புதைக்கப்பட்டது.

1966ல் "மன்னார் இஸ்ரேடியம் என்ற பெயரில் விளையாட்டு ஆர்வலருக்கு பாரிய விளையாட்டுக்கள், மாவட்ட விளையாட்டுக்கள், தேசிய விளையாட்டுக்கள், கலை கலாச்சார நிகழ்வுகள், அரசியல் கூட்டங்கள், மாதாந்த பௌர்ணமி கலைநிகழ்வுகள், பொங்கு தமிழ், நிகழ்வுகள் எழுச்சி நாள், மாவீரர் தினம், என்பன உட்பட சகல நிகழ்வுகளும் நடைபெற்றுவந்தன.

துரதிஸ்ட வசமாக 2005ம் ஆண்டு இம்மைதானம் விளையாட்டுக்கு தடைவிதிக்கப்பட்டு மூடப்பட்டது. இம்மைதானத்தைச் சுற்றி காவல் நின்ற படையினருக்கு இனம் தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டதனால் சில இராணுவ வீரர்கள் காயப்பட்டதாலும் அதன் பின்னர் விடுதலைப்போராளிகளுக்கும் இராணுவத்தின ருக்கும் இடையில் ஏற்பட்ட பல்வேறு மோதல் சம்பவங்களினாலும் இம் மைதானம் முற்றாக மூடப்பட்டது.

மேற்படி மைதானத்தை தொடர்ந்து இயங்கவைப் பதற்கு விளையாட்டு கழகங்கள் ஊடகவியலாளர்கள் அரச அதிபர் பிரதேச செயலர் மற்றும் சமூக நலன் விரும்பிகள்



எடுத்துக் கொண்ட பல்வேறு முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. ஆயினும் மூன்று வருட ஓய்வுக்குப் பின்னர் கொடிய யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இம் மைதானம் மக்கள் பாவனைக்கு இராணுவ கண்காணிப்புடன் திறந்து விடப்பட்டுள்ளது. இதன் முதல் நிகழ்வாக மன்னார் பொலிஸாரின் ஏற்பாட்டில் பொலிஸ் மற்றும் இராணுவ வீரர்களுக்கிடையேயான விளையாட்டு நிகழ்வுகள் என சில நிகழ்வுகள் இடம் பெற்று அதன் பின்னர் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தல்லையொட்டிய பிரச்சார மேடைகள், வண்ண விளக்குகள், பிரமாண்டமான பதாதைகள், இசைநிகழ்சிகள், என்பனவற்றால் இம்மைதானம் களை கட்டத் தொடங்கியுள்ளது.

இங்கு முதல் முறையாக இலங்கை ஜனாதிபதி முன்னாள் இராணுவத் தளபதி, முன்னாள் பிரதமர், கட்சித் தலைவர்கள் உட்பட பலரும் வலம் வந்து சென்றிருக்கின்றனர். இந்நிலையில் பாடசாலைகளுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் என பல நிகழ்வுகள் நடந்தேறியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துவம் ஒரு வரலாற்றுப் பார்வை

தொகுப்பு அருட்பணி. நெவின்ஸ் யோகராஜ்.

சமுதாயத்தில் உள்ள எந்த ஒரு அமைப்பும் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் பண்பாட்டுச் சூழமைவில் தோன்றிப்படிப்படியாக வளர்ச்சியும் எழுச்சியும் பெற்றுள்ளது. வரலாற்றின் தொடக்க முதல் எவ்வித மாற்றமும் இன்றி நிரந்தரமாக உள்ள அமைப்புக்கள் என்று ஏதும் இல்லை. கால வெள்ளத்தில் சுவடு தெரியாமல் போன அமைப்புக்கள் பல ஆயிரம். ஆனால் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளாக பல்வேறு சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்டாலும் மனித நேயத்தையும் மாண்பையும் போற்றும் அமைப்புக்களிலே தலைசிறந்த திருச்சபை என்ற ஒன்றே இன்றுவரை எழுச்சி பெற்று நிலைத்து நிற்கின்றது.

இயேசுவின் சீடர்களின் இயக்கம் திருச்சபை அது வரலாற்றில் உருவாகி வரலாற்றில் பயணம் செய்து வரலாற்றின் நிறைவை நோக்கி செல்லும் ஓர் சமூகம். இயேசுவின் பெயரால் ஒன்றிணைந்து அவரது இலட்சியக் கனவாம் இறையாட்சியை இம் மண்ணில் மலரச் செய்யும் உயிர் துடிப்புள்ள சமூகம். திருச்சபையை உறவுச் சமூகமாக உருவாக்கும் பொறுப்பு திருமுழுக்குப் பெற்ற அனைவரையும் சார்ந்தது. இருப்பினும் இறைமக்களிடம் இருந்து ஒரு சிலர் தெரிந்தெடுக்கப்பட்டு பயிற்சியும் பக்குவமும் அளிக்கப்பட்டு இறை சமூகங்களில் பணிபுரிய அனுப்பப்படுகின்றனர். இவர்கள் தூய ஆவியால் திருப்பணிக்காக அருட்பொழிவு செய்யப்பட்டவர்கள். குருத்துவம் திடீர் என தோன்றியதொன்றல்ல. வரலாற்றை ஊடுருவிப் பார்க்கும் போது குருத்துவம் பற்றி பல மாறுபட்ட பார்வைகளும் புரிதல்களும் நிலவி வந்துள்ளதை அறியக் கூடியதாக உள்ளது.

## யூதப் பின்னணியில் குருத்துவம்

தொடக்க காலத்தில் இஸ்ராயேல் மக்களிடையே குருத்துவம் ஒரு தனிப்பட்ட அமைப்பாக இருந்ததில்லை. அன்று ஆலயமோ வழிப்பாட்டு சடங்கோ அவற்றை நிறைவேற்ற குருக்களோ இருந்ததில்லை. மாறாக ஒவ்வொரு குடும்பத்தின் தந்தையே குருவைப் போல செயல்பட்டார். குடும்பத்தின் சார்பாக யாவே இறைவனுக்கு வேண்டுதல்களையும் காணிக்கைகளையும் செலுத்தி வந்தனர். இஸ்ராயேலர் பன்னிரு குலமாக பிரிக்கப்பட்டு இருந்ததால் ஒவ்வொரு குலத்தின் குடும்பச் சூழலில் தான் குருத்துவம் புரிந்து கொள்ளப்பட்டது. காலப்போக்கில் குருத்துவப் பணிகளை ஆற்றும் கடமையையும் பொறுப்பையும் லேவி குலத்தவர் ஏற்றுக்கொண்டனர். (இ.ச.33:8-11). லேவியரின் குருத்துவம் நடைமுறையில் இருந்தாலும் குடும்பக் குருத்துவமும் தொடர்ந்து பல விதங்களில் செயற்பட்டு வந்தது. (நீதி மொழி 6:18-29, 1சாமு 7:1) முடியாட்சிக் காலத்தில் அரசர்கள் குருத்துவப் பணியை ஆற்றி வந்தனர். (1சாமு 13:9) ஆயினும் இஸ்ராயேல் மக்கள் பபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து தாய்நாடு திரும்பிய பின்னர் எஸ்ரா, நெகேமியா என்பவர்களால் குருக்கள் - லேவியர்கள் என்ற அமைப்பு முற்றிலும் குலகுருத்துவமாக மாற்றம் பெற்றது. யூதக் குருக்கள் ஒரு குறிப்பிட்ட வாரிசில் வாழையடி வாழையாக வந்தார்களே அன்றி அந்த வாரிசைச் சேராத எவரும் குருக்களாக்கப்படவில்லை.

## தொடக்க காலம் (கி.பி 1-2 நூற்றாண்டுகள்)

இறையாட்சி பற்றி நற்செய்தியைப் போதித்த நாசரேத்தூர் இயேசு லேவியர் குலத்தில் பிறந்தவர் அல்ல. அவர் யூத குலத்தைச் சார்ந்தவர். தமது பணியின் போது யூத சமூதாயத்தில் மக்களை அடிமைப்படுத்திய பல்வேறு அமைப்புக்களை கடுமையாக சாடினார். குருக்கள் அமைப்பும் அவரது விமர்சனப் பார்வையில் இருந்து தப்பவில்லை. லேவியரின் வாரிசு குருத்துவமும், ஆலயத்தை மையமாகக் கொண்டு நடைபெற்ற குருத்துவப் பணிகளும் தமது இறையாட்சிக் கனவுக்கு உகந்தவையாக அவர் கருதவில்லை. இறையாட்சியை மக்கள் இயக்கமாக உருவாக்கி வளர்த்த இயேசு சீடர்கள் அமைப்பை ஏற்படுத்தினார். இதில் பன்னிரு திருத்தூதர்கள், 72 சீடர்கள், பெண்கள் ஆகிய பலநிலையினரும் இடம்பெற்றனர். இறையாட்சிக்காக இயேசு ஏற்படுத்திய சீடர்களின் இயக்கம் தான் இவரது இறப்பு உயிர்ப்புக்கு பிறகு 'எக்லேசியா' எனப்படும் திருச்சபையாக மலர்ந்தது.

## கிறிஸ்தவ சமூகங்களில் தலைமைப்பணி

திருத்தூதர்கள் நற்செய்திப் பணியில் முழுமையாக ஈடுபட்டதால் தாங்கள் உருவாக்கிய கிறிஸ்தவ சமூகங்களில் நிரந்தரமாக தங்கி மக்களுக்கு பணியாற்ற அவர்களால் இயலவில்லை. இருந்த போதும் வாய்ப்புக் கிடைக்கின்ற போது அவர்களைச் சந்தித்தனர். திருமடல்கள் வழியாக அவர்களோடு தொடர்பு கொண்டனர். இந்நிலையில் கிறிஸ்தவ சமூகங்களில் நிரந்தரமாக தங்கி அவற்றின் தலைமைப் பொறுப்பை ஏற்று அவற்றைக் கண்காணித்து அக்கறையோடும் ஈடுபாட்டோடும் மக்களுக்கு பணியாற்றத் திருத்தூதர்களால் ஏற்படுத்தப்பட்டதுதான் கண்காணிப்பாளர்கள் (ஆயர்கள்), மூப்பர்கள் (குருக்கள்) எனும் திருப்பணியாளர்கள் அமைப்பு. (தி .பணி 14:23, 20: 17-28) இவ்விரு திருப்பணிகளும் முறையே கிரேக்க யூதப் பின்னணியில் இருந்து வந்தவை. கண்காணிப்பாளர் என்ற சொல்லின் மூலக் கிரேக்கச் சொல் 'எப்பிஸ்கோப்போய்'. அதாவது கிரேக்க சமுதாயத்தின் அரசின் பல்வேறு பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரிகளை எப்பிஸ்கோப்போய் என அழைத்தனர். மூப்பர்கள் அறிவுத்திறன் உடையவர்களாகவும் நன்னடத்தை உள்ளவர்களாகவும் சட்டங்களை கடைப்பிடிப்பவர்களாகவும், மக்களை வழிநடத்தும் தலைமைப் பண்பைக் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும் இவ்வாறு இவர்கள் யூத நகரங்களிலும் சிற்றூர்களிலும் தொழுகைக் கூடங்களை கண்காணிப்பது மக்களிடையே எழும் சண்டைச் சச்சரவுகளைத் தீர்த்து வைப்பது, நலிவுற்றவர்களுக்கு உதவுவது போன்ற பணிகளில் ஈடுபட்டு வந்தனர். இதைவிட பந்தியில் பரிமாறும் பணிக்காக ஏற்படுத்தப்பட்டவர்கள்தான் திருத்தொண்டர்கள். (தி.பணி. 6:1-7) திருத்தூதர்களின் இறப்பிற்கு பிறகே கிறிஸ்தவ சமூகங்களைத் தலைமையேற்று நடத்தும் பொறுப்பை இவர்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டனர்.



## திருப்பணியாளர்களின் பணியும் வாழ்வும்

தொடக்கத் திருச்சபையில் திருப்பணியாளர்கள் ஆற்றிய பணிகள் யாவும் மக்களை மையமாகக் கொண்டிருந்ததே அன்றி அருள் அடையாளங்களை நிறைவேற்றுவதில் மட்டும் அடங்கவில்லை. அவர்கள் இறைவார்த்தையை முழக்கமிடுவது, மக்களை இறைநம்பிக்கையில் உறுதிப்படுத்துவது, அவர்களிடையே எழும் பூசல்களைத் தீர்த்து ஒற்றுமைப்படுத்துவது, சபையில் உள்ளவர் வறியவர்களுக்கும் நலிவுற்றவர்களுக்கும் உதவுவது போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபட்டனர். (2கொரி 8:10-15) திருத்தூதர்களும் அடிக்கடி அவர்களோடு தொடர்பு கொண்டு அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கி உற்சாகம் ஊட்டி வந்தனர். இவ்வாறு திருத்தூதர்களும் திருப்பணியாளர்களும் திருச்சபையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு செயல்பட்டதால் அவர்களிடையே அன்புறவும், கூட்டுப்பொறுப்பும், ஒத்துழைப்பும் இருந்தன. தலைமைத்துவமும் அதற்கான அதிகாரமும் இறைமக்களுக்காகவே, அவர்களின் வளர்ச்சிக்காகவே என்ற சிந்தனையும் ஆழமாக வேரூன்றி இருந்தது. மக்களை அடக்கி ஆளும் அதிகாரப் போக்கோ பணமும் பதவியும் புகழும் பெருமையும் தேடும் தன்னலப் போக்கோ அன்று காணப்படவில்லை. திருச்சபையின் பணியாளர்கள் மக்கள் மீது அன்பு பாராட்டினர். மக்களும் தங்கள் பணியாளர்கள் மீது பாசமும் பற்றும் கொண்டிருந்தனர்.

## குருத்துவம் திருப்பணியாளர்களுக்கு மட்டும் தானா?

தொடக்க திருச்சபையில் குருத்துவம் திருப்பணியாளர்களோடு மட்டும் தொடர்புபடுத்தப்பட்டு ஒரு குறுகிய வட்டத்துக்குள் முடங்கிக் கிடக்கவில்லை. திருப்பணியாளர்கள் மட்டுமின்றி இறைமக்கள் சமூகம் முழுவதுமே கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கேற்கும் ஒரு பரந்து விரிந்த இறையியல் பார்வை அன்று நிலவியது. புதிய ஏற்பாட்டில் திருப்பணியாளர்கள் குருக்கள் என அழைக்கப்படவில்லை. மாறாக இறைமக்களின் குருத்துவத்தைப் பற்றி பேதுரு தமது மடலில் இவ்வாறு கூறுகின்றார். "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரசகுருக்களின் கூட்டத்தினர், தூய மக்கள் இனத்தினர், அவரது உரிமைச் சொத்தான மக்கள்". (1பேது 2:9), "இயேசுக் கிறிஸ்துவின் வழியாய் கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் தூய குருக்களின் கூட்டமாகவும் இருப்பீர்கள்". (1பேது 2:5) இவ்வாறு இறைமக்கள் சமூகம் முழுவதுமே அரச குருத்துவ திருக்கூட்டமாய் புரிந்துகொள்ளப்பட்டதால் அன்று திருச்சபையில் பொதுநிலையினர் என்ற தனிப்பட்ட அமைப்போ பிரிவோ காணப்படவில்லை. பொதுநிலையினரைக் குறிக்கும் 'லய்க்கோஸ்' என்ற கிரேக்கச் சொல் திருமுழுக்குப் பெற்ற அனைவரையும் குறித்தது. எனவே திருச்சபையைக் கட்டி எழுப்பும் கடமையும் பொறுப்பும் எல்லோருக்கும் இருந்து வந்தது. எடுத்துக்காட்டாக பொதுநிலையினர் திருத்தூதர்களோடு இணைந்து உடன் உழைப்பாளர்களாக நற்செய்திப் பணியாற்றி ஆங்காங்கே கிறிஸ்தவ சமூகங்களை உருவாக்கினர். (உரே 16:21-23, கொலோ 4:7, பிலி 1:22-24, தீத் 3:12-13, 2திமெ 4:10-12) ஆங்காங்கே இல்லத் திருச்சபைகளை உருவாக்கி அவற்றை வழிநடத்தி படிப்படியாக வளர்ச்சியடையச் செய்தனர். (தி.ப12:12, 1கொரி 16:19, உரே 16:5).

வளரும்.......

## உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி – 81

எபேசியருக்கு எழுதப்பட்ட திருமுகங்களுள் ஆறும் புனித பவுலடியாராலேயே எழுதப்பட்டவை என அடிப்படையில் நம்பப்பட்டாலும் பிற்பட்ட காலங்களில் மாறுபட்ட கருத்துக்களும் தோன்றியுள்ளன.

இம்மடலின் மாறுபட்ட மொழி நடையும் பிற்காலத்தில் தோன்றிய இறையியல் கருத்துக்களும் சிறப்பாகத் திருச்சபையை கிறிஸ்துவின் மறையுடலாகச் சித்தரிக்கும் ஆழமான இறையியல் கருத்துக்களும் இம்மடல் கி.பி.80க்குப் பின் வேறு ஒருவரால் எழுதப்பட்டிருக்கலாம் என்பதற்கு ஆதாரமாகக் காட்டப்படுகின்றன.

இத்திருமுகத்தில் கடவுளின் திட்டம் மனித குலத்தை மட்டுமல்ல படைப்பு அனைத்தையுமே கிறிஸ்வின் தலைமையில் கடவுளுடன் ஒப்புரவாக்குவது என்ற உயரிய கருத்தைக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

இதன்கண் மிகவும் சிறந்த கருத்துக்களையும் திருச்சபை பற்றிய அழகான உருவகங்களையும் இதை வாசிப்போர் அனுபவிக்க முடியும்.

இனி எமது வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் 3ம், 4ம் அதிகாரங்களிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

1. பிற இனத்தவர் எதன் வழியாக கிறிஸ்து யேசுவின் மூலம் உடன் உரிமையாளரும், ஒரே உடலின் உறுப்பினரும், வாக்குறுதியின் உடன் பங்காளிகளுமாக ஆகியிருக்கின்றார்கள்?.
2. கிறிஸ்துவின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் வழியாய் நமக்குக் கிடைத்தது என்ன?
3. நம் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாக அமைய வேண்டியது எது எனக் குறிப்பிடப்படுகின்றது?.
4. நாம் பெற்றுக் கொண்ட அழைப்பிற்கு ஏற்ப வாழ்வது எப்படி?
5. சிலரைத் திருத்தூதர்களாகவும், சிலரை இறைவாக்கினர்களாகவும் வேறு சிலரை நற்செய்தியாளர்களாகவும் ஆயர்களாகவும் போதகர்களாகவும் ஏற்படுத்தியவர் யார்?
6. மீட்பு நாளை முன்னிட்டு நம்மீது பொறிக்கப்பட்ட முத்திரையாக இருப்பவர் யார்?
7. கிறீஸ்துவுக்கும் கடவுளுக்கும் உரிய அரசில் உரிமைப்பேறு அடைய முடியாதவர் யார்?
8. யாரோடு உறவு வேண்டாம் எனப் பவுலடியார் கூறுகின்றார்?.
9. புனித பவுல் கணவனையும் மனைவியையும் எதற்கு உவமானமாகக் காட்டி விளக்குகின்றார்?
10. கடவுள் தரும் எல்லாப் படைக்கலன்களையும் அலகையின் ஏமாற்று வழிகளை எதிர்த்து நிற்கும் வலிமையைப் பெறும்படி அணிந்து கொள்ளும்படி பவுலடியார் கூறுகின்றார். இப்படைக் கலன்கள் எவை?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 79 இற்கான கேள்விகளுக்கு 16 பேர் விடையளித்திருந்தனர்

### இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

**சே. நிரோசினி**

**ஆண்டாச்செட்டிவெளி, நானாட்டான்.**

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. செலஸ்ரின் கனிஸ்ரஸ் கூடாரஇல. T. 57 வ/ஓமந்தை மத்திய கல்லூரி புனர்வாழ்வு முகாம், ஓமந்தை
2. வ. லக்சி மணற்குளம், உயிலங்குளம்.
3. அருட்சகோதரி மேரி பற்றிசியா, ஆலயவீதி, தோட்டவெளி.
4. யே. திரேசா குருஸ், தரம் 11, தாழ்வுபாடு, மன்னார்.
5. அருட்சகோதரி பவித்ரா கார்மேல் மடம் கொழும்பு - 10.
6. சே. நிஷாந்தினி ஆண்டாச்செட்டிவெளி, நானாட்டான்.
7. அருட்சகோதரி. மானெல், திருக்குடும்ப கன்னியர் மடம், சிலாபம்
8. நா. சலோமி தரம்10B, நானாட்டான் ம. வி.
9. சுதா பானு, களிமோட்டை, முருங்கன்.
10. தட்சாயினி, உப்புக்குளம், மன்னார்.

### உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி – 79 இற்கான சரியான விடைகள்

1. யாரால் : இறைவனால்
   யாருக்கு : ஆபிரகாமுக்கு
2. அ. கிறீஸ்துவின் நற்செய்தியைக் கேட்டு நம்பிக்கை கொண்டதால்
3. கிறீஸ்து வழியாக (3:14)
4. யூதர் என்றும், கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும், ஆண் என்றும் பெண் என்றும் பேதங்கள் இல்லை (3:28)
5. கடவுள் தம் மகனின் ஆவி (4:60)
6. கலாத்திய கிறீஸ்தவர்களில் மீண்டும் கிறீஸ்து உருவாவதற்காக (4:19)
7. I. சீனாய் மலையில் மோசே வழியாக இறைவன் செய்த உடன்படிக்கை
   II. ஜெருசலேமில் கல்வாரியில் சிலுவையின் மூலம் இயேசு வழியாகச் செய்யப்பட்ட உடன்படிக்கை(4:24-31)
8. அன்பின் வழியாய் செயலாற்றும் நம்பிக்கை (5:6)
9. பரத்தமை, கெட்டநடத்தை, காமவெறி, சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை, சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் (5:19-21)
10. அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு நன்னயம் நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் (5:22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலுவை காத்துக் கொண்டிருக்கிறது...

அருட்சகோதரி. எஸ். ஆர். மேரி மாக்ரட் ஸ்ரனிஸ்லோஸ் தி. கு. க.

"அந்த ஊரிலிருந்து யாரும் சுவாமியா வருவாங்களா"?
"அந்தக் குடும்பம் கெட்ட கேட்டுக்குச் சுவாமிக்குப் படிக்கவும் போறாங்களோ? நடக்கிற கதை ஏதும் சொல்லுங்கோ"!
"அவன் சுவாமியாகி என்னத்தை வெட்டி முறிக்கப் போறானாம்"?....

இதெல்லாம் என்ன? புரியவில்லையா? ஒருவன் குருவாகப் போகப் போகிறான் என்று அறிந்ததும் நம்முடைய மக்கள் உரைக்கும் "மன வாக்குகள்" தான் இவை. விமர்சனங்களுக்கு நம்மத்தியில் பஞ்சமில்லை.

இறுகிய உறுதியான சட்டங்களை அத்திவாரமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட யூதர்கள் மத்தியில்தான் இயேசு நாதர் பிறந்தார், அவற்றை உடைத்துப் புதுவழிகாட்டத் துணிந்தார். பதிலுக்கு என்ன நடக்கும் என அவருக்குத் தெரியும் சிலுவை காத்துக் கொண்டிருப்பது தெரிந்தே தொடங்கினார். சரியானதை செய்கிறேன் என்ற உண்மைத் தெளிவும் சமூக நலனில் உள்ள அக்கறையும் தான் அவருக்கு உந்துசக்தி.

மக்களைச் சரியான வழியில் நடத்த வேண்டிய தலைவர்கள் வேலியே பயிரை மேய்ந்தது போல் அவருக்குச் சிலுவையைக் கொடுத்தனர். "தாவீதின் குமாரனுக்கு ஓசான்னா என்று வாழ்த்திய மக்களே பின்பு சிலுவையில் அறையம் என்று கூறியிருப்பார்கள். இவனுக்கு இதுதான் நடக்கும் என்று எனக்கு எப்பவோ தெரியும் என்றும் சிலர் இறைவாக்கு உரைத்திருப்பார்கள். பாவம் இளம் பெடியன் என்று கூட சிலர் சொல்லியிருப்பார்கள். ஆனால் ஜெருசலேம் பெண்கள் சிலரை தவிர யாராவது ஐயோ சரியானதைச் செய்த ஒரு நல்ல மனிதனைக் கொலை செய்து போட்டாங்களே என்று ஆதங்கப்பட்டிருப்பார்களா? எனது பதில் இல்லை. உங்கள் பதில் என்ன?

இன்றைய நாட்களில் இதை ஒப்பிட்டுப் பார்த்தால் இன்னும் பல நூறு இயேசு நாதர்கள் சிலுவையில் அறையப்பட்டுக் கொண்டிருக்கிறர்கள் என்பது ஒரு கசப்பான ஆனால் நிதர்சனமான உண்மை. ஆனால் அவர்களைப் பற்றிக் கவலைப்பட யார் இருக்கிறார்கள்? உலகின் மூலை முடுக்கெங்கும் முள்முடி சூட்டிக் கொண்டும் கசையடிபட்டுக் கொண்டும், சிலுவை சுமந்து கொண்டும் சிலுவையில் தொங்கிக் கொண்டும் இருக்கிறார்கள் என்பதையாவது அறிந்திருக்கின்றோமா? இனியும் தொடரப் போகின்றது என்பதையாவது உணர்ந்திருக்கின்றோமா? மௌனம் தான் பதிலா? அன்றைய நாட்களில் இறைபயம் இருந்தது. இறைவனின் மனிதரில் மதிப்பும் கௌரவமும் இருந்தது. அவர்களது உதாரண வாழ்வு பிடித்திருந்தது. தொடர்பு சாதனங்கள் வளர்ச்சியடைந்திருக்காத வாழ்க்கை இதுதான் என்று வரையறுக்கப்பட்டிருந்தது.

குருவின் பணிகள் கூட வரையறைக்கு உட்பட்டிருந்தன. மக்களின் சிந்தனை சக்தி விரிவடைந்திருக்கவில்லை. பாவம், புண்ணியம் பற்றிக் கருத்துக்கள் ஆழமான விடயங்களாகப் பதிந்திருந்தன. ஒருவகையான பயம் கூட இருந்தது. குருத்துரோகம் குடும்ப நாசம் என்று சொல்லுமளவுக்கு மக்கள் கடவுள் பயத்திலும் மரியாதையிலும் வாழ்ந்தார்கள். திருப்பலி, வழிபாடுகள் வாழ்விலிருந்து பிரிக்க முடியாத அளவுக்குப் பின்னிப் பிணைந்திருந்தன. குருக்கள் துறவிகளின் இன்றைய வாழ்க்கை முறை நேரடியான விமர்சனத் தாக்குதலுக்கு உள்ளாகுகின்றன அது வளர்ந்து கொண்டிருக்கின்றது என்பதே உண்மை. இதுவே இன்றைக்கு எம் ஊரின் நிலைப்பாடும் இல்லையா? இது சரியா? அல்லது தவறா? ஒருவன் குருவாகிச் செய்ய வேண்டிய பணி என்ன? நாம் கேட்க வேண்டிய முதலாவது கேள்வி இதுதான். பூசை வழிபாடு, ஆசீர்வாதம் - இவை மட்டும் போதுமா? இந்த சிறிய வட்டம் போதுமா? இதுதான் இயேசு எதிர்பார்த்த குருத்துவமா? சமூகத் தளைகள் அதன் அடிமைத்தனங்களில் இருந்து மக்களை விடுவிக்கும் மாபெரும் பணிக்கான அழைப்பும் குருத்துவமே என்பது எம்மில் அனேகருக்குப் புரியவில்லை என்பது வேதனைக்குரிய விடயம்.

பேராயர் ஒஸ்கார் ரொமேரோ ஒரு நல்ல உதாரணம். ஏழைகளுக்கு உணவு கொடுங்கள் என்று நான் கேட்கும் போது என்னை மனிதாபிமானி என்கின்றனர். அதே மக்களுக்கு உரிமை கொடுங்கள் என நான் கேட்கும் போது என்னைக் கம்யூனிஸ்ட் என்கின்றனர். இவை அவர் கூறிய மிகப் பொருத்தமான வசனங்கள். அவர் தான் சொன்னபடி வாழ்ந்தார். அதனால் பலிப்பூசை ஒப்புக் கொடுக்கும்போது சுட்டுக் கொல்லப்பட்டார். உண்மையானவை, நீதியானதைச் செய்தமைக்கு அவருக்குக் கிடைத்த பரிசு அதுதான் - மரணம். இன்றும் அவரது நாடான எல் - சல்வடோரில் நிலைமை முழுதாக மாறிவிடவில்லை. எனினும் இன்று திருச்சபை ஊழியர்கள் தம்மை அர்ப்பணித்துப் பணிபுரிவது உண்மை. பேராயர் ரொமேரோவுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி இதுதான். வேதசாட்சிய மரணம் ஒரு வித்தாகியது.

எம் மண்ணிலும் பல ரொமேரோக்கள் பலியாகியுள்ளனர். 1986ல் அருட்திரு மேரி பஸ்ரியனும், 1988ல் அருட்திரு. சந்திரா பெர்னான்டோவும், 1989ல் அருட்திரு மைக்கல் ரொட்ரிக்கோவும் இரத்தம் சிந்தினர். அதிலும் மைக்கல் ரொட்ரிகோவும் அதே போல் பலிப்பூசை நிறைவேற்றுகையில் சுட்டுக் கொல்லப்பட்டார். பலி இரத்தமும் அவரது இரத்தமும் அந்தக் கிண்ணத்தில் ஒன்றாகக் கலந்தன.. தொடர்ந்தும் மக்களின் துயர்களில் ஒன்றிணைந்து தம்மை தியாகம் செய்த அருட்திரு நிகால் ஜிம்பிறவுண், அருட்திரு.பாக்கிய ரஞ்சித், அருட்திரு. கருணாரட்ணம் (கிளி) அருட்திரு.சரத் ஜீவன், இவர்களுக்கு ஏன் இந்நிலை? கீழ் நிலையிலிருந்த மக்களைக் கைதூக்கி விட முயன்றதுதான். அதற்கான பரிசு – மரணம்.

குருவின் அறைவீட்டில் இருக்கும் தொலைக்காட்சியும், தொலைபேசியும், கொம்பியூட்டரும் கண்களை உறுத்துகின்றன. அதுவே குருக்களின் வாழ்க்கை என்று தீர்மானிக்கிறோம். ஆனால் நாம் காணாத காணமுடியாத இன்னொரு வாழ்வும் குருக்களுக்கு உண்டு. தினமும் குருக்கள் சிலுவை சுமக்கின்றனர். அதை காணத்தான் எம்மால் முடியாது. கடைசி உணரவாவது முயல்வோமா?

தனிமையான வாழ்க்கை, தினசரி காலை, மாலை, இரவு செபங்கள், எல்லோர் பிரச்சனைகளையும் கேட்டு அவர்களை வழிபடுத்துதல், ஏழைகளுக்குத் தன்னால் இயன்றதை செய்ய வேண்டும். பொறுப்பானவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். தனது வேலைகளைச் செய்ய வேண்டும். சடுதியாக யாரும் நோய்வாய்ப்பட்டால், மரணமடைந்தால் ஓடிச் செல்ல வேண்டும். தனக்கு நோய் நொடி வந்தால் தனிமையாகவே தாங்க வேண்டும். கஸ்ட துன்பங்களைப் பகிரக் கடவுள் தவிர மனிதரில்லை. நல்லது செய்தாலும் பலரது ஏச்சு, பேச்சுக்கள் கேட்க வேண்டும். மக்களைத் திருத்த வேண்டும். எல்லாக் காசுக் கணக்கும் சரியாகப் பேண வேண்டும்.

இவை எல்லாம் சில "துளிகளே"! இதைவிட இன்றும் ஒரு தொகை உண்டு. ஒருவர் குருவாக உருவாகும் பயிற்சிக் காலத்தில் அவர் சுமக்கும் சிலுவை மிகவும் பாரமானது. அதை ஏன் அவர் சுமக்க வேண்டும் தனக்காகவா? இல்லை! தன் மக்களுக்காக. தன் உறவுக்காக தன் ஊருக்காக சமூகத்திற்காக, நாட்டுக்காக, ஏன் முழு மனித குல மீட்புக்காகவே. இது எல்லாம் எங்கே நமக்குப் புரியப் போகின்றது?

சுவாமி விவேகானந்தரின் ஒரு நல்ல வசனத்தை நினைவில் நிறுத்துவது நல்லது. "உலகிற்கு நன்மை செய்யப் பிறந்த நீ, நன்மை செய்யாது விட்டாலும், தீமையாவது செய்யாதிரு". குருக்கள், துறவிகளிடம் குறைகண்டு பிடிப்பதை விட்டு விட்டு முதலில் நாம் எம்மிலுள்ள குறைகளைக் கண்டு களைந்தெறிவோம். கற்பனைகளுக்கு உருக்கொடுப்பதை விட்டுவிட்டு உண்மைகளுக்கு உயிர் கொடுக்க முனைவோம். விடியல் காண எண்ணும் குருக்களுக்கு உறுதுணையாய் நின்று இயேசு எதிர்பார்த்த இறையரசு மலர உழைப்போம். இது ஒரு மாபெரும் பணி, நீண்ட காலம் எடுக்கும் பணி. ஒரு சிறிய குருக்களின் கூட்டம் தனியே நின்று இதைச் சாதிக்க முடியாது. எம் கரமும் இணைய வேண்டும். எல்லோரும் மனிதரே! குறை நிறைவுகளுடன் எல்லோரையும் ஏற்றுக் கொள்வோம். எனது உதாரண வாழ்வு தவறச் செல்லும் ஒரு குருவைக் கூட மாற்றக்கூடியது. முயல்வோமா?

இவற்றைச் செய்யத் தொடங்குகையிலேயே. எனக்குக் கிடைக்கும் வெகுமதி என்ன? சிலுவை தான்! எனினும் அதுதானே கிறிஸ்தவனின் வெற்றிச் சின்னம். நாம் சாதிக்க வேண்டியது நிறைய உண்டு! போக வேண்டியது நீண்ட தூரம். நிறைவேற்ற வேண்டாமா? இயேசு தன்னுடைய சிலுவையை மட்டுமல்லாது எம் எல்லோருடைய சிலுவைகளையும் அல்லவா சேர்த்துச் சுமக்க வேண்டியுள்ளது. அந்த வேதனை, துன்பத்தைப் பார்த்துக் கொண்டும் நான் சும்மா இருப்பது முறையா? எனது சிலுவையை இயேசுவிடமிருந்து வாங்கி அவரின் துன்பத்தில் ஒரு சிறிய பகுதியையாவது அவரது தோளிலிருந்து குறைப்போமா? வேதனையைக் குறைப்போமா? என்னுடைய சிலுவை எனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றது. அதைத் தூக்கி இயேசுவுக்குச் சில கணங்களாவது ஓய்வு கொடுக்க வேண்டாமா? நான் தயார்! எங்கே நீங்களும் தயாரா?....

---

மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

# புனிதரின் பாதையில்

## புனித யோன் பாப்டிஸ்ட் டிலாசால் (கி.பி. 1651 – 1719)

**சித்திரை 07**

" காலத்திற்கேற்ற கல்விமுறைத்தந்தை" என்று அழைக்கப்படும் இவர் பிரான்சில் ரீம்ஸ் நகரில் நகர மன்ற உறுப்பினர் மகனாய்த்தோன்றியவர். 16ம் வயதிலேயே ரீம்ஸ் நகரின் பேராலயத்தில் பெரிய பொறுப்பு வகித்தவர். 27 வயதில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தாழ்ச்சியிலும், பக்தி முயற்சிகளிலும் சிறந்து விளங்கினார். அதே வேளையில் ஏழைகளின் மீது கொண்ட பரிவு நாளுக்கு நாள் இவரிடம் மிகுந்து வந்தது. இதுவே இவரது வாழ்நாளெல்லாம் ஏழை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காகத் தம்மை முற்றிலும் கையளிக்க உதவியாக இருந்தது.

இவர்தம் நாட்களில் ஜான்சனிசம் என்ற நச்சுக்கலந்த கொள்கை பிரான்ஸ் நாட்டை அதிரவைத்தது. பற்றாக்குறைக்கு அண்டை நாடுகளுடன் ஓயாத போர். இவையெல்லாம் நாட்டில் கடுமையான பஞ்சத்தையும், பல்வேறு இன்னல்களையும் கொண்டுவந்துவிட்டன. மேலும் , கல்வியறிவு அறவே இல்லாது போயிற்று. இத்தகைய சூழ்நிலையில் தான் ரீம்ஸ் நகரில் ஏழைமாணவர்களுக்கு இவர் இரு பள்ளிக்கூடங்கள் நிறுவினார். நாள்தோறும் தவறாது ஆசிரியர்களிடம் கற்றுக்கொடுக்கும் யுக்திகள் பற்றி கலந்துரையாடுவார். அவர்களை எல்லா வழிகளிலும் ஊக்குவித்தார். தங்க இல்லம் அளித்து தம்மோடு உணவருந்த வைத்தார்.

இந்த புதிய முறையை கையாண்டதன் பயனாகத்தான் நாளடைவில் " கிறிஸ்தவ பள்ளிகளின் சகோதரர்கள்" என்ற நிறுவனத்தை தோற்றுவித்தார். 1680 ல் தொடங்கப்பட்ட நிறுவனம் முற்றிலும் தேவ பேணுதலின் அடிப்படையில் அமைய வேண்டும் என்றே திட்டம் தீட்டினார். பல நெருக்கடிகளையும், இன்னல் இடையூறுகளையும் சந்தித்தபின்னர் நாளடைவில் அது உலகளாவிய நிறுவனமாக காட்சியளிக்கத்தொடங்கியது.

காலத்தின் அறிகுறிகளுக்கேற்ற முறையில் தொடக்க, மேல் நிலைக்கல்வி புகட்டுவதில் பல புதிய யுக்திகளை கையாண்டு வெற்றிகண்டதால் இன்று இவரை "கல்வித் தந்தை" என்று உலகம் போற்றுகின்றது. இந்த நிறுவனத்தின் அனைவருமே சகோதரர்களாகவே இருக்கவேண்டும். குருக்களுக்கு இடமில்லை. சகோதரர்கள் அனைவரும் இளைஞர்களின் ஞானக்கண்களை திறந்து விடுவதற்கென முற்றிலும் தங்களையே இறைவனுக்கு அர்ப்பணித்தவர்கள் என்ற குறிக்கோளோடு இன்று வரை



இந்த துறவற சபை இயங்கிவருகின்றது. தாய்மொழியில் மட்டுமே கற்றுக்கொடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்தினார். ஆசிரியப் பயிற்சிப்பள்ளிகளையும் தோற்றுவித்தார். இத்தகைய முயற்சிகளுக்கு ஒரே குறிக்கோள்தான் என்பது குறிப்பிடத்தக்கது. " கல்விப்பணியின் மூலம் நேர்மையான கிறிஸ்தவர்களை உருவாக்குதல்" இந்தப்பணிகளெல்லாம் முடிவுக்கு வந்த வேளையில் முழுப்பொறுப்பையும் சபைசகோதரர் ஒருவரிடம் ஒப்படைத்தார். 1719 ம் ஆண்டு அவரைத்தாக்கிய ஆஸ்த்துமா உச்சநிலையை அடைந்தது. பற்றாக்குறைக்கு மூட்டுவலியும் சேர்ந்துகொண்டது. இருப்பினும் இதுவரை கடைப்பிடித்துவந்த கடுமையான தவமுயற்சிகளை அவர்விட்டுவிடவில்லை. இந்த வேளையில் ஒரு சிறு விபத்தில் இவர் சிக்கிக்கொண்டது இவரது வேதனைகளை பலமடங்காக்கியது. இந்தச்சூழலில் ஏப்ரல் 7ல் பெரிய வெள்ளிக்கிழமையன்று இறைவன் இவரது தூய ஆன்மாவை ஏற்றுக்கொண்டார். கி.பி 1950 ல் புனித பட்டம் கொடுத்த திருச்சபை இவரை " ஆசிரியர்களின் பாதுகாவலர் " என்று அறிவித்தார்.

---

9ம் பக்க தொடர்ச்சி .........

## நெருப்பை நெருப்பால்.......

ஒருவிதத்தில் பொறுப்பாளிகள் என்று சொன்னால் ஏற்பதற்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். நெருப்பை நெருப்பால் அணைக்க முடியாது. அம்புகளை எய்துவிட்டு அன்பை எதிர்பார்க்க முடியாது கற்களை எறிந்து விட்டு பூமாலைகளை எதிர்பார்க்க முடியாது. கடவுள் கத்தியினால் அல்ல, வார்த்தையினால் செயலால் மாற்றங்களைக் கொண்டு வந்தார் என்று ஜான் ∴ பார்க்ஸ் என்பவர் சொல்கிறார். நாமும் நமது சொல்லால், செயலால் வன்மமற்ற சமூகத்தைச் சமைப்போம். அன்பை பரிமாறிக் கொள்வோம். நாம் சொல்லிலும் செயலிலும் அன்பும் இரக்கமும் மிக்கவர்களாக மாறும் போது நம்மோடு இருப்பவர்களும் அவ்வாறு மாறக் கூடும்.

ஆனால் உண்மை என்ன தெரியுமா? ஜெ.கிருஷ்ணமூர்த்தி என்ற சிந்தனையாளர் காந்திஜி கொல்லப்பட்டது பற்றிக் குறிப்பிடுகின்ற போது, "தனிப்பட்ட ஒருவரில் வெளிப்பட்ட இந்த வன்மம், ஒட்டு மொத்த சமூக வன்மத்தின் வெளிப்பாடு" என்று சொல்லியிருக்கிறார். இதற்கு விளக்கமளிக்கும் அறிஞர்கள், "நாம் அனைவருமே வன்மத்தை மனத்தில் தேக்கி வைத்திருக்கிறோம். இந்த வன்மம் இன்னொருவர் மூலம் வெளிப்பட முடியும்" என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

6ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. பெ. பாலசுந்தரம்

4ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி. பா. மதலேனாப்பிள்ளை

(இத்திக்கண்டல், அடம்பன்)

மலர்வு 15-03-1941
உதிர்வு 04-11-2004

மலர்வு 22-08-1946
உதிர்வு 10-04-2006

*"அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர்"*

வாழ்க்கை என்ற பந்தயத்தில் வாழ்வு என்ற அருட்கொடையைப் பெற்று திருமணம் என்ற அருட்சாதனத்தில் ஓர் மனமாய் இணைந்து கொண்டு பிள்ளை என்ற பாக்கியத்தை இகமதிலே ஈன்றெடுத்து பாசம் என்ற விதையை தூவி இன்புற இனிதாய் வளர்த்தெடுத்து 'நிலைவாழ்வு' என்ற அழைப்பிலே பிரிவுத்துயரை எம் அனைவருக்கும் அளித்துவிட்டு இருவரும் இன்முகத்துடன் எம் விழிகளை நனைக்க வைத்துக்கொண்டு இறைபதம் சென்றதேனோ? நீங்கள் இருவரும் எங்களிற்காக தொடர்ந்து வேண்டிக் கொண்டிருங்கள்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தகவல்: பா. றொசான் (மகன்) - இத்திக்கண்டல்

---

50ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 02 1918



உதிர்வு 02 04 1960

## அமரர் பஸ்ரியான் செபமாலை பறுனாந்து

**(சமூக சேவையாளர், சம்மாட்டி )**

**(பேசாலை 8ம் வட்டாரம்)**

இவர் திருமதி. செபமாலை றோஸ் பீரிஸ் என்பவரின் அன்பு கணவரும், திரு செபமாலை சந்தியோகு பறுனாந்து, திரு செபமாலை விக்ரர், ஜெயபாலன் பறுனாந்து, திரு செபமாலை ஜேர்மன் பறுனாந்து, திருமதி. அம்புரோஸ் ஜேறூட் லீலா பறுனாந்து, மற்றும் திருமதி. பிரான்சிஸ் மேரி திரேசா பறுனாந்து ஆகியோரின் தந்தையுமாவார்.

இவர் 1950 - 1960 வரையும் வாழ்ந்த பேசாலை சம்மாட்டிமார்களுள் பெயர் சொல்லக் கூடியவர் இவர் ஒரு சமூக சேவையாளர். பேசாலையின் ரான்ஸ்போட் நிறுவனத்தின் ஸ்தாபகரும் பங்காளியும் ஆவார்.

தகவல்: மனைவி, மக்கள்

---

1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 01 1946



உதிர்வு 10 04 2009

## திரு. அந்தோனி சூசைரட்ணம் சிராய்வா

**(சென். யூட்ஸ்வீதி, பேசாலை.)**

*"இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய்"*

அப்பா என்றழைத்தால் உடனே வந்து என்னவென்று கேட்கும் அப்பா. அப்பா அப்பா என்று ஆயிரம் முறை அழைத்தாலும் உங்களைக் காணவில்லையே. பல ஆண்டுகள் கடந்தாலும் உங்களை எம்மால் மறக்க முடியாதப்பா. பாசத்தோடு பெற்று, பண்போடு வளர்த்தும் நேசத்தோடு வாழ்ந்த காலங்களை மறக்கமுடியாதப்பா. கர்த்தர் மறைந்த நாளதனில் நீங்களும் மறைந்ததேனோ! அவரின் மடியில் நீங்களும் தூங்கிவிட்டீர்களோ! அம்மாவோ உங்களை ஒரு கணமும் மறக்கவில்லை. அப்பா எங்களுக்காக இறைவனிடம் மன்றாடுங்கள். அன்பான யேசுவே அன்று கல்வாரியில் வலப்பக்கம் சிலுவையில் அறைந்தவனுக்கு கூறிய வார்த்தையே எம் அப்பாவுக்கும் கூறி அன்புடன் அணைத்துக்கொள்ளும் **நீங்கா நினைவுடன்**

அன்பு மனைவி, பிள்ளைகள், அம்மா, பேத்தி, மருமகன், சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

---

50ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி. எஸ். அக்கினேஸ் பீரிஸ்

34ம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. ஜோசப் சிமியோன்லெம்பேட்

(தலைமன்னார் மேற்கு)

மலர்வு 10.04.1928
உதிர்வு 15.04.1960

மலர்வு 10.04.1922
உதிர்வு 20.04.1976


அன்பிற்கு இலக்கணமாகவும் ஆதரவிற்கு பிறப்பிடமாகவும் உறவிற்கும் ஓர் உயர்ந்த பாலமாகவும், ஒற்றுமையின் சிகரமாகவும் எல்லாவற்றிற்கும் மேலாக எங்களுக்கு ஓர் பாசம் மிகுந்த சிறந்த பெற்றோராய் திகழ்ந்து எம்மவர்கட்கு நல் வாழ்வைத் தந்த எம் நெஞ்சத்தின் தங்க விளக்குகளே நீங்கள் எம்மை விட்டு மறைந்து ஆண்டுகள் பல கடந்து போனாலும் உங்களது அன்பு நிறைந்த ஆசைமுகங்கள் எம் மனதைவிட்டு நீங்காது என்றும் நிலைத்து நிற்கும்

பிரிவில் துயருறும்
அன்புள்ள பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.

---

2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 02 1929



உதிர்வு 15 04 2008

## அமரர். குமாரசிங்கம்

*(பாலைக்குழி, அடம்பன். )*

*("உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் உயிர் வாழ்வான்")*

உடலால் எம்மைப் பிரிந்தாலும்,
உள்ளத்தாலும், உணர்வுகளாலும்
என்றுமே எம்முடன் வாழ்கிறீர்கள்.
கண்களில் கண்ணீர் முத்துக்கள் உடன் கலங்கி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 04 1940



உதிர்வு 23 03 2008

## அமரர். சந்தான் கத்தறின்

*"சீவியத்தில் உம்மை நேசித்தோம்
மரணத்திலும் உம்மை மறவோம்"*

இல்லறத்தை நல்லறமாக்கி எமக்கெல்லாம்
வழிகாட்டிய குடும்பத்தின் குலவிளக்கே
பிள்ளைகளின் ஒளி விளக்கே மருமக்களின் மாணிக்கமே
பேரப்பிள்ளைகளின் பேரொளியே
உன் அன்பைச் சொல்ல வார்த்தைகளே இல்லை
ஆண்டுகள் இரண்டு ஓடினாலும் மறக்க முடியுமா? உங்கள் மகத்துவத்தை ஏங்கித் தவிக்கின்றோம். உங்கள் ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனை மன்றாடுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

தகவல்: மகன் ச. அமலதாஸன்
உயிர்த்தராசன்குளம் முருங்கன்.

---

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 10 1958



உதிர்வு 02 04 2003

## சி. எயூஜேனியஸ் பயஸ் குலாஸ்

ஆண்டு ஏழு சென்றாலும்
ஆறிவிடுமா எம் சோகம்
இறைவனோடு இரண்டறக் கலந்த எம் அன்பே
ஈசனிடம் எமக்காய் வரம் வேண்டுங்க அப்பா
தவக்காலம் என்றாலே தவித்திடும் எம்மனது
பாதையாத்திரை என்றவுடன் பதறிவிடுவோம் நாம்
பாதை தெரியாது பரிதவிக்கும் எம்முடன்
பாதையில் பயணிக்க பரமனிடம்
வரம் வேண்டுங்கப்பா

உங்கள் பிரிவால் துயருறும்
அருமை மனைவி, ஆருயிர்பிள்ளைகள்,
அன்புச் சகோதரர், உற்றார், உறவினர்.

---

15ம் பக்க தொடர்ச்சி.... **இறைவனின் குருக்கள் பற்றி...**

இறைவனுக்காக தம்மையே அர்ப்பணிக்கும் எமது குருக்கள் உலகின் ஆசாபாசங்களை துறந்து இறை பாதம் தமது விருப்பு, வெறுப்புகளை அர்ப்பணித்து இறையாட்சிக்காய் உழைத்து வருகின்றனர். வசைமொழிகள் கூறி கையை உயர்த்தும் போது அதன் விளைவாக நாம் தேடி கொள்வது சாபமே "ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவரை நான் கொன்றேன் என்று உன் வாயே உனக்கு எதிராக சான்று சொல்லிவிட்டது" (2சாமு 1:17) இதனால் நீ சாவாய் இவ்வாறான தண்டனைகளை நாம் நம் மீது சுமத்தி கொள்ளாமல் இறைபணியாளர்களில் குறைகளை தொடாமல் அவர்கள் வாழ்வின் தியாகங்களையும், நிறைவையும் அர்ப்பணவாழ்வையும் சற்று சிந்திப்போம். இவற்றை எமது முன் மாதிரியாக கொண்டு வாழ்வை சீர்ப்படுத்தி வாழ்வோம்.

இறைவனால் திருப்பொழிவு செய்யப்பட்ட அனைவருக்காகவும் தினமும் மன்றாடுவோம். இறைவனின் அபிசேகத்தால் அவர்களின் வாழ்வின் பாத்திரம் நிரம்பி வழியவும் எமது நாட்டின் அப்போஸ்தலர் முத்திபேறு பெற்ற ஜோசப்வாஸ் அடிகளின் வாழ்வை குருக்கள் தம்மில் கொண்டு வாழவும் தூய ஆவியின் அபிசேகத்தால் நிறைந்து தமது பணி வாழ்வை தொடர அனுதினம் எமது ஜெபத்தில் வாழும் கடவுளிடம் மன்றாடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.94 எசக்கியேல் 1-8

உங்கள் விடைகளை 15.05.2010க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | ★ | | | | | | 02 |
| | 03 | | | | | | | | 04 | |
| | | | | | 05 | | | | ★ | |
| | | ★ | | 06 | | 07 | | | 08 | |
| | | | | | | | 09 | | | |
| | | | 10 | | | | ★ | 11 | | |
| | | | | | 12 | | | | | 13 |
| | | | ★ | ★ | | | | | 14 | |
| | | | | 15 | | | 16 | | | |
| | 17 | 18 | | | | | | | 19 | |
| 20 | ★ | | | | | 21 | | | | |

### இடமிருந்து வலம்

1. அவர் என்னோடு பேசுகையில் ஆவி என்னுள் ............................ என்னை எழுந்து நிற்கச் செய்தது.
3. அவர் அச் .......................................... என் முன் விரித்தார்.
5. உன் .................................. அவர்கள் நெற்றிகளுக்கு எதிராகவும் கடுமையாக்கியுள்ளேன்.
9. ......................................இருப்போர் கொள்ளை நோயால் மடிவர்
11. இஸ்ரயேல் வீட்டினரின் தெய்வ உருவங்களும் ..........................ச் சுற்றிலும் செதுக்கப்பட்டிருந்தன.
16. இஸ்ரயேல் மலைகளே! தலைவராகிய ஆண்டவரின் ............................க் கேளுங்கள் (குழம்பியுள்ளது)
18. அதற்கு நேராக உன் ..................................வைத்துக் கொள் (2வது எழுத்து இறுதியாக உள்ளது)
21. அவை ஒவ்வொன்றிற்கும் நான்கு முகங்களும் நான்கு ..............................களும் இருந்தன.
15. இஸ்ரயேல் நாட்டை ......................... த் தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார். (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. நான் உற்றுப்பார்க்கையில் வடக்கிலிருந்து ............................ விரைந்து வந்தது.
2. அது பெருவெள்ளத்தின் ...................... போன்றும் எல்லாம் வல்லவரின் குரலொலி போன்றும் இருந்தது.
3. அவர்களது இரத்தப்பழியை உன் மேலேயே ..............................
5. அந்நாள் ...................................... விட்டது.
6. தங்கள் வெள்ளியை வீதிகளில் ..............................(2வது எழுத்து 1வது எழுத்துக்கு மேலே உள்ளது)
7. உன்னைச் சுற்றியுள்ள மக்களினங்களுக்கு அது பழிச் ................ வசைமொழியும், எச்சரிக்கையும், திகிலுமாய் இருக்கும்.
12. நானும் வாயைத் ................................. அவர் அச்சுருளேட்டை எனக்குத் தின்னக் கொடுத்தார்.
13. அவர்கள் கிழக்கே பார்த்துக் ........................ த் தொழுது கொண்டிருந்தனர்.

### வலமிருந்து இடம்

2. அவற்றின் ......................................... மேல்நோக்கி விரிந்திருந்தன
4. இஸ்ரயேல் வீட்டாரிடம் போய் என்.......................................... அவர்களுக்கு எடுத்துக்கூறு.
5. எம் மக்கள் வேற்றினத்தாரை விடக் கேடு கெட்டவர்களாய் என் நீதி .................................. எதிர்த்தார்கள்.
8. அக்கூட்டத்தினர் அனைவரையும் பற்றிய இக் .................................. மாறாது.
12. அவர் என்னை நோக்கி "பார்த்தாயா மானிடா! மீண்டும் .................................. வா" (3வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே உள்ளது)
13. கொள்ளை நோயும் இரத்தக் .......................................... உங்களிடையே உண்டாகும்.
14. தண்ணீரையும் அளவு பார்த்தே.......................... வேண்டும்
19. அருகில் இருப்போர் ............................................ வீழ்வர்
21. அது பெருவெள்ளத்தின் ........................................ போன்றும் எல்லாம் வல்லவரின் குரலொலி போன்றும் இருந்தது.

### கீழிருந்து மேல்

7. அவர்கள் செவிசாய்த்தாலும் சாய்க்காவிட்டாலும் நீ என் .................. அவர்களுக்கு எடுத்துக்கூறு (இறுதி இரு எழுத்துக்கள் மாறியுள்ளன)
10. எனவே அவற்றை அவர்களுக்குத் தீட்டான ............. மாறச் செய்தேன்.
17. அவர் என்னை நோக்கி "மானிடா எழுந்து நில்; உன்னோடு ......................................" என்றார்.
19 ஆண்டவரின் ............................... எனக்கு அருளப்பட்டது.
18.பின்னர் அவர் என்னை.......... வாயிலுக்குக் கொண்டு சென்றார்.
20. திகில் ................................ மூடிக் கொள்ளும்
21. என் கண்களில் உனக்கு ....................... இராது.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 12 1991



உதிர்வு 23 04 2009

### அமரர் சோபாசயந்தினி செபஸ்ரியான்

(வண்ணாகுளம், ஆட்காட்டிவெளி அடம்பன்)

ஓராண்டு உதிர்ந்ததோ உன் முகத்தை பிரிந்து
ஒரு பொழுதும் மறவாது அழுகின்றோம் எந்நாளும்
கண்ணே எம் கண்மணியே - எம் முன்னே வந்து
ஒரு முத்தம் தாராயோ!

உன்னை காப்பாற்ற - வன்னி ஊரெல்லாம் அலைந்தோமே
ஒளிந்து ஒளித்து வைத்து உறக்க மின்றி இருந்தோமே!
இறுக்கமான பாதை வழி - உன்னை
அழைத்துவர துடித்தோமே
அத்தனை முயற்சிகளும் கைகூடிய நிலையாகி - நாம்
வணங்கும் ஆலயத்தில் வந்து விழுந்த செல்லாலே
செல்லக்கிளியே - நீ
சென்றாயோ எம்மை விட்டு

சிரித்த முகம் மாறவில்லை சிறுசத்தம் போடவில்லை
புன்னகை பூமுகமே - உன்னை
போட்ட உடுப்புடனே புதைத்து விட்டு வந்தோமே

பாடகர் குழாமினிலே - நீ குயிலாகப் பாடும்போது
குதுகலித்த எம் மனது - இப்போ
கோவிலை நாடக் கூட கூசி நிற்குதம்மா

காலங்கள் மறைந்தாலும் - இவ் மனக்காயம் மாறுமோ
கண்ணீரோடு வேண்டுகின்றோம்!
இறைவா நித்திய இளைப்பாற்றியை நிலையாக
அளித்திடுவீர்

**பிரிவினில் ஆறாது துடித்திடும்**
அம்மா, அப்பா, அக்கா, தம்பி, உற்றார், உறவினர்,
இறைபணியாளர்கள்.

# இறைவனின் குருக்கள் பற்றி நாம் கொண்டிருக்க வேண்டிய மனநிலைகள்

**ஆர். ஜெசிந்தா, நாவலப்பிட்டி, கிறின்வூட்.**

இறைவனால் தேர்ந்தெடுத்து திருப்பொழிவு செய்யப்பட்டவர்களுக்கு இறைவன் என்றும் தம் ஆதரவை வழங்குகின்றார். "நான் தேர்ந்தெடுத்த அவர், அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகின்றது அவருள் என் ஆவி தங்கும்படி செய்வேன்" (எசாயா 42:1) என ஆண்டவர் நம் ஊழியர்களை குறித்து கூறுகின்றார்.

ஆம் இறைவனால் திருப்பொழிவு செய்யப்பட்ட எமது பாப்பரசர், ஆயர், குருக்கள், துறவறத்தவர், இறை ஊழியர் அனைவரையும் இறைவன் "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன், நீ பிறக்கும் முன்பே உன்னை திருநிலைப்படுத்தினேன்" (எரேமியா 1:5) என பணிக்கு அழைத்துள்ளார். அவர்கள் சில வேளை மனித பலவீனத்தால் தவறுகள் செய்யநேரிடலாம் அல்லது நாம் எதிர்பார்த்துச் செல்லும் தேவையை நிறைவேற்றாமல் போகலாம். அவ்வாறான சந்தர்ப்பத்தின் போது நாம் அவர்களை எமது வார்த்தைகள், செயல்களால் மனம் நோகச் செய்யவிளைகிறோம். "அவர் ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பெற்றவர் என் தலைவருக்கு எதிராக நான் கை ஓங்க கூடாது" (சாமு 24:10) என விவிலியம் சொல்கின்றது. அவர்களும் மனிதர்களே. அவர்களுக்கும் உணர்வுச் சிக்கல்கள் உண்டு. அவர்கள் அவையனைத்தையும் இறைவன் சமூகத்தில் ஒப்புவித்து இறைவனுக்காக வாழமுயல்கின்றனர். உலகின் சிற்றின்பத்தை வெறுத்து வாழ்ந்தாலும் ஏதோ சில சந்தர்ப்பத்தில் மனித பலவீனத்தால் சிலர் தவறிவிடுவதை காண்கிறோம். இவ்வாறான நிலையில் அவர்களை குற்றம் சாற்றவும் அவர்களை தீர்ப்பிடவும் நாங்கள் யார்? நாம் ஓர் நாளும் திருப்பொழிவு செய்யப்பட்டவர்களுக்கு எதிராக தீர்ப்பிடவும், கைவைக்கவும் முடியாது. "ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவர் மேல் கை வைத்துவிட்டு குற்றமற்று இருப்பவன் யார்" (1சாமு 26:9)

இறைவனால் திருப்பொழிவு செய்யப்பட்ட அரசர்கள் சவுல், தாவீது இவர்கள் தவறிழைத்தவர்களே. தாவீதுக்கு இறைவனின் ஆசீர் மிகுதியாய் அளிக்கப்பட்டிருந்தது. சாலமோனுக்கு மிகுதியான மெய் ஞானம் இறைவனால் அளிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் அவர்கள் தவறிழைத்தார்கள். "ஏன் நீ ஆண்டவரின் வார்த்தையை புறக்ணித்து அவர் தம் பார்வையில் தீயது செய்தாய்" (2சாமு 12:9) என தாவீது வினவப்பட்டார். தாவீது அரசருக்கு அனைத்து செல்வமும் கொடுக்கப்பட்டிருந்த போதும் ஊனியல்பின் இச்சையால் தீயது செய்தார்

தொடர்ச்சி 19ம் பக்கம் -

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 92ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
**செ. ஜெறோம் சிறாந்தன்,**
பள்ளங்கோட்டை,
நானாட்டான்.

**இரண்டாம் பரிசு:**
**கெலஸ்தீன் கனிஸ்ரன்,**
RoomT-57 புனர்வாழ்வுமையம்,
வ/ஓமந்தை மத்தியகல்லூரி,
ஓமந்தை, வவுனியா.

**மூன்றாம் பரிசு:**
**அ. றொனிக்கா குரூஸ்,**
அரிப்பு
சிலாவத்துறை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 74 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 69 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 92ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. அ. கரோலினி கீர்த்திகா, 41/1, புனித மரியாள் வீதி, திருகோணமலை
2. திருமதி மேரி ஜஸ்மின், இளவாலை மேற்கு, யாழ்ப்பாணம்
3. அ. பாக்கியநாதன் குரூஸ், 297 3ம் கட்டை, உப்புவெளி, திருகோணமலை
4. ஜோ. பிரியதர்சினி, கங்காணிதீவு, நானாட்டான்.
5. பி.கஸ்தூரி 123,2/1, புதுச்செட்டித்தெரு, கொழும்பு 13.
6. அ. பிரியா, கற்கிடந்தகுளம், முருங்கன்.
7. யோ. திலக்சன், 8ம் வட்டாரம், பேசாலை
8. ச.மேரிஜெரினா, கங்காணிதீவு, நானாட்டான்.
9. நே. டயானா, பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.
10. வ. லக்கி, மணற்குளம், உயிலங்குளம்.
11. ச.சந்தான்பிள்ளை, நொச்சிக்குளம், உயிலங்குளம்
12. றோ. டயானா கூஞ்ஞ, தலைமன்னார், J.R.S.வீட்டுத்திட்டம்
13. அகுஸ்தீன் இசைக்கியல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
14. ம.ஜொய்னா, வைத்தியசாலை வீதி, இல 03, மன்னார்
15. நா. சலோமி தரம் 10 B மன்/ நானாட்டான் ம.வி. நானாட்டான்.
16. நே. அநோஜா நிக்கலின், சிறுக்கண்டல், முருங்கன்
17. யே. திரேசா குரூஸ், சேப்காவீதி, தாழ்வுபாடு, மன்னார்.
18. செ. பிருந்தாவணி குலோஜினி மொறாயஸ், 1ம் வட்டாரம், வங்காலை
19. ஜெ. பிரஷ்சா, வேப்பங்குளம், வவுனியா.
20. செ. றோய் லக்சன், பள்ளங்கோட்டை, நானாட்டான்.
21. பி.ஜே. சிந்துஜா, எழுத்தூர், மன்னார்.
22. செ. மேரி ஜெசில்டா, அமலஅன்னை அன்பகம், கீரி, மன்னார்.
23. ச.கிஷோஷாளினி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
24. மேரி ஜென்சிக்கா லோறன்ஸ், சங்காணிறோட், அச்சுவேலி, யாழ்.
25. செ. ஆன் லக்சிக்கா, பள்ளங்கோட்டை, நானாட்டான்.
26. ஜே. அனோமிக்கா டயஸ், தாழ்வுபாடு, மன்னார்.
27. எம்.பி.ஆர் கிறிஸ்தோப்பர், 18 கோவில்வீதி , யாழ்ப்பாணம்.
28. செ. ஜோண் அலஸ்ரீன், பள்ளங்கோட்டை, நானாட்டான்.
29. நோ. ஆன் யூளியானி றோச், புனித லூசியா ம.வி. பள்ளிமுனை
30. சி. நோயல் கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
31. எஸ். நிசாந்தினி கூஞ்ஞ, 8ம் வட்டாரம், பேசாலை.
32. க. செபஸ்தியான் பிள்ளை, பள்ளங்கோட்டை, நானாட்டான்.
33. பூவதி தாமோதரம்பிள்ளை, தபாற்கந்தோர் வீதி, மன்னார்.
34. மேரி கொன்செப்ரா, மடுக்கோவில், மடு.
35. குணமணி சேவியர், பெரியகடை மன்னார்.
36. ம. அனஸ்ரா இவானி, பிள்ளையார் பிட்டி, ஆண்டாங்குளம்
37. திருமதி. எம்.எம்.ஜே. பசில் 41/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
38. செ. மேரிறீற்றா, பள்ளங்கோட்டை, நானாட்டான்
39. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
40. எப்.வி. குணபாலன், மணற்குளம், உயிலங்குளம்.
41. ஜே. ஜஸ்மீகன், ஆலங்குளம், வட்டக்கண்டல், மன்னார்.
42. றொ. டிவ்னன் கூஞ்ஞ, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
43. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதாவீதி, சின்னக்கடை, மன்னார்.
44. டெபோறா மோகன்றாஜ், 'ரானிஸ்ரன்', தபால்கந்தோர் வீதி, மன்னார்
45. றொ. டினுஷன், தலைமன்னார் J.R.S. வீட்டுத்திட்டம்,
46. செ. டெல்றின் சுவிற்றிக்கா, பள்ளங்கோட்டை, நானாட்டான்.
47. கே. சேமா (ரம்யா) இல. 80, மடுக்கரை, நானாட்டான்.
48. அருட்சகோதரி மேரி பற்றிசியா ஆலயவீதி, தோட்டவெளி.
49. நா. பியூலா இல. 69, மடுக்கரை, நானாட்டான்.
50. ச. செலஸ்ரீனா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 92 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| து[1] | ன் | ப | த் | தை | து | த் | கு | வ | ணி | அ[2] |
| க் | அ[3] | க | றை | ❋ | ந் | த | ற | சி[4] | ய் | லை |
| க | சை | ட் | ரா | தி[5] | ர் | த[6] | வ | றி | மா | மோ |
| ம் | னு | வ | எ[7] | கி | ம | ண் | தி | ய | ண | து |
| கு[8] | ர | ல் | வ | லு | அ[9] | டி | த் | து | ண் | ம் |
| ண | யா[10] | ம் | ரு | க் | றி | க் | டு | ந் | தி[11] | க |
| ப் | ல் | ம் | ம் | கு | வு | கு | ப[12] | லை | சி | க் |
| ப | ச | யு | யி | உ[13] | ரை | ம் | ❋ | அ[14] | ச் | ர் |
| டு | ச் | லி | ❋ | ம[15] | றை | ந் | து | ந் | ர் | சே[16] |
| த் | ய் | ம[17] | தி | ல் | க | ள் | வா | ரி | அ[18] | ❋ |
| த | மே[19] | ய் | ச் | ச | ல் | ❋ | த | த் | ர | உ[20] |


**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.93ற்கான முடிவுகளை 2010ம் ஆண்டு மே மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

# சிறுவர் பொழிவு

## பாலகரே! உங்கள் கைவண்ணத்தை இங்கே காட்டுங்கள்



இயேசுவின் படத்தின் பின்புறமுள்ள
கண்ணாடி யன்னலின் பகுதிகளையும்
உங்கள் போன்ற பாலகரின் படங்களையும்
உங்கள் கலைநயத்திற்கு கேற்ப
நிறந்தீட்டி மகிழுங்கள்

## கொஞ்சம் சிரிங்க

மகன்: வயதாகி விட்டதால் தான் காரை மெதுவாக ஓட்டுகிறீர்களா?
தந்தை: ஆமாம், காருக்கு

தாய்: வயிற்று வலி என்றால் வயிற்றில் ஒன்றும் இல்லை என்று அர்த்தம்
மகன்: அப்படியானால் ஏன் வாத்தியார் அடிக்கடி தலைவலி என்கிறார். அவருக்கு தலையில் ஒன்றும் இல்லை என்று அர்த்தமா அம்மா?
ஆசிரியர்: நாய் படம் வரையச் சொன்னால் வெறும் பேப்பரை காட்டுகிறாயே!
மாணவன்: வரைந்தேன் சார் நீங்கள் தடியை எடுத்து வரவும் பயந்து ஓடி விட்டது.

க. சப்தஸ்வரன்
டொன்பொஸ்கோ குருமடம் தங்கொட்டுவ, நீர்கொழும்பு

ஒருவன்: திரும்பத் திரும்ப என் வீட்ல திருடு போது சார்!
இன்ஸ்பெக்டர்: அப்ப திரும்பாம ஒரே பக்கமாய் இருந்துக்க வேண்டியது தானே
சின்ன பையன்: ஏம்பா ஆவி, பேய், பிசாசு, எல்லாம் பொய் தானே!
தந்தை: ஆமாம் கல்யாணம் வரைக்கும்!

சா. கிளின்ரன் மொறாய்ஸ், தரம்11, முத்தரிப்புத்துறை

## வாழ்வை உயர்த்தும் சிந்தனைகள்

- கஷ்டங்களும் குழப்பங்களும் சூழும் போது அமைதியாக இருந்து அவற்றின் பொருளை அறிய முற்படுங்கள்.
- இறைவனுடைய படைப்பில் எந்தத் தவறும் நடக்க வாய்ப்பில்லை எனவே எதையும் குறைகூறாமல் இருங்கள்.
- தோல்விகளினால் ஏற்படும் தாக்கத்திலிருந்து விடுபட்டு முன்னேற முயற்சி செய்யுங்கள்.
- பழைய தோல்விகளின் நினைவுகளை அறவே மனதிலிருந்து அழித்து விடுங்கள்.
- உற்சாகமுள்ள நல்ல கருத்துக்களைப் பேசும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

சி. கொலஸ்ரிக்கா- தரம் 11, அச்சங்குளம், நானாட்டான்.

# கவிதைப் பூக்கள்

## பிறந்தநாள்

நீ
நிறுத்துப் பார்
சேகரித்ததில் அதிகம்
பாவமா? புண்ணியமா?
அந்த அளவீட்டிற்கே
இந்த நாள்

பணமுடையோர்க்கு
நீயளிக்கும் விருந்து
வீணான செலவு
ஏழைக்கு அளிப்பது
இறையின் வரவு
இப்போது சொல்
எவரை
அழைக்கப்போகிறாய்

இன்றாவது
இதயத்தை கேள்
தேனீ போலவோ
என்
தேகம் உழைத்ததா?

கேக்கினை வெட்டும்போது
பாவங்களையும் வெட்டிவிடு

பிறந்த நாளுக்கு
பெருங்கூட்டம் சேர்த்தாய்
இறக்கும் நாளுக்கு
எத்தனை
கூட்டம் சேர்த்திருக்கிறாய்

எள்ளளவேனும்
இன்னொருவருக்காய் வாழ்
உன் பிறந்த தினம்
உலகம் கொண்டாடும்
அதுவரை...
நீயே கொண்டாடு

- யோ. புரட்சி

## மனிதா உன்வாழ்வில் !



பணிவாய் இரு பயந்துவிடாதே
அமைதியாய் இரு அடங்கிவிடாதே
தோழனாய் இரு தோற்றுவிடாதே
அன்பனாய் இரு அடிமையாகாதே
உறவினனாய் இரு உபத்திரவமாகாதே
அறிவாளனாய் இரு அதிகாரம் காட்டாதே
பொறுமையாய் இரு பொம்மையாகாதே
அழகனாய் இரு ஆணவப்படாதே
பரிசுத்தனாய் இரு பாவியாகாதே – மனிதா
மனிதனாய் இரு மாண்பு பெறுவாய் !!!

## ஆணிந்திடு மனமே



சாதிக்க துடிக்கும் நெஞ்சினிலே
ஆயிரமாயிரம் போராட்டங்கள் - அவை
உள்ளத்தின் ஆழத்தில்
உறுதிபெறும் போது
சோதனைகள் பக்கமில்லை
சாதனைகள் தூரமில்லை
இறை ஒளியினிலே
நெஞ்சினில் பயமுமில்லை
வெற்றி உனதருகே தோழா!
இன்னும் கலக்கம் ஏன் ?

N. மேரி ஜெனி இல. 01, சுந்தரபுரம், வவுனியா

# கவிதை நூல் வெளியீடு




பேசாலையைச் சேர்ந்த ஆசிரியர் திரு. து. அமல்ராஜ் றெவல் அவர்கள் விழி தீண்டும் விரல்கள் என்ற பெயரில் தனது கவிதைகளை நூல் உருவில் வெளிக் கொணர்ந்துள்ளார்.- இக்கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த மார்ச் மாதம் 17ம் திகதி பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் இடம்பெற்றது.

பேசாலை ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வன்னி தேர்தல் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.செல்வம் அடைக்கலநாதன் முதன்மை விருந்தினராகவும் பேசாலை பங்குத்தந்தை அருட்பணி. அகஸ்ரீன் புஸ்பராஜா, மடு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. செபஸ்ரியான் சுகந்தி, மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எம். ஏ. துரம், மன்னார் மீன் எழுச்சித்திட்டப் பணிப்பாளர் திரு. ஏ.றொபேட் பீரிஸ், பேசாலை சட்டத்தரணி திரு. எஸ். பிறிமூஸ் சிராய்வா ஆகியோர், சிறப்பு விருந்தினராகவும்

- தொடர்ச்சி 8ம் பக்கம் -







கோமரசன்குளம் கல்வாரி திருத்தலம் நோக்கிய பாத யாத்திரையின் பதிவுகள்







புனித அந்தோனியாரின் அழியா திருப்பண்டம் மன்னாருக்கு எடுத்து வரப்பட்டதன் நிழல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, [illegible] பிரைவேட் லிமிட்டட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.